கோகுலம்

GOKULAM


ஜூன் '95 ரூ. 5.00





கோகுலம்

1995 ஜூன் மாத இதழ்
மலர் : 13 இதழ் : 5






அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். தபால்காரர் சுமந்து வரும் கடித மூட்டையின் அளவைப் பார்க்கும்போதே உங்களுக்கெல்லாம் கோடை விடுமுறை தொடங்கி விட்டது என்பது தெரிகிறது. 'தீபாவளி என்றதும் பட்டாஸ் நினைப்பு வருவது போல், கோடை விடுமுறை என்றதுமே, கோகுலம் கோடை விடுமுறையை முன்னிட்டு நடத்தும் சிறப்புப் போட்டிகளின் நினைப்புத்தான் வருகிறது. எங்கள் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை' என்று ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன. இதே போல் முடிவடைந்த வாண்டுமாமாவின் ரத்தினபுரி ரகசியத்தைப் பாராட்டியும் ஏராளமானோர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

வாண்டுமாமாவின் விறுவிறுப்பான மற்றொரு புதிய சித்திரத் தொடர் இந்த இதழில் ஆரம்பமாகிறது. உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தானே?

முடிவடையும் நிலையில் உள்ள இரண்டாவது சாவி தொடர்கதை இந்த இதழில் ஒரு முக்கியமான திருப்புமுனைக்கு வருகிறது. சந்தீப்பைக் கடத்திப் போக வந்த ராஜா, முற்றிலும் நல்லவனாக மாறுகிறான்! அவன் இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறான் என்பதை அடுத்த இதழில் காணப் போகிறோம்.

கோகுலத்தில் அவ்வப்பொழுது வெளிவரும் திருக்குறள் நாடகங்களை பள்ளி விழாக்களில் நடிக்க ஆசிரியர் அனுமதி தேவை என்று பலர் அடிக்கடி எழுதிக் கேட்கிறார்கள். இந்த நாடகங்களைப் பொறுத்தவரை, கட்டணம் வாங்காத நிகழ்ச்சியாக இருப்பின், அனுமதி தேவை இல்லை. நாடகம் எங்கே நடக்கிறது, என்ன நாடகத்தை எப்பொழுது நடத்துகிறார்கள் என்பதை மட்டும் ஒரு கார்டில் எழுதி அனுப்பி விடுங்கள். அது போதும்.



வெகுவிரைவில் விறுவிறுப்பான புதிய தொடர்கதை ஒன்று ஆரம்பமாக உள்ளது. இது குறித்த அறிவிப்பைக் காண அடுத்த இதழ் வரும் வரை பொறுத்திருங்கள். உங்கள் அபிமான எழுத்தாளர் ஒருவர்தான் எழுதுகிறார் என்பதை மட்டும் இப்பொழுது கூறுகிறேன்.

அன்புடன்,

ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.

கோகுலம்

ஜூன் 1995

இந்த இதழில்.....

* கன்னப்பை இல்லாத குரங்கு உண்டா? - பக்கம் 8



* அம்மாவா தொண தொணப்பு? - பக்கம் 88



இத்தனை நோட்டா? இவ்வளவு புத்தகமா?

ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமை ஏறிக் கொண்டே போவது தொடர்கிறது. காரணங்கள் பல. அதிகக் கல்விக்கு ஏற்ப அதிகமான புத்தகங்கள் என்பதெல்லாம் ஏற்கக்கூடியதாக இல்லை. ஒவ்வொரு நோட்டு அல்லது புத்தகங்களுக்கும் பின்னே ஒரு மரத்தின் அழிவு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. ஒரு பக்கத்தில் மரங்களை வளர்ப்போம் என்ற இயக்கம் நடத்திக் கொண்டு, காகிதத் தேவைக்காக மரங்களையும் மூங்கில் காடுகளையும் அழிப்பது தொடர்கிறது. இரண்டுமே முரண்பாடானவை. புத்தகம் சுமக்கும் தேவையைக் குறையுங்கள். மரங்கள் அல்லது மூங்கில் காடுகளின் அழிவைத் தடுங்கள் என்கிறார்கள் விஞ்ஞானிகள். நமது முன்னோர்கள் எல்லாம் மணலில் குச்சியால் எழுதிக் கற்றார்கள். பிறகு வேப்பங்கொட்டைகளால் எழுத்தை கோக்கும் வழக்கம் வந்தது. அப்புறம் "சிலேட் பலப்பம்". காகிதம் அதிக அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கியதும் "சிலேட் பலப்பம்" விடைபெற்றுக் கொண்டு விட்டது. இன்று குழந்தைகளுக்குப் பிரச்னையாக இருப்பவை புத்தக நோட்டுச் சுமையே என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதைப் பற்றி பள்ளிக் குழந்தைகள் என்ன நினைக்கிறார்கள்....



• ரெண்டு செட் புக்ஸ் இருந்தா நல்லாயிருக்கும் - ஆர். ஹரீஷ்

• எதுக்குத் தொல்லைன்னு எல்லாப் புத்தகத்தையும் எடுத்துப் போட்டுக்கிட்டு கிளம்பிடுவேன் - ஆர். சௌம்யா



பத்மப்ரியா (9-ஆம் வகுப்பு)

இப்போல்லாம் புத்தகப்

எடுத்துக்கிட்டுப் போறது கம்மியாப் போச்சு. 6வது 7வதுலயெல்லாம் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போவோம். ஏன்னா கிளாஸ்ல அன்னிக்கு என்ன நடத்துவாங்கன்னு தெரியாது. நிடீர்னு ரீடர்லேர்ந்து, இல்ல வொர்க் புக்லேருந்து சொல்லித் தருவாங்க. புத்தகம் எடுத்துக்கிட்டுப் போகலேன்னா கிளாஸை விட்டு வெளியே அனுப்பிச்சுடுவாங்க.

புத்தகத்தைத் தூக்கிக்கிட்டு போறதுனால முதுகெல்லாம் வலிக்கும். அப்படி எடுத்துக்கிட்டுப் போனாலும்



• நோட்ஸ் எழுதச் சொல்லக் கூடாது. ஹோம் ஒர்க் குடுக்கக் கூடாது - வி. ராமச்சந்திரன்.

கிளாஸ்ல அதையெல்லாம் வைச்சு பாடம் நடத்தறாங்களான்னா அதுவும் இல்லே, பாடம் நடத்தும் போதெல்லாம் புக்கை பார்க்கக் கூடாது. போர்டையும், மிஸ்ஸையும்தான் பார்க்கணும்னு கண்டிப்பா சொல்லித் தடுத்துடறாங்க. அதுக்கு எதுக்கு எல்லா புக்கையும் எடுத்துக்கிட்டுப் போகணும்? இதையெல்லாம் விட கம்ப்யூட்டரோ வேறெதுவோ சொல்லிக் கொடுத்தா நல்லா இருக்கும். நல்லவேளை, புத்தகம் சுமக்கிற மாதிரி பள்ளி இப்ப எனக்கு இல்லே!

வி. ராமச்சந்திரன் (5-ஆம் வகுப்பு)



• ஸைக்கிள் கேரியர்ல வைச்சால் அது எடுத்துக்கிட்டு வருது - கே. பிரீதா.

என்னைக் கேட்டா எனக்கு புக்ஸ் எடுத்துக்கிட்டுப் போறதே புடிக்காது. ஸ்கூல்ல மிஸ்ஸுன்னு யாரும் இருக்கக் கூடாது! இருந்தா அவங்களும் ஜாலியா இருக்கணும். ஒரு கையில டிபன் பாக்ஸ், பேக், முதுகுல புக்ஸ் எடுத் துட்டுப் போயிட்டு வரதுக்குள்ள, எப்படாப்பா விளையாடலாம்னு ஆசை வந்துடும்.

நோட்ஸ் எழுதச் சொல்லக் கூடாது. ஹோம் ஒர்க் குடுக்கக் கூடாது. எல்லாம் பிரிண்ட் பண்ணிக் குடுத்துடணும். எக்ஸாம் வரும் போது படிச்சுட்டு போய் எழுதிடலாம்.

வேற பள்ளிகள்ல படிக்கிற என் நண்பர்கள் சிலர் கட்டு கட்டா புத்தகம் நோட்ஸ் சுமந்துகிட்டு போவாங்க. எதுக்கு இப்படி புக்ஸ் நோட்ஸையெல்லாம் சுமந்துக்கிட்டு போறீங்கன்னு கேட்டேன். புக்ஸ் கொண்டு போகலேன்னா, வெளிய வெயில்ல நிக்க வெச்சுடுவாங்க. பசங்க எல்லோரும் நம்மையை பார்ப்



• கம்ப்யூட்டரோ வேறெதுவோ சொல்லிக் கொடுத்தா நல்லா இருக்கும் - பத்மப்ரியா.

பாங்க. அதுக்காகவே எல்லா புக்ஸையும் தூக்கிக்கிட்டுப் போறோம்னு சொல்லுவாங்க. பாவமா இருக்கும்.



• ரிக்ஷா வரலைன்னா அப்பாவோடு ஸ்கூட்டர்ல போவேன். - எஸ். வி. சுதீர்

கே. பிரீதா
(5-ஆம் வகுப்பு)

நெறைய புக்ஸ் வேணும். அப்ப தான் படிக்க முடியும். போன வருஷம் பதினைஞ்சு புத்தகம் எடுத்துக்கிட்டுப் போனேன். இந்த வருஷம் இருபது, இருபத்திரண்டு இருக்கும். தூக்கிக்கிட்டு போறதுல கஷ்டம் இருக்கேன்னு நான் நினைக்கலே. இன்னும் கேட்டா ஜாலியா இருக்கும். கஷ்டமாயிருக்குன்னு நினைக்கிறவங்க வேணும்னா சைக்கிள் வாங்கிக்கலாம். கேரியர்ல வெச்சுட்டா, வண்டி எடுத்துக்கிட்டு வருது. நமக்கென்ன? எனக்கு கம்ப்யூட்டர்ல நெறைய விளையாடணும். இப்பவும் சொல்லித் தராங்க. வெறுமனே பேரு, அட்ரஸ், அப்பா பேரு, அம்மா பேரு எல்லாம் டைப் பண்ணச் சொல்லுவாங்க. இன்னும் நெறைய சொல்லித் தரணும். கம்ப்யூட்டர்லயே செஸ், ஹாக்கி எல்லாம் இருக்கு. அதெல்லாம் விளையாடச் சொல்லணும். அப்பத்

தான ப்பரியாளாக முடியும்!

ஆர். ஹரீஷ்நாராயணன்
(6-ஆம்வகுப்பு) :

என்னைக் கேட்டா ரெண்டு செட்டு புக்ஸ் இருந்தா நல்லாயிருக்கும்னு சொல்வேன். திகைக்காதீங்க! காரணமாத் நான் சொல்றேன். ரெண்டு செட்டு இருந்தா ஸ்கூல்ல ஒண்ணு. வீட்ல ஒண்ணு வைச்சுக்கலாம். தூக்குறது மிச்சம்! அங்க இருக்கும்போது அதையும், வீட்ல இருக்கும் போது இதையும் படிக்கலாம். ஆனா சும்மா சும்மா புத்தகத்தையே படிக்கறதை விட, எல்லாப் பாடங்களையும் டீ.வி.யில காண்பிச்சா எவ்வளவு நல்லாயிருக்கும்? இந்த வருஷம் எனக்கு பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி வேற இருக்கு. என்ன புரியப் போகுதோ? டீ.வி.யில காண்பிச்சு, கதை மாதிரி சொன்னா எத்தினி நல்லா புரியும்! எக்ஸ்பிரிமெண்ட்டையெல்லாம் வாயில சொல்றதை விட நேரடியாகவே செஞ்சி காண்பிக்கலாம். ஒவ்வொரு ஸ்டெப்பா சொல்லியும் குடுக்கலாம். வீணா புத்தகத்தை ஸ்கூலுக்கு எடுத்துக்கிட்டு போக வேணாம். மிஸ்ஸும் பசங்கள கிளாஸை விட்டு வெளிய அனுப்ப வேணாம். அபராதமும் போட வேணாம்.

ஆர். சௌம்யா
(1-ஆம் வகுப்பு) :

ஐயோ, பஸ்ல போகும் போதுதான் இந்த முதுகுல தூக்குற மிலிடரி பேக்கின்

கஷ்டத்தை அனுபவிக்க முடியும். நாம்ப ஏறிடலாம். ஆனால் நம்ம முதுகு பேக்கோடு பஸ்ஸுல ஏறவே முடியாது. கையில சாப்பாட்டுக் கூடை வேறயா? ஒரேயடியா இடிப்பாங்க. அதனால பஸ்ஸில ஏறினவுடனே, தலைய நுழைச்சி நுழைஞ்சி டிரைவர்கிட்ட போயிடுவேன். அங்க மிலிட்டரி பேக்கை முதுகிலேருந்து எடுத்து கழட்டி வெச்சுடுவேன்.

சில சமயம் பஸ்ல கூட்டம் ரொம்ப நெருக்கியடிக்கும். "உனக்கு இடம் இருக்கும்மா. உன் பேக்குக்கு இடம் இருக்காதுன்னு' கண்டக்டர் சிரிச்சுக்கிட்டே சொல்லி ஏறாம தடுத்துடுவாரு. சில கண்டக்டருங்க பஸ்ஸை நிக்காம விட்டுக்கிட்டுப் போய்டுவாங்க. மொத்தமா முப்பது பேர் இப்படி கனத்த பையோட ஏறினா என்னவாகும்? இத்தனை இருந்தும் எதுக்கும் சளைக்காம, எல்லா புக்ஸையும் எடுத்துக்கிட்டுப் போகலேன்னா பெஞ்ச் மேல நிக்கணும். எதுக்கு இந்தத் தொல்லைன்னு எல்லா புத்தகத்தையும் வாரி போட்டுக்கிட்டு நான் போயிடுவேன்."


எஸ்.வி. கதிர்
(I-ஆம் வகுப்பு):

நான் ரிக்ஷால போறேன். புத்தகத்தையெல்லாம் பைல போட்டு கம்பியில மாட்டிடுவேன். ரிக்ஷா வரலைன்னா அப்பா ஸ்கூட்டர்ல போவேன். அப்பா கிளாஸ் வரைக்கும் வந்து உட்டுட்டுப் போவார். சாயங்காலம் சில சமயம் அம்மாவே வருவாங்க. அவங்க புக்ஸ் பையை எடுத்துப்பாங்க. எனக்கு வெயிட்டே இருக்காது! ஜாலி.

பேட்டி தயாரிப்பு :
துளசி

அட்டையில் :
ஆர். கௌசிக் & ஆர். சந்தியா

வண்ணப்படம், புகைப்படங்கள் :
காமிரா திருஞானம்



கண்ணில்லாத குரங்கு உண்டா?

சலங்கை சத்தமும், பப்லுவின் பாட்டுச் சத்தமும் கேட்டு மாமா விழித்துக் கொண்டார். எழுந்து வந்தார். பப்லு தான் கூடத்தில் ஆடிக் கொண்டிருந்தான்.

குள்ளக் குரங்கே வந்திடுவாய்
குட்டிக் கரணம் போட்டிடுவாய்
கன்னப் பையில் உள்ளதையே
காதில் எனக்குச் சொல்லிடுவாய்.


வாலின் நீளம் அளந்திடுவேன்
வந்தால் கொஞ்சம்
குறைத்திடுவேன்!
தோளில் ஏற்றிக்
கொஞ்சிடுவேன்
தேங்காய் பழங்கள்
தந்திடுவேன்.

எதிரே குரங்கு இருப்பதைப் போல் எண்ணிக் கொண்டு பப்லு ஆடிப் பாடிக் கொண்டிருந்தான். குரலில் நல்ல இனிமை. பொருளை உணர்ந்து ஆடியதில் அழகும் நளினமும் தெரிந்தது. மாமா, தான் வந்திருப்பதை உணர்த்தாது கதவுக்குப் பின் மறைந்து கொண்டு, அவனுடைய ஆடல் பாடலை ரசித்தார். பாழாய்ப் போன தும்மல் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது!

“நீங்க தூங்கிக்கிட்டிருக்கிங்கன்னு நினைச்சேனே? எப்போ வந்திங்க மாமா? உங்க தூக்கத்தைக் கெடுக்கக் கூடாதுன்னு கதவைக் கூட மூடிவைச்சிருந்தேனே மாமா?” என்று பதறினான் பப்லு.

“பகல் தூக்கம்தானேம்மா? கொஞ்சம் குறைஞ்சால் தப்பில்லே. நாளைக்கு இந்தப் பாட்டையும் ஆட்டத்தையும் பார்க்கணும்னா கிடைக்குமா? உன்னாலும் பள்ளிக்கு மட்டம் போட்டுவிட்டு எனக்குப் பாடி ஆடிக் காட்ட

ரேவதி


JEEVAN MEIN BHAR LO RANG
DIAMOND COMICS KE SANG
Books- IDEAL GIFT
DIAMOND COMICS PRESENTS
BILLOO
GIFT BOX
DIAMOND COMICS PRESENTS
CHACHA CHAUDHARY
GIFT BOX
DIAMOND COMICS PRESENTS
PINKI
GIFT BOX
DIAMOND COMICS PRESENTS
PHANTOM
GIFT BOX
GIFT
TO
YOUR
FRIENDS
ON
BIRTHDAY
डायमण्ड कामिक्स प्रस्तुति
अमर चित्रकथा
गिफ्ट बॉक्स
INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND
COMICS
DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

முடியுமா?" என்று கேட்ட மாமா, "எதுக்கும்மா இந்த ஆட்டபாட்டம்?" என்று கேட்டார்.

"வரும் ஞாயிற்றுக்கிழமை எங்க பள்ளி ஆண்டு விழா மாமா. இந்தக் குரங்குப் பாடலை நான் பாடி ஆடப் போறேன். பாட்டு நல்லா இருக்கா மாமா?"

"ரொம்ப நல்லா இருக்கும்மா. பாடலில் நகைச்சுவை, அன்பு, குறும்புத்தனம் எல்லாம் நிறைஞ்சிருக்கு. கருத்துப் பிழை எதுவும் இல்லை. நீ பாடி ஆடின முறையும் கண்ணுக்கு விருந்தா இருந்தது. பாடலை யாரும்மா எழுதினாங்க?"

"எங்கள் தமிழாசிரியர்தான் மாமா."

"நான் பாராட்டினேன்னு சொல்லும்மா" என்று கூறிய மாமா, "பப்லு. குரங்கு பொம்மையை வைத்துக் கொண்டா பாடி ஆடப் போறே மேடையிலே?" என்று கேட்டார்.

"பொம்மை இல்லை மாமா. குரங்கு முகமூடி போட்டு வாலை ஒட்ட வைச்சு ஒரு சின்னப் பையனை நாற்காலியில் நிக்க வைக்கப் போறாங்க. அவனைப் பார்த்துத்தான் நான் இந்தப் பாடலைப் பாடி ஆடப் போறேன்." என்ற பப்லு, "மாமா, நீங்க ஞாயிற்றுக்கிழமை வரை இருந்து எங்கள் பள்ளி ஆண்டுவிழா நிகழ்ச்சிகளைப் பார்த்துட்டு, என்னுடைய ஆட்டபாட்டத்தையும் பார்த்துட்டு, உங்க மதிப்புரையைத் தந்தீங்கன்னா, எனக்குப் பெருமையாக இருக்கும்" என்றாள்.

"ஞாயிற்றுக்கிழமை வரை இருக்க முடியாதும்மா. வெள்ளிக்கிழமையே கிளம்பியாகணும். சனிக்கிழமை ஆபீஸ்ல ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்தாகணும்."

"அப்ப, நாளைக்கு சாயங்காலம் எங்களுக்கு மேடை ஒத்திகை மாமா. அதுக்கு வரலாமே? மேக்கப் கூட உண்டு."

"சரி, ஆறு மணிக்கெல்லாம் நேராக உங்கள் பள்ளிக்கே வந்துடறேன். என்னை உள்ளே விடணுமேம்மா?"

"என் சிநேகிதிகள் வாசலிலேயே உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பாங்க மாமா. எல்லாருக்கும் உங்களைத்



தெரியும். எங்க ஆசிரியர்களுக்கும் கூட உங்களைப் பத்திச் சொல்லி வைச்சிருக்கோம்!"

"அப்படியா! அந்த அளவுக்கு என் புகழ் பரவிப் போயிருக்கா?"

"இன்னும் கேட்டால், நீங்கள் வனவிலங்கு இயல்ல ஒரு ஆராய்ச்சியாளர் என்பதைக் கேட்டதும் என் ஆசிரியர்கள் உங்களை வைச்சு ஒரு கூட்டம் நடத்த வேண்டும்னு கூடச் சொன்னாங்க. நீங்க இப்படித் திடீர்னு வர்றது அவங்களுக்குத் தெரியாது."

"அப்படி ஏதும் திடீர்னு பண்ணி வைக்காதேம்மா. கூட்டங்களில் கலந்து கொள்ள நான் மேல் அனுமதி வாங்



மறுநாள் மாலை மாமா பள்ளியை அடைந்ததுமே, தயாராக வாசலில் காத்திருந்த பப்லுவின் சிநேகிதிகள் அவரை வரவேற்று அன்புடன் கூட்டிக் கொண்டு போனார்கள். உட்கார வைத்தார்கள்.

மேடை ஒத்திகைதான் என்றாலும் கலை நிகழ்ச்சிகள் எல்லாமே மிகவும் நேர்த்தியாக, எல்லோரையும் கட்டிப் போட்டதுபோல் பார்க்க வைக்கும்படி சுவையாக இருந்தன. பப்லுவின் குரங்குப் பாடல் நிகழ்ச்சி எல்லாவற்றிலும் சிகரம். லாங்கூர் என்ற குரங்கு வகை

வைத்துக் கொண்டு, குரங்கு சேஷ்டைகள் பண்ணியபடி ஒரு பொடிப் பயல் நின்ற விதம், பப்லு பாடி ஆடிய விதம் எல்லாமே இனிமையாக இருந்தன.

''மாமா, என்னுடைய நிகழ்ச்சி எப்படி இருந்தது?'' என்று கேட்டான் பப்லு.

''எல்லாமே அருமைதான்,'' என்று பாராட்டிய மாமா, ''குரங்கு வேஷம் போட்ட பொடியனையும், பாட்டை எழுதிய ஆசிரியரையும் கூப்பிடும்மா'' என்றார். இருவரும் வந்து வணங்கினர். மாமா அவர்களைப் பாராட்டிவிட்டு,

"நீங்கள் இந்தப் பாடலில் ஒரு மாற்றம் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் அது கருத்துப் பிழையாகிவிடும்" என்றார் ஆசிரியரிடம்.

ஆசிரியர் குழம்பிப் போய் நின்றார்.

"மாமா, நேற்று நான் பாடிக் காட்டியபோது கருத்துப்பிழை எதுவும் இல்லைன்னு சொன்னீங்களே! அதே பாடலைத்தானே இப்ப நான் பாடி ஆடினேன்!" என்றாள் பப்லுவும் கலக்கத்துடன்.

"நீ பாடினதைக் கேட்டப்போ, எதிரே குரங்கு வேஷம் போட்டுக்கிட்டு ஒரு பொடியன் நிப்பான்னு சொன்னே. அவன் குரங்கு முகமூடி போட்டிருப்பான்னும் சொன்னே. ஆனால், இப்படி லாங்கூர் குரங்கு வகை முகமூடியைப் போட்டிருப்பான்னு சொல்லலையே?"

"மாமா, நீங்க சொல்றது எனக்குப் புரியலே."

"இந்தப் பையன் போட்டுக்கிட்டிருக்கும் முகமூடி, சாதாரணக் குரங்கின் முகமூடி இல்லேம்மா. லாங்கூர்னு ஓர் வகைக் குரங்கு உண்டு. அந்த வகைக் குரங்கின் முகமூடி இது. இவைகளுக்கு முகத்தில் கன்னப்பை கிடையாது. கன்னப்பை இல்லாத ஒரு குரங்கை எதிரே வச்சுக்கிட்டு, 'கன்னப்பையில் உள்ளதை, காதில் எனக்குச் சொல்லுவாய்'னு பாடறது கருத்துப் பிழைதானே?"

"கன்னப்பை இல்லாத குரங்குகூட உண்டா மாமா?" என்று வியப்போடு கேட்டாள் பப்லு.

"இருக்கும்மா. லாங்கூர்னு ஒரு வகை சொன்னேனே, அது இதுதான். இந்த வகைக் குரங்குகள்தான் புனித அனுமாரின் சந்ததி என்று வணங்கப்படுகின்றன. இவைகளுக்குக் கன்னப்பை கிடையாது. ஏன், இந்தப் பையன் போட்டிருக்கும் முகமூடியைப் பார். இதுதான் லாங்கூர் வகையின் முகம்."

"ஆமாம், கன்னம் இரண்டும் உப்பாமல் நம்மைப் போலவே இருக்கிறது!" என்று எல்லோரும் கவனித்து வியந்தனர்.

"மாமா, இந்த அனுமன் குரங்கு மற்ற குரங்குகளில் இருந்து மாறுபட்டிருப்பது கன்னப்பை ஒன்றில் மட்டும்தானா?"

வாழ்கிறார்!



அன்பிலும் பண்பிலும் இனியவர் - அவர்
ஆண்டவன் முருகனின் அடியவர்!
குன்றக்குடி திகழ் அடிகளார் - என
குவலயம் போற்றிய பெரியவர்!

வள்ளியப் பாவுடன் பயின்றவர் - அவர்
மனதினில் தனி இடம் பிடித்தவர்.
வல்லநற் குழந்தை இலக்கியம் - நன்கு
வளர்ந்திடப் பெருந்துணை புரிந்தவர்!

பல்கலைக் கழகத்தில் அதனையே - ஒரு
பாடமென் றாக்கிட முயன்றவர்
கல்வியின் பெருமையை உணர்ந்தவர்
- அதைக்
கருத்துடன் பரப்பிட முனைந்தவர்!

செந்தமிழ் கற்றுத் தேர்ந்தவர் - என்றும்
சிந்தையில் தூய்மை வளர்த்தவர்.
நொந்தவர் துயர்களைக் களைந்திட - பல
நூதனத் திட்டங்கள் தந்தவர்!


குன்றக் குடியினைச் சுற்றியே - பல
குடும்பங்கள் பிழைத்திடப் பல் தொழில்
தொடங்கி வளம்பெறச் செய்தவர். - மக்கள்
தொண்டில் மகிழ்ச்சி அடைந்தவர்!

ஆன்மிகப் பணியொடு அருந்தமிழ் - பணி
ஆற்றிய தவத்திரு அடிகளார்
வானகம் எய்தினர் ஆயினும் - நல்ல
மனங்களில் தெய்வமாய் வாழ்கிறார்!

- வெற்றியூர் சுப. திருஞானம்

வாங்கி விட்டீர்களா?

மேகலா காமிக்ஸ்



சிறுவர்களே...

விடுமுறையில் நீங்கள்
விரும்பிப் படிக்க -
இதோ -
வித்தியாசமான ஒரு காமிக்ஸ் இதழ்

இங்கிலாந்தில் ஒரு ஜேம்ஸ்பாண்ட்.

அமெரிக்காவில் ஒரு காரிகன்.


காரிகனைக் கதாநாயகனாகக்
கொண்ட சாகஸக் கதைகள்
அறிமுக (மே மாத) இதழில்....



ப்ளாக் மெயில்

(முழு நீள சித்திரக் கதை)

ரூ.5 மட்டுமே



தயாராகிறது!
ஸம்மர் ஸ்பெஷல்!
முத்தான 4 படக்கதைகள்
160 பக்கங்கள்
விலை ரூ.15

உங்கள் பிள்ளைகளின்
படிப்பார்வத்தை வளர்ப்பதோடு -
பயனுள்ளவைகளைப் படிக்கவும் ஊக்குவியுங்கள் -
இன்றே மேகலா காமிக்ஸ்
வாங்கி அளிப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்!

'மேகலா காமிக்ஸ்' – பிலிமாலயா பப்ளிகேஷன்ஸ் பி லிட்., 96, காம்தார் நகர், சென்னை -600 034.

"இல்லேம்மா. மற்ற குரங்கு வகைகளுக்கு உரிய முரட்டுத்தனம் இவைகளுக்குக் கிடையாது. இலை, தளிர், காய், கனி, கிழங்குகளே இவைகளின் உணவு. உடல் மெலிந்திருக்கும். கால்கள், கைகளைக் காட்டிலும் நீளமானவை. உடலைவிட வால் நீளமானது. மந்தை மந்தையாக வாழும். ஒரு மந்தையில் உள்ள குட்டிகளை எல்லாப் பெண் குரங்குகளும் அன்பு காட்டிப் பராமரிக்கும். இரவில் இவை மரங்களில் தங்கும். அதுவும் மரக்கிளைகளின் நுனியில் அமர்ந்து தூங்கும். தங்களைப் பிடிக்க மரமேறி வரும் பகைவர்களிடமிருந்து நொடியில் தப்பவே இந்த ஏற்பாடு. மனிதக் குழந்தைகள் விளையாடுவது போலவே இவைகளின் குட்டிகள் அழகாக விளையாடும். இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் இவை அதிகமாகக் காணப்படும். இவைகளை அனுமாரின் வழித்தோன்றல் என்று மக்கள் வணங்குகிறார்கள்."

அறிவியல் உண்மைகள் :

- குரங்குகள் பிரைமேட்டுகள் (Primates) வரிசையில் சைனோ மார்பா (Cyno morpha) குடும்பத்தைச் சேர்ந்தவை.

- குரங்காட்டி பிடித்து வித்தை காட்டும் இனம் பரட்டைத்தலைக் குரங்கு (Bonnet Monkey) வகை.

- ரீஸஸ் குரங்கு (Rhesus), சிங்க வால் குரங்கு (Lion Tailed), அனுமன் குரங்கு (Common Longur), பொன் லாங்கூர் (Golden Longur), நீலகிரி மந்தி (Nilgiri Langur), இலை மந்தி (Leaf Monkey) அல்லது குல்லா மந்தி (Capped Langur), ஹூலெக் (Hoolock) ஆகியவை இந்தியாவின் சிறப்பான குரங்கு வகைகள்.

- அனுமன் குரங்குக்குக் கன்னப்பைகள் (Cheek Pouches) கிடையாது.

- இவை பாதுகாப்பைக் கருதி இரவில், மரக் கிளைகளின் நுனியில் அமர்ந்து தூங்கும்.

- இவைகளின் உடலைவிட வாலின் நீளம் அதிகமானது.

- மற்ற குரங்குகளுக்கு உரிய முரட்டுத்தனம் இவைகளுக்குக் கிடையாது.

"ஐயா, நீங்கள் வனவிலங்கு இயலில் ஆராய்ச்சியாளர். அதனால் உங்களுக்கு இந்த வித்தியாசம் எல்லாம் தெரிகிறது. எங்களுக்கு எல்லாமே குரங்காகத்தான் காட்சியளிக்கிறது. சாதாரணக் குரங்கின் முகமூடி கிடைத்தால் இதே பாடலை வைத்துக் கொள்கிறோம். அப்படிக் கிடைக்கவில்லை என்றால், "கன்னப் பையில் உள்ளதையே கொஞ்சம் எனக்குச் சொல்லிடுவாய்" என்ற வரிகளை "உன்னைப் போல மரமேற, எனக்கும் பயிற்சி தந்திடுவாய்" என்று மாற்றி விடுகிறேன்," என்றார் ஆசிரியர்.


"பொருத்தமாக இருக்கும். நான் கூறியதைக் குற்றமாக எடுத்துக் கொள்ளாமல், குறையை விலக்கிக் கொள்ள முன்வந்த உங்கள் பெருந்தன்மைக்கு என் பாராட்டு" என்று விடைபெற்றுக் கொண்டார் மாமா.



வண்டி ஓட்டத் தெரியாத டிரைவர் யாரு?

ஸ்குரு "டிரைவர்!"

– பாளை பசும்பொன்



ஜாடிகள்

ராஜாவின் அரண்மனையில் இருபது ஜாடிகள் இருந்தன. அவை மிக மிக அழகானவை. அது மட்டும்தானா? அவைகள் கிடைப்பதற்கு மிகவும் அரியவைகள். அதனால் அரசர் அவற்றை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தார்.

ஒருநாள் அதிகாரி ஒருவரின் கைபட்டு ஒரு ஜாடி விழுந்து உடைந்து விட்டது. கடுங்கோபம் கொண்ட மன்னர் அவருக்கு மரண தண்டனை விதித்தார். மறுநாள் மாலை அது நிறைவேற இருந்தது. இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது.

அந்த அதிகாரி நீதியின் மறு உருவம். கருணைக்கும், கண்டிப்புக்கும் புகழ் போனவர். மக்கள் அவரிடம் அளவில்லாத மரியாதை வைத்திருந்தனர்.

அடுத்த நாள் காலை, அரச சபைக்கு ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் வந்தான். "அரசே! உடைந்த ஜாடியை ஒட்டிய அடையாளமே தெரியாமல் என்னால் ஒட்ட வைக்க முடியும்" என்றான் சிறுவன்.

அரசருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அந்தச் சிறுவனை ஜாடிகள் இருக்கும் அறைக்கு அழைத்துப் போனார். உடைந்த ஜாடியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிறுவன் திடீரென்று மற்ற எல்லா ஜாடிகளையும் கீழே தள்ளினான். எல்லாம் உடைந்து சுக்கல், சுக்கலாகப் போயின! சிறுவன் 'கடகட' வென்று சிரித்தான்.

"ஏன் இவற்றை உடைத்தாய்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார் அரசர்.

"ஏற்கனவே இந்த ஜாடிகளில் ஒன்று நீதிக்கும் நேர்மைக்கும் புகழ்பெற்ற அதிகாரி ஒருவரின் உயிரை எடுக்க வழிகோலி விட்டது. இதே போல் இங்குள்ள மற்ற ஜாடிகளும், நீதிமான்களான மற்ற அதிகாரிகளின் உயிரைப் பலிவாங்கக் காரணமாகி விடக் கூடாது பாருங்கள். என் உயிரைப் பற்றி எனக்குக் கவலை இல்லை," என்று அமைதியாகக் கூறினான் சிறுவன்.

சிறுவனின் பதில் மன்னரை சிந்திக்க வைத்தது. சிறுவனின் மன உறுதியையும், அறிவுத் திறமையையும் தியாக உணர்வையும் கண்டு வியந்தார்.

"தம்பி! என் அறிவுக் கண்களைத் திறந்து விட்டாய். ஜாடிகளைக் காட்டிலும் மனித உயிர்தான் சிறந்தது என்பதை சுட்டிக்காட்டிவிட்டாய். இதோ அந்த அதிகாரியை விடுதலை செய்கிறேன்" என்றார் மனம் மாறிய ராஜா.

தக்கோலம் அ. முஸ்தபா



நீயாவது எடுத்துக் கொடு!

மலையடிவார அருவியில் தண்ணீர் 'சோ'வென்று பாலாக விழுந்து ஆற்றின் கரையைத் தொட்டு ஓடிக் கொண்டிருந்தது.

ஆற்றின் நடுவிலிருந்த தனிப் பாறையில் நின்றிருந்த மாணவர்கள் கர்ணமடித்து கர்ணமடித்துக் குதித்துக் கொண்டிருந்தனர். தண்ணீரைக் கைகளால் ஒருவர் முகத்தில் ஒருவர் மாறி மாறி வாரியடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போதுதான் வந்த அடுத்த குழு மாணவர்களும் மேலுடைகளைக் கழற்றி வைத்து விட்டு அருவியில் குதித்தனர். அனைவருமே ஒரே பள்ளியின் ஒரே வகுப்பு மாணவர்கள்தான்.

இவர்கள் சாப்பிடும் போது தங்களுக்கும் ஏதாவது உணவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் சில ஆதிவாசிச் சிறுவர்களும் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நீலனும், இடுப்பில் கோவணமும் தலையில் துண்டுமாகப் பாறையில் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

நீரின் உள்ளே முங்கிச் சென்று கொண்டிருந்த ரவியின் மேல் மணி குதித்து விட்டான் போலும்.


''ஓ''வென்று குரல் எழுப்பி எழுந்த ரவி, ''ஏண்டா என் மேல் விழுந்தாய்?'' என்று கோபத்துடன் மணியைப் பிடித்து நீரில் அழுத்தினான். திமிறிக் கொண்டு துள்ளியெழுந்த அவன் இவன் முகத்தில் குத்தினான். இருவரும் கரை ஏறி மணலில் கட்டிப் புரண்டனர்.

மற்ற மாணவர்கள் பதறிக் கொண்டு ஓடி வந்தனர். ''டேய் விடுங்கடா. சண்டை போட்டுக்கிடாதீங்கடா'' என்று சத்தமிட்டு இருவரையும் விடுவிக்க முயன்று கொண்டிருந்தனர். இருவர் முகமும் வீங்கி விட்டாலும், விடாமல் ஒருவரை ஒருவர் தூக்கித் தள்ளி விழ வைத்து, முதுகில் ஏறி உட்காரத் தீவிரமாக முயன்று கொண்டிருந்தனர். சண்டை தீவிரமாகிக் கொண்டிருந்தது.

கொ. மா. கோதண்டம்

குழம்பிப் போன கண்ணன் நீலனை அழைத்துப் பேசினான்.

"நீலா, நாங்க எல்லோரும் ஒரே வகுப்பில்தான் படிக்கிறோம். மணியும், ரவியும் பணக்கார வீட்டுப் பசங்க. ரெண்டு பேருக்கும் எப்போதும் போட்டி. ஒருத்தருக்கொருத்தர் பகைதான். ஒருத்தன் நாலு பேரை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போனால் இன்னொருத்தனும் நாலு பேரை அழைத்துக் கொண்டு போவான். வகுப்பு ஆசிரியரால் கூட இவர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை. இன்று கூட இருவரும் ஆளுக்கு ஐந்தாறு பேரை அழைத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். நீயேதான் பார்க்கிறியே? வந்த இடத்தில் பெரிய சண்டையே வந்து விட்டது! ஒருத்தனுக்கு ஒருத்தன் சளைச்சவன் இல்லே. நீதான் ஒரு யோசனை சொல்லேன். இவர்களை விடுவிக்க வேண்டும். படிப்பதில், மார்க் எடுப்பதில், சாப்பிடும் நேரத்தில் எதற்கும் இருவரிடமும் போட்டிதான். எப்போதும் ரெண்டு பேரும் கோஷ்டிகளோடுதான் இருப்பார்கள். ஆனால், இருவரும் இதுவரை இப்படி மூர்க்கமாக அடித்துக் கொண்டதில்லை. எப்படி ஆகி விட்டது பார்!"



"சரி சாமி. அவங்க உடுப்புகளையும் சாமான்களையும் எங்க வச்சிருக்காங்க? அதைக் காட்டுங்க" என்றான் நீலன்.

"அதோ பாரு. அந்தப் பாறைக்கு மேலதான் எல்லாம் வைச்சிருக்கு. அவங்க ரெண்டு பேரோட வாட்ச்சும் கூட அங்கதான் இருக்கு. ஒவ்வொண்ணும் எண்ணூத்தம்பது ரூவா. அதுவும் கூடப் போட்டியில் வாங்கினதுதான். ஒரே கம்பெனி வாட்சுதான் ரெண்டும்."

கண்ணன் கூறியதும் நீலன் பாறைக்கு ஏறிச் சென்றான். எதையோ எடுத்தான். பின் தன் நாயை அழைத்துப் பாறை மேல் ஓடும்படி விரட்டினான். கண்ணனிடம் ஏதோ இரகசியம் கூறினான்.

கண்ணன் சண்டை நடக்கும் இடத்திற்கு ஓடினான்.


"டேய் மணி! ரவி! நீங்க ரெண்டு பேரும் இப்படி சண்டையிலேயே மூழ்கிக் கிடக்கிறீங்க. அந்தப் பாறை மேலே ஒரு நாய் ஓடிப் போயிருக்குடா. காலு பட்டு ஒங்க ரெண்டு பேரோட வாட்ச்சும் பாறை இடுக்குக்குள்ளே விழுந்திருச்சுடா" என்று கத்தினான் கண்ணன்.

மணலில் புரண்டு புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்த இருவரும் எழுந்து அந்தப் பாறைப் பக்கம் ஓடி வாட்ச் விழுந்திருந்த பாறைகளின் இடுக்குள்ளே எட்டிப் பார்த்தனர். இடுக்கில் கீழே உள்ள மணலில் வாட்ச்சுகள் தெரிந்தன. ஆனால், இடுக்குக்குள் கையை நுழைக்க முடியவில்லை! நுழைந்தாலும் அது எட்டாது. அதை எப்படி எடுப்பது என்று இருவரும் புரியாமல் திகைத்தனர்.

"டேய் டேய். விலை உசந்த வாட்ச்சுடா. யாராச்சும் எடுத்துக் குடுங்கடா" என்றான் மணி.

ரவியும் அப்படியே கூறினான்.

மற்ற மாணவர்களும் முயன்று முடி



யாமல் செய்வதறியாது சும்மா நின்றனர்.

கண்ணன் நீலனை அழைத்து, "நீலா, நீயாவது எடுத்துக் குடேண்டா?" என்றான்.

பாறை இடுக்கில் குனிந்து பார்த்த நீலன், ''எடுக்குறது கஷ்டந்தான். ஆனாலும் முயற்சி பண்றேன். நான் எடுத்துத் தந்தா எனக்கு என்ன தருவீங்க?'' என்றான்.

"நூறு ரூபா நான் தரேன்" என்றான் ரவி.

"நானுந்தான்'' என்றான் மணி.

"சாமி, பணம் ஒண்ணும் வேண்டாம். எங்க பையங்களுக்கு திங்க ஏதாச்சும் தரணும்" என்று நீலன் கேட்டான்.

"எல்லா டிபன் பொட்டலங்களையும் உங்களுக்குக் குடுத்துட்டு நாங்க ஊர்ல போயி சாப்பிட்டுக்கிறோம். முதல்ல ரெண்டு வாட்சையும் எடுத்துக் குடு" என்று இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

"அத்தோட இன்னும் ஒண்ணு. எங்க சாமிக்கு முன்னால நீங்க ரெண்டு பேரும் வந்து, இனிமே நாங்க சண்டை போட மாட்டோம். ஒத்துமையா இருப்போமுன்னு சத்தியம் செய்யணும் அப்பத்தான் எடுத்துக் கொடுப்பேன்" - நீலன் கூறியதைக் கேட்ட ரவியும், மணியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே கை குலுக்கிக் கொண்டனர். மற்ற மாணவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரமிட்டார்கள்.

நீலன் பாறையைச் சுற்றி வந்து கீழே தெரிந்த வேறொரு பாறை இடுக்கின் வழியாகக் கைகளை உள்ளே நுழைத்து மணலில் குழிபறித்தான். வாட்ச்கள் இரண்டும் மணலுடன் சரிந்து வெளியே வந்து நீலனின் கையில் விழுந்தன. மாணவர்களின் ஆரவாரத்தில் வானமே அதிர்ந்தது.

கண்ணனும், நீலனும் மெல்லச் சிரித்துக் கொண்டனர்.

எங்கள் ஊரில் நடந்தது



ஏன் தூங்கலை?

எனது தம்பி 5 வயது இருக்கும் ஏதோ பேப்பரில் கிறுக்குவான். அவை களை ஓவியம் என்று கூறி வதைப்பான். ஒரு நாள் இரவில் உளறினான்.

"நேற்று ராத்திரி முழுவதும் ஏன் உளறின? என்று கேட்டோம்."

"நேற்று ஒரு பூனை படம், எலி படம் வரைந்தேன். திருடன் யாரும் தூக்கிக் கிட்டு போகாதபடி அதை தலையணை அடியில் வைத்தேன் கனவில இரண்டும் சண்டை போட்டிச்சி. அதான் தூக்கம் வரலை" என்றான்.

அவனின் வித்தியாசமான கற்பனையை ரசித்தோம்.

— சு. காந்தி ராசு, சென்னை - 5.

வல்லவன்!

தமிழ் ஆசிரியர் விடைத்தாள்களைத் திருத்தி மாணவர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். கார்த்திக் என்ற மாணவன் விடைத்தாள்களை இணைக்கக் குண்டூசி கிடைக்காததால், எரிந்து போன தீக்குச்சியை அதற்குப் பதிலாகச் செருகி வைத்திருந்தான். இதைக் கவனித்துவிட்ட ஆசிரியர் கோபத்துடன், "கார்த்திக், என்ன இது



குண்டூசி கிடைக்காவிட்டால் கண்ட கண்ட பொருளைப் பயன்படுத்துவதா?" என்று கடிந்தார். அவன், "நீங்கதானே சார் நேற்று 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்று சொல்லிக் கொடுத்தீக?" என்று ஒரே போடாகப் போட்டான். ஆசிரியர் அசந்து விட்டார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

— கி. சிவா, சென்னை - 116.



அதிர்ச்சி!


அன்று என் சித்தப்பா பையன் வெங்கட் அவசர அவசரமாய் வந்தான்.

அமாவாசை அன்றா?

எங்கள் பள்ளித் தமிழாசிரியர் மிகவும் நல்லவர். ஆனால் கோபம் வந்தால் அவரிடம் நெருங்க முடியாது. அன்று அடிவிழுவது நிச்சயம். ஒருநாள் அவர் மிகக் கோபமாக பள்ளிக்குள் அவர் வகுப்பு வேளைக்கு வந்தார். வந்தவுடன் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

முற்காலத்தில் அரசர்கள், செல்வர்கள் பிறருக்கு செல்வங்களைப் பரிசளிக்கும் போது அவை வாங்குபவர்க்கே உரித்தாகும் பொருட்டு இது சந்திரன் ...ள வரை இது உன்னிடமே இருக்கட்டும் என்று கூறுவார்கள் என்று அவர் கூறியதுதான் தாமதம், என் குறும்புக்கார நண்பன் 'அப்ப அமாவாசையன்று வாங்கிக் கொள்வார்களா சார்?' என்றதும், ஒரே சிரிப்பு.

— டி. சரோஜாமகன், அனந்தபுரம்.



அவனது பரபரப்பிற்கான காரணத்தைக் கேட்டேன். இரண்டு மாதத்திற்கு முந்தைய இந்த இனிசரி ஒன்றின் பெயரைச் சொல்லி, அது வேணுமா என்றான். அதில் ஏதோ விளையாட்டுப் பற்றிய விவரத்தைக் குறிப்பிட்டிருப்பதாகவும் சொன்னான். எங்கள் வீட்டில் அந்த இனிசரி வாங்குவதால் அதைக் கேட்டு வந்தான். ஆனால் அவற்றை பழைய பேப்பருக்கு போட்டு விட்டிருந்தாள் என் அம்மா. உடனே பழைய பேப்பர் கடையை நோக்கிப் படையெடுத்தோம். எங்களது பரபரப்பைப் பற்றி சிறிதும் கவலைப்படாத என் தம்பி முடிவெட்டிக் கொள்ளக் கிளம்பிச் சென்றான். நாங்கள் பழைய பேப்பர் கடையில் சென்று விசாரித்தோம். 'அடே... அதெல்லாம் அப்பப்போ விற்பனைக்கு அனுப்பிச்சுடுவோம்' என்றே பதில் சொன்னார்கள். சோகமாய் வீடு திரும்பிய போது, வீட்டின் மேஜையின் மேல் அந்தக் குறிப்பிட்ட இனிசரி இருந்தது எங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. எப்படி வந்தது என்ற போதுதான் தெரிந்தது, முடிவெட்டிக் கொள்ளச் சென்ற தம்பி அங்கிருந்து எடுத்து வந்திருக்கிறான். 'அடி நிலைத்திலே வச்சுகிட்டு எங்கேயோ போய் அலைஞ்சீங்களே?' என்று அவன் கேட்ட போது கவலை, டென்ஷன் எல்லாம் மறந்து சிரித்தோம்.


— அரிசந்திரன், சென்னை - 90.

உள்ள மனிதன்

எங்கள் வீட்டில் இவ்வளவு நாட்களாக வானொலி இல்லை. எங்களது வற்புறுத்தலினால் தந்தையார் புதிதாக வானொலி ஒன்றை வாங்கி வந்தார். அது எங்கள் வீட்டில் பத்து நாட்களாகப் பாடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் அந்த வானொலி உடைந்து கிடந்தது. நாங்கள் "எப்படி?" என்று விசாரிக்கையில் எனது தம்பி, ''நான்தான் உடைத்தேன்'' என்று கூறினான். "ஏன் உடைத்தாய்?'' எனக் கேட்டோம். "ரேடியோ இவ்வளவு நாளாகப் பாடுதே! ரேடியோவினுள் மனுஷன் இருப்பான் என்றெண்ணி உடைத்தேன். உள்ளே ஒருவரும் இல்லை" எனக் கூறினான். நாங்கள் அவனை அடிப்பதா சிரிப்பதா என விழித்தோம்.

— பி. சரவணன்,
கொண்டரசம்பாளையம்.





இன்னுமா?


எங்கள் ஆசிரியர் வரலாறு பாடம் நடத்திக் கொண்டு வந்தார். அப்போது எங்களைப் பார்த்து "எந்தப் பாடம் நடத்த வேண்டும்?" என்று கேட்டார். நாங்கள், "ஆசியா" என்றோம். உடனே அவர், "இன்னும் நிறைய பாடம் நடத்த வேண்டியதுள்ளது" என்பதை சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "இன்னும் நாம் ஆசியாக் கண்டத்தில்தானா இருக்கிறோம்?" என்று கேட்டார். ஒரு மாணவன் எழுந்து, "இருக்கிற கண்டத்திலே நம்ம கண்டம் தானே சார் பெரிசு? அப்புறம் ஏன் சார் வேறு கண்டத்துக்கு போகணும்?" என்றானே பார்க்கலாம், வகுப்பறையே சிரிப்பு.


— இராம. ஜெயகாந்தன்,
துத்திப்பட்டு.

வாட்டர்

எங்களுடைய ஆங்கில ஆசிரியர் தமிழ் வார்த்தை கொடுத்து அதை ஆங்கிலத்தில் எழுதச் சொன்னார். சுமாராகப் படிக்கும் மாணவனைப் பார்த்து "தண்ணீர். இதை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு வா" என்றார். அவன் என்ன புரிந்து கொண்டானோ என்னவோ, வாட்டர் என்று எழுதிக் கொண்டு வந்தான். ஆசிரியர் முதல் அனைவரும் கொல்லென்று சிரித்து விட்டோம்!

— டி. கலையரசு, அனந்தபுரம்.





ஒரே வாயில்!

கோடை விடுமுறை. உறவினர்கள் அனைவரும் வந்திருந்தனர். சிறுவர்களும் அதில் இருந்தனர். அனைவரும் ஒரே கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் சாப்பிட அமர்ந்தோம். காலை டிபன் இட்லி. முதலில் நான் பேச்சை ஆரம்பித்தேன். "நான் ஒரே வாயில் இட்லி சாப்பிடுவேன்" என்றேன். எல்லோரும் அவரவர் பங்குக்கு சொல்லிக் கொண்டிருந்தனர். என் மாமா பையன் திடீரென்று, "நான் தட்டுல வைக்கிற எல்லா இட்லியையும் ஒரே வாயில் சாப்பிடுவேன்" என்றான்.

நங்கள் அவனை ஆச்சர்யமாகப் பார்த்த நேரத்தில் அவன் சட்டென்று, "எனக்கிருப்பது ஒருவாய்தானே?" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்புதான்.


— கே. ஜெகன்நாதன்,
அனந்தபுரம்.



முடிவுக்கு வந்தோம்!

இலக்கிய மன்றத் தொடக்க விழா விற்குப் பேச்சாளரை அழைத்திருந்தார் கள். தலைவர் பேச்சாளரை அறிமுகப் படுத்தித் தம் முன்னுரையைச் சுருக்க மாக முடித்துக் கொண்ட பின் பேச் சாளர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு எழுந்தார். பேசத் தொடங்கி யவர் பேசிக் கொண்டே இருந்தார். இடையிடையே சோடாவைக் குடித்துக் கொண்டு விழாவுக்கு வந்தவர்களை எவ் வளவு குழப்ப முடியுமோ அவ்வளவு குழப்பினார். பேச்சை முடிப்பார் போல் தோன்றும்; ஆனால் முடிக்கமாட்டார். மேலும் தொடர்வார்! உட்கார்ந்திருந்த மக்கள் பொறுமையிழந்து ஒவ்வொருவ ராய் நழுவத் தொடங்கினர். ஆனால் எதைப் பற்றியும் கவலைப்படாமல் அந்தப் பேச்சாளர் பேசிக் கொண்டிருந் தார். கடைசியில் ஒரு வழியாகத் தம் சிற்றுரையை முடித்துக் கொள்வதாய்க் கூறித் தம் இருக்கையில் அமர்ந்தார். கூட்டம் முடிந்த பின் நாங்கள் பேச் சாளரைச் சந்தித்து "ஐயா! வணக்கம். நாங்க உங்க பேச்சைக் கேட்டோம். அதற்குப் பின்னாலே ஒரு முடிவுக்கு வந்துள்ளோம்.'' என்று கூறினோம் அதைக் கேட்ட பேச்சாளர் மிகவும் மகிழ்ந்து, "பலே! பலே! அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார். நாங்கள் அவரிடம், "ஐயா! என்ன முடிவுக்கு வந் தோம் என்று கேட்கவில்லையே! இனி உங்களைப் போன்ற ஆட்களைப் பேச அழைப்பதில்லை என்ற முடிவுக்கு வந் திருக்கிறோம்" என்றோம். பேச்சாளர் முகத்தில் ஈ ஆடவில்லை.

— ஜி. செல்வி, பாப்பாரப்பட்டி.



இடையில்....


எங்கள் உறவுக்காரர் லாரியில் அடி பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். அவரைப் பார்க்கச் சென் றோம். அவரிடம் இந்த விபத்து எப்படி நிகழ்ந்தது என்று கேட்டோம். இரவில் வரும்போது இரு லைட் வெளிச்சம் தெரிந்தது. நான் இரு மோட்டார் சைக்கிள்தான் வருகிறது என நினைத்து நடுவில் புகுந்து சென்றுவிடலாம் என நடுவில் புகுந்துவிட்டேன். கடைசியில் தான் அது பெரிய லாரி என்பது தெரிந் தது என்றாரே பார்க்கலாம்! ஒரே சிரிப்புதான்!

— எம்.எஸ். பெருமாள், சத்தம்பூண்டி.

அப்பம் வந்தது?

எட்டாம் வகுப்பில் படிக்கும் போது தமிழ் ஆசிரியர் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். கட்டுரையில் 'அப்






கதவடை!

திருவள்ளுவர் பேருந்தில் திருச்சி செல்வதற்காக ஏறினேன். கிராமத்துப் பெண்மணி ஒருவரும் அவர் குழந்தையும் பேருந்தில் ஏறினர். பேருந்து புறப்பட இன்னும் அரைமணி நேரம் இருந்தது. அப்போது, ஒரு ஆள் பேருந்தின் ஜன்னல் ஓரமாக "ஆமவடை, ஆமவடை" என்று விற்றுக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட குழந்தை "அம்மா, அந்த ஆம வடை வேணும்" என்றது. குழந்தையின் தாய் அதை வாங்கிக் கொடுத்தார். சிறிது நேரத்திற்கு பின் ஒரு ஆள் பேருந்தின் ஜன்னல் ஓரமாக "கார வடை, கார வடை" என்று விற்று வந்தார். அதையும் குழந்தை கேட்டது. அந்தத் தாய் வாங்கிக் கொடுத்தார். குழந்தை அதையும் தின்று முடித்தது. வடை என்றால் மிகவும் ஆசை போல இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

பின்னர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் ஓட்டுனர் தன் இருக்கையில் வந்து அமர்ந்தார். நடத்துனரைப் பார்த்து "கதவடை" என்றார்.

அதைக் கேட்ட குழந்தை "அம்மா, எனக்கு அந்த 'கதவடை' வாங்கித்தா" என்று கேட்டது. அதுவரை பேருந்தில் அமைதியாக இருந்தவர்களெல்லாம் கொல்லென்று சிரித்தனர். நானும் கூடத்தான்!

— எஸ். விநோத் பாபு, கவித்தலம்.



காரணம்

குளிர் காலம் இருந்தமையால் போர்வை, ஜமுக்காளம், ஆகியவற்றை விற்க எங்கள் வீட்டுப் பக்கத்தில் உள்ள முச்சந்தியில் ஒருவர் ஏலம் போட்டுக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் இரண்டு பெரிய விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஒருவர் வேகமாக அக்கடையை நோக்கி வந்தார். நாங்கள், அவர் ஏதோ பெரிய பொருளை ஏலம் கேட்கவே வருகிறார் என்று நினைத்தோம். ஆனால் அவர் அங்கு வந்து பெரிய விளக்கின் அருகில் வெறுமே நின்றார். பிறகுதான் அவர் விளக்குக்குப் பக்கத்தில் குளிர் காய வந்திருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரிந்தது. ஏலம் போட்டவர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

— என். முத்துகுமரன், நன்னிலம்

போது' என்ற வார்த்தை வரும். அப்போது என்ற வார்த்தையை குமரி மாவட்ட பேச்சு வழக்குப்படி ஒரு மாணவி "அப்பம்" என்று எழுதிவிட்டாள். ஆசிரியரும் கட்டுரையைப் படித்துப் பார்த்துவிட்டு 'அப்பம் எந்தக் கடையில் வாங்கியது?" என்று சிவப்பு மையால் எழுதிவிட்டார். பிறகு அந்தக் கட்டுரை நோட்டை அந்த மாணவி கையில் கொடுத்து அதை எல்லோர் முன்பும் வாசித்துக் காண்பிக்கச் சொல்ல வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.

— என். பிரேமா, வடிவீஸ்வரம்

குரு. சீனிவாசன்



நீயுமா சீதா?

வகுப்பைப் பதிவை எடுத்து முடித்த கணக்கு டீச்சர், தன் கைப்பைக்குள் இருந்த சிறிய விடைத்தாள் கட்டை எடுத்துப் பிரித்தார். கடைசி பெஞ்சில் அமர்ந்திருந்த ஐந்தாறு மாணவிகளின் உள்ளங்கள் உதறல் எடுக்கத் தொடங்கின. அந்த விடைத்தாள்களுக்கு உரியவர்கள் ஆயிற்றே அவர்கள்!

ஆனால் கடைசியில் எல்லோருக்குமே ஐம்பதுக்கு ஐம்பது என்பதை அறிந்தவுடன் தேர்வு எழுதியவர்கள் திகைத்து நின்றார்கள். காரணம், அந்த ஐந்தாறு பேர்களுமே கடந்த அரையாண்டுத் தேர்வில் கணக்குப் பாடத்தில் கோழி முட்டை வாங்கியவர்கள்!

வகுப்பில் நிலவிய அமைதியின் இடையே டீச்சர் பேசத் தொடங்கினார்.

"நம் வகுப்பில் கணக்குப் பாடத்தில் மிகவும் பின்தங்கிய ஐந்தாறு மாணவிகளையும் இப்படி அருமையாகத் தேர்ச்சி பெறச் செய்த பெருமை யாருக்குரியதென்று உங்களுக்கெல்லாம் தெரியும். உங்களில் ஒருத்தியாகிய சீதாதான் அது என்பதை நான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. என் அன்புக் கட்டளையை ஏற்று, நாள் தோறும் மாலையில் பள்ளி நேரத்துக்குப் பிறகு ஒரு மணி நேரம் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, அத்தனை பேரையும் முழுத் தேர்ச்சி பெறச் செய்து விட்டாள். அவள் என்னை விடத் திறமையாகச் சொல்லிக் கொடுத் திருக்க வேண்டும். அதற்காக அவளைப் பாராட்டி இந்த 'ஸ்கெட்ச் பேனா செட்'டைப் பரிசாக வழங்கு கிறேன்."

டீச்சர் சீதாவின் இடத்திற்கே சென்று பரிசை வழங்கிய போது, ஆசிரியையின் திருப்திக்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒப்புக்குச் சில கை தட்டல்கள் எழுந்தன. ஆசிரியை வெளியே

போனதும் வகுப்புக்குள் சிறு சலசலப்பு.

'கணக்குப் பாடம் சொல்லித் தரதிலே இவ டீச்சரைக் காட்டிலும் கெட்டிக்காரியாக்கும்!" என்று அடித்தொண்டையின் கரகரத்த குரலில் கேலியாகக் கண்டனம் எழுப்பினாள் ஒருத்தி.

"இவளைச் சொல்லி என்னடி குத்தம்? இப்படிச் சொல்றதுக்கு கணக்கு டீச்சரே இல்லே வெட்கப்படணும்?" என்று கண்டனத்திற்கு எதிர்ப்பை எழுப்பியது இன்னொரு கிசு கிசுக் குரல். அரை குறையாகக் காதில் விழுந்தவைகளைச் சிறிதும் சட்டை செய்யாமல் தன் வேலையில் கவனமானாள் சீதா.




அன்று மாலை வழக்கமான தனி வகுப்புக்குக் கையில் சாக்பீஸுடன் கரும்பலகையின் முன் நின்றாள் சீதா. பழைய மாணவிகள் ஆறு பேர்களுடன் நீலாவும் புதிதாக வந்திருந்தாள். கணக்குப் பாடத்தில் எண்பது, தொண்ணூறு வாங்கக் கூடிய கெட்டிக்காரியாயிற்றே நீலா! அவளை ஆச்சரியத்தோடு பார்த்தாள் சீதா.

"என்ன சீதா அப்படிப் பார்க்கிறே? டீச்சர் இந்த வாரம் நடத்தின 'வட்டம்' பத்தின பாடங்கள் என்னவோ எனக்குப் புரியவே இல்லே. அதனாலேதான் இனிமே உன் கிட்டே கணக்குப் படிக்கலாமின்னு வந்திருக்கேன். உனக்கொன்னும் மறுப்பு இல்லையே?" என்று சாதுரியமாகவும் நயமாகவும் கேட்டாள் நீலா.

"ஐயோ எனக்கென்ன கஷ்டம்? உனக்கு மாத்திரம் தனியாவா சொல்லித் தரப் போறேன்? நீ நல்லா வந்து சந்தேகங்களைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்" என்று அவளைச் சமாதானப்படுத்தி விட்டுக் கணக்குப் போட்டு, வகைமுறைகளைப் படிப்படியாக விளக்கத் தொடங்கினாள் சீதா. முக்கால் மணி நேரம் முடிந்த வேகம் தெரியவில்லை!

வீட்டுக்குப் புறப்பட்ட சீதாவின் தோள்களில் கை போட்டு நடந்த நீலா, "ஏ ஒன் சீதா; எனக்குப் பிரமாதமா விளங்கிவிட்டது. டீச்சரைக் காட்டிலும் ரொம்ப சுலபமாப் புரிய வைக்கிறியே!" என்று வானளாவப் புகழ்ந்து கொண்டே வந்தாள். சீதாவுக்கோ என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அன்று முதல் நீலாவின் நெருக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

அந்த மாதப் பரீட்சையின் கணக்கு வினாத்தான் முழுக்க முழுக்க 'வட்டம்' பற்றிய பாடப் பகுதியில் மட்டுமே



அமைந்திருந்தது. திருத்தப்பட்ட விடைத்தாள்களை வழங்கிய டீச்சரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. மற்றவர்கள் எல்லாம் நல்ல மதிப் பெண்கள் வாங்கியிருக்க, சீதாவிடம் கணக்குப் பாடம் கற்றுக் கொண்ட ஐந்தாறு பேர்களும் பேசி வைத்துக் கொண்டது போல ஜீரோ வாங்கிக் கொண்டு நிற்கிறார்களே!

காரணத்தை அறிய விரும்பிய டீச்சர் அவர்களது விடைத் தாள்களைத் துருவத் தொடங்கினார். அவர் முகத்தில் கோபம் கொப்புளித்தது

"அட முட்டாள்களா! பரப்பளவு காண வேண்டிய கேள்விகளுக்கு சுற்றளவுச் சூத்திரத்தையும், சுற்றளவுக்குப் பரப்பளவுச் சூத்திரத்தையும் மாற்றிப் போட்டுக் குழப்பினால் முட்டை வாங்காமல், நூற்றாக்கு நூறா கிடைக்கும்? பைகளைத் தூக்கிக் கொண்டு பழையபடி பேக் பெஞ்சுக்கு நடக்க வேண்டியதுதான்!"

டீச்சரின் அதட்டலில் வகுப்பே அதிர்ந்தது.

"எங்க மேலே குத்தமில்லே டீச்சர். சீதாதான் இப்பிடிச் சொல்லிக் கொடுத்து எங்களையெல்லாம் குழப்பிக் குட்டிச் சுவராக்கிட்டா!" - பின் பெஞ்சுக்குப் போய் நின்ற ஐந்தாறு பேர்களும் ஏகோபித்துக் குரல் எழுப்பினார்கள். அதைக் கேட்டு அயர்ந்து போன சீதா உடம்பெல்லாம் நடுங்க எழுந்து நின்றாள். டீச்சரின் நெற்றிக் கண் பார்வை அவளை நெருப்பாகி எரிப்பது போலிருந்தது.

"இல்லவே இல்லீங்க டீச்சர். நீங்க சொல்லிக் கொடுத்த மாதிரியேதான் நானும்...."

அவளைப் பேச விடாமல் இடை மறித்த பேக் பெஞ்சின் மேதைகள், "நாங்க பொய் சொன்னா நீலாவை வேணுமின்னாலும் கேட்டுப்பாருங்க. அவளும் எங்களோடு வந்து கணக்குப் படிச்சா டீச்சர்" என்று நீலாவைச் சாட்சிக்கு இழுத்தார்கள். நீலா எழுந்து நின்ற போது, "உன் மார்க் என்ன?" என்று குறுக்கு விசாரணையைத் தொடங்கினார் டீச்சர்.

"சைபர் டீச்சர்!" என்று சிறிது கூடக் கவலைப்படாமல் நெஞ்சை நிமிர்த்துக் கூறினாள் நீலா.

"நீதான் நல்லாக் கணக்குப் போடுவியே?" நீலாவின் வாயைக் கிளறினார் டீச்சர்.

"நீங்க சீதாவைக் கணக்கில் கெட்டிக்காரி; அப்பிடி இப்பிடின்னு சொன்னதை நம்பி, அவகிட்டே கத்துக்கப் போனேன். ஆனா அவ தாறுமாறா

கோடீஸ்வரர் ஆகலாம்

கண்ட கண்ட பொருளெலாம்
காசு போட்டு வாங்கியே
தண்டச் செலவு செய்வதால்
தரித் திரராய் ஆகிறோம்!

சிறுகச் சிறுக காசெலாம்
செலவிடாமல் சேர்ப்பதால்
பெரிய பெரிய தொகையதாய்ப்
பின்னர் மாறக் காணலாம்!

உண்டி ஒன்று வங்கியே
ஒன்றி ரண்டு காசதில்
கொண்டு தினமும் சேர்ப்பதால்
கோடீஸ் வரர் ஆகலாம்!

— திலீபன்



சொல்லிக் கொடுத்து எங்களைக் குழப் பிட்டா."

நீலாவின் வாக்கு மூலம் சீதாவின் நெஞ்சைப் பிசைந்தது. 'நீயுமா நீலா?' என்று கெஞ்சுவது போல அவளைப் பரிதாபமாக நோக்கினாள். ஆனால் நீலாவோ அவள் பக்கம் முகத்தைத் திருப்பவே இல்லை!

"எல்லாரையும் குழப்பி மட்டம் தட்டிட்டுத் தான்மட்டும் கெட்டிக்காரியாகணுமென்கிறதுதான் அவளோட திட்டம் டீச்சர்" .

சீதாவின் மீது பொறாமை கொண்ட ஒருத்தியின் மனப்புகைச்சல் பின்னாலிருந்து விமர்ச்சனமாக வெளி வந்தது.

"ஓகோ அப்படியா? உட்காருங்கம்மா சீதா தேவி. உன்னை எவ்வளவு மதிப்பா நடத்தினேன்! நம்பிக்கை மோசம் பண்ணிட்டியே? இனிமேல் யாருக்கும் எதுவும் சொல்லிக் கொடுத்துக் கிழிக்க வேண்டாம்" என்று கிண்டலாகப் பேசி முடித்து விட்டுப் பாடத்தைத் தொடங்கி விட்டார் டீச்சர்.

அழுது அழுது சீதாவுக்குக் கண்கள் வீங்கிப் போய்விட்டன. டீச்சரின் அதிருப்திக்குத்தான் ஆளாக நேர்ந்ததை நினைத்து நினைத்து நெஞ்சுடைந்து போனாள். இவ்வளவு பெரிய அவதூறு எப்படித் தனக்கு நேர்ந்தது என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அன்று முதல் டீச்சரின் பாரா முகமும், சக மாணவிகளின் உதாசீனப் போக்கும் வகுப்பில் அவளைத் தனிமைப்படுத்தி விட்டன.

ஆனால் நீலாவுக்கு என்ன வாயிற்று? நீண்ட நாட்களாகப் பள்ளிக்கு வராமல் நின்று போனாளே!

ஆண்டுத் தேர்வுக்கு இன்னும் நான்கைந்து நாட்களே இருந்தன. அன்று மாலை நீலா சீதாவின் வீட்டைத் தேடி வந்தாள். அவளை அடையாளம் கண்டு கொள்ளவே அதிக நேரம் பிடித்தது சீதாவுக்கு. அந்த அளவுக்கு உடல் மெலிந்து எலும்பும் தோலு மாகக் காட்சி தந்தாள் நீலா. சீதாவைப் பார்த்ததும் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறித் துடித்து விட்டாள். அவளுக்கு

ஆறுதல் கூறித் தேற்றி, அழுகையை நிறுத்து வதற்குச் சீதா பெரும்பாடு பட்டாள். நீலா தனது நிலையைக் கூறத் தொடங்கினாள்.

"முதலலே என்னை மன் னிச்சிடு சீதா. உன் மேலே வச்சிருந்த பொறாமை யினாலே மத்தவங்களோடு சேர்ந்து திட்டம் போட்டு உனக்குத் துரோகம் பண்ணிட்டேன். எத்தனை பெரிய துரோகம் செய்கிறோம் என்பதை உண ராமல்; அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல் பொறாமைக்காரர்கள் பேச் சில் மயங்கி அவர்கள் சொன்னபடி நடந்தேன். எந்த விதமான எதிர்பார்ப் பும் இல்லாது நீ எங்களை யெல்லாம் நல்ல மார்க் வாங்கவைக்க எப்படி எல் லாம் கற்றுக் கொடுத்தாய் என்பதை எல்லாம் அந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவே இல்லை. உனக்குச் செய்த பாவத்துக்கு ஆண்டவன் எனக்கு டை பாய்டு ஜுரத்தைக் கொடுத்து என் னைத் தண்டிச்சிட்டாரு. இப்போ என் கண்கள் திறந்து விட்டன. உன்னைப் பார்த்து மன்னிப்புக் கேட்கத்தான் வந் தேன்."

நீலா விசும்பி விசும்பி அழுதாள். சீதாவுக்கு அவளைத் தேற்றுவதற்குள் பெரும் பாடாகிவிட்டது.

"அதையெல்லாம் எப்பவோ நான் மறந் துட்டேன். அது சரி; நீ முழுப் பரீட்சை எழுதணும் இல்லையா?" - பேச்சை மாற்றி, சீதா பரிவோடு விசாரித்தாள்.

"எழுதணும்; மத்த பாடங்களையாச் சும் ஓரளவு படிச்சி எழுதிடலாம். ஆனா ரெண்டு மாசம் வகுப்புக்கு வராமே, கணக்குப் பாடத் தை எப்படிப் படிச்சு எழுதப் போறேன்?" - நெஞ்சில் எழுந்த மலைப்பு நீலாவின் சொற்களில் தென்பட்டது.

"அதைப் பத்திய கவலை உனக்கு வேணாம் நீலா. கணக்கில் முக்கியமான வற்றை நான் உனக்கு சொல்லித்தாரேன். நீ நிச்சயம் பாஸ் பண்ணப் போறே!" சீதாவின் சொற்கள் அவள் அடி மனத் தில் நம்பிக்கை ஊற்றினைத் தோற்று வித்தன.

ஆண்டிறுதித் தேர்வில் அன்று கணக் குப் பாடம். வினாத்தாளை வாங்கி வாசித்த நீலாவின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. சீதா எதை யெல்லாம் முக் கியமென்று போட்டுக் காட்டினாளோ, அத்தனை கணக்குகளும் அப்படியே வந் திருந்தன! நிச்சயம் எண்பது மார்க்குக் குக் குறையாமல் வாங்கி விடலாம் என்ற தைரியம் அவள் கைகளை இயந்திரமாக இயக்கியது.

தேர்வை எழுதி முடித்த நீலாவின் கால் கள் கணக்கு டீச்சரைத் தேடி ஆசிரியை களின் ஓய்வு அறை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. சீதாவுக்குக் கெட்ட பெயர் வாங்கித் தருவதற்குத் தாங்கள் திட்டமிட்டுச் செய்த சதியை விளக்கி, மன் னிப்புக் கேட்கத் துடித்துக் கொண் டிருந்தது அவள் மனம்.



வாத்துக் கப்பல்

போத்த ஊரு சந்தையில்
பார்த்து மாமா வாங்கிய
வாத்துக் கப்பல் போகுது
வளைந்து, வளைந்து போகுது!

ஆழ மான ஏரியில்
அழகாய் நீந்திப் போகுது!
தாழைப் புதரின் அருகிலே
தலையைக் குனிந்து போகுது!

நிற்கச் சொன்னால் நிற்காது
நம்மை ஏற்றிச் செல்லாது
அக்க ரைக்குப் போகவே
அதனை நம்ப லாகாது!

— புலேந்திரன்

கேட்கட்டுமா டாக்டர்?

நாய் கடித்தால் என்ன மருந்தை உபயோகிப்பது?

● இ. கலையரசு, அனந்தபுரம்.

? நாய் கடித்தால் என்ன மருந்தினை உபயோகிப்பது?

! நாய் கடித்த இடத்தை உடனே சோப்புத் தண்ணீரால் கழுவ வேண்டும். காயத்தின் மீது 'டெட்டால்' அல்லது 'ஸ்பிரிட்'டைத் தடவ வேண்டும். காயத்திற்கு கட்டுப் போடக் கூடாது. தையல் (suture) போட்டு காயத்தை மூடக் கூடாது. மருத்துவரிடம் சென்று 'டெட்டனஸ் டாக்சாய்டு' (Tetanus Toxoid) - சுருக்கமாக T.T. என்ற தடுப்பு ஊசியை முதலில் போட்டுக் கொள்ள வேண்டும். கடித்த நாய் வெறிநாயாக இருக்குமானால் 'வெறிநாய்க் கடி தடுப்பு ஊசி' (Anti Rabies Vaccine) அவசியப்படும். இதில் பல வகை உண்டு. வழக்கமாக அரசாங்க மருத்துவமனைகளில் போடப்படும் ஊசி 'செம்பிள் தடுப்பூசி' எனப்படும். தொப்புளைச் சுற்றி தினமும் ஒரு ஊசி வீதம் 7லிருந்து 14 ஊசிகள் வரை தொடர்ச்சியாகப் போட வேண்டும். இந்த ஊசிக்குப் பதிலாக இப்போது ரேபிபூர் (Rabipur), வீரோரேப் (Verorab) என்ற தடுப்பு ஊசிகள் புதிதாக வந்துள்ளன. இவை தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கும். இவற்றைக் கை அல்லது இடுப்புத் தசையில் போட்டுக் கொள்ளலாம். மொத்தம் 6 ஊசிகள் போதும். நாய் கடித்த அன்று முதல் ஊசியைப் போட வேண்டும். பிறகு 3,7,14,30,90 வது நாட்களில் அதே தடுப்பு ஊசியை தவறாமல் மீண்டும் போட வேண்டும்.



● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? ஆபரேசன் செய்யும் போது கயநினைவிழக்கச் செய்ய முதுகுத் தண்டு வடத்தில் ஊசி போடுவது ஏன்?

! ஆபரேஷன் செய்யும் போது கயநினைவிழக்கச் செய்ய முதுகுத் தண்டு வடத்தில் ஊசி போடுவதில்லை. முதுகுத் தண்டுவடத்தில் ஊசி போடுவது வயிற்றுக்குக் கீழே உள்ள உடல் உறுப்புகளில் வலியுணர்ச்சி தெரியாமல் இருக்கத்தான். ஆபரேஷன் செய்வதற்கு முன்பு 'லிக்னோகெய்ன்' (Lignocaine) எனும் மருந்தை முதுகுத் தண்டுவடத்தில் செலுத்தி விட்டால் சில மணி நேரங்களுக்கு வயிற்றுக்குக் கீழ் உணர்வு தெரியாமல் இருக்கும். ஆனால் கயநினைவு மாறாது. நோயாளி விழித்துக் கொண்டுதான் இருப்பார். அவரை கயநினைவு இழக்கச் செய்ய சிரை (vein)க் குழாய் வழியாக 'டயசிபாம்' (Diazepam), 'பென்டசோசின்' (Pentazocin) போன்ற மருந்துகளில் ஒன்றை தேவைக்கேற்ப மருத்துவர்கள் பயன்படுத்துவார்கள். பிறகு ஆபரேஷன் செய்வார்கள்.

● ஈ. நிசார் அஹமது, பரங்கிப்பேட்டை.

? வெற்றிலை, பாக்கு போட்டால் புற்றுநோய் வருமா?

! வெற்றிலை பாக்குடன் புகையிலையையும் சேர்த்துப் போட்டால் புற்றுநோய் வரும். புகையிலையில் உள்ள நச்சுப் பொருள் வாயில் உள்ள அணுக்களை (cells)த் தூண்டி, அபரிமிதமாக வளரச் செய்து விடுகிறது. இதனால் புற்றுநோய் வருகின்றது.

டாக்டர்
கு. கணேசன்

● இரா. சரவணன், புனல்வாசல்.

? வயிற்றில் உள்ள குடல்பூச்சிகளை எப்படி அகற்றுவது டாக்டர்?

! மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடல்புழுக்களை ஒழிக்கும் மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட வேண்டும். மெபண்டசோல், அல்பெண்டசோல், டெட்ராமிசோல், பிப்பெரசின், பைராண்டல் என்று பல மாத்திரைகள் உள்ளன. இவற்றில் எதை, எவருக்கு, எந்த வயதில் கொடுக்க வேண்டும் என்பதை மருத்துவர்தான் முடிவு செய்ய வேண்டும். இதுமட்டுமின்றி, சுத்தம், சுகாதாரம் இரண்டுமே அவசியம். தெருக்களைக் கழிப்பிட மாக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டும். குழந்தைகளைச் சிறு வயதிலிருந்தே கழிப்பறைகளைப் பயன்படுத்தப் பழக்க வேண்டும். நகங்களை வளர விடாமல் வெட்டி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உணவில் ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்கறிகள், பழங்கள் இவற்றைத் தண்ணீரில் நன்கு கழுவிய பின்னரே பயன்படுத்த வேண்டும். வெறுங்காலோடு தெருவில் நடக்கக் கூடாது. அவசியம் செருப்பணிய வேண்டும்.


● ப. பாலாஜி, வேப்பந்தட்டை.

? இரத்தசோகை உள்ளவர்கள் அதிகமாக எந்தக் காய்கறிகளைச் சாப்பிட வேண்டும், டாக்டர்?

! இரத்தசோகை நோய் உள்ளவர்கள் இரும்புச் சத்து நிறைந்த காய்கறிகளைச் சாப்பிடுவது நல்லது. முக்கியமாக அவரைக்காய், வெண்டைக்காய், புடலங்காய், பூசணிக்காய், பீர்க்கங்காய், பீட்ரூட், முட்டைக் கோஸ், முருங்கைக்காய், காலிஃபிளவர் போன்ற காய்கறிகளிலும் எல்லா வகைக் கீரைகளிலும் இரும்புச் சத்து நிறைந்துள்ளது. பேரீச்சம்பழத்தில் இந்தச் சத்து மிகுதியாக உள்ளது. இவற்றோடு வைட்டமின் 'சி' உள்ள கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை, திராட்சை, நெல்லிக்காய், ஆப்பிள் போன்ற பழ வகைகளையும் கண்டிப்பாக சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இரத்த சோகை விரைவில் குணமாகும்.







● ஐ. சசிகுமார், ஆற்காடு.

? P.R.K. என்ற கண் அறுவை சிகிச்சை சென்னையில் எங்கு செய்யப்படுகிறது?

! P.R.K. என்பது 'Photo Refractive Keratectomy' என்ற பெயரின் சுருக்கம். இது ஒருவிதமான நவீன கண் அறுவை சிகிச்சை. லேசர் ஒளிக்கற்றையைப் பயன்படுத்தி செய்யப்படுவது. குறிப்பாக 'எக்ஸிமர் லேசர்' (Excimer laser) இதில் பயன்படுகிறது. கிட்டப்பார்வை (Myopia)யை சரிசெய்ய, கண்ணாடி அணிவதைத் தவிர்க்க, இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. 21 வயதுள்ளவர்களுக்கு இது உபயோகப்படும். சென்னையில் சங்கர நேத்ராலயாவிலும், விஜயா மருத்துவமனையிலும், ஐ ரிசர்ச் பவுண்டேஷனிலும் இந்த நவீன கண் அறுவை சிகிச் சைக்கு வசதி உள்ளது.

வஞ்சக நண்பன்!

மார்த்தாண்டன் ஒரு சிறந்த மன்னன். நல்ல பண்புகளும், அறிவும் வாய்க்கப் பெற்றவன்.

அரசர்க்குரியவைகளைத் தவிர சில அபூர்வமான வித்தைகளையும் அவன் கற்றிருந்தான். அவ்வித்தைகளில் நல்ல பழக்கமும் பெற்றிருந்தான். அவற்றைப் பிறருக்குச் சொல்லாமல் ரகசியமாகவே வைத்திருந்தான்.

மார்த்தாண்டனுக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் வஞ்சக குணம் உடையவன். நல்லவன் போல் நடிப்பவன். அவனை அரசன் புரிந்து கொள்ளவில்லை. அவன் நடிப்பை நம்பிவிட்டான். இருவரும் நெருங்கிப் பழகினர்.



வஞ்சகனைப் பற்றி மந்திரி அறிந்திருந்தான். அரசனிடம் பல முறையும் அவனைப் பற்றிச் சொல்லி எச்சரித்தான். ஆனால் மன்னனோ கேட்கவில்லை. வஞ்சகனையே நம்பினான்.

தன்னுடன் நெருங்கிப் பழகிய அவ்வஞ்சகனுக்கு அரசன் வித்தைகளை எல்லாம் கற்றுக் கொடுத்தான். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையையும் கற்றுக் கொடுத்தான்.

ஒருநாள் அரசனும் அவனும் உலாவச் சென்றனர். சோலையின் ஒரு மரப் பொந்தில் ஆண்கிளி ஒன்று இறந்திருந்தது. பக்கத்தில் பெண்கிளி இருந்து துக்கம் தாளாமல் கத்திக் கொண்டிருந்தது. மார்த்தாண்டன் கிளியின் நிலையைக் கண்டு மனம் வருந்தினான். அதன் துன்பத்தை மாற்ற நினைத்தான். எனவே, தன் வித்தையைப் பயன்படுத்தி தன் உடலிலிருந்து பிரிந்து அந்த ஆண்கிளியின் உடலில் புகுந்தான்.

ஆண் கிளி உயிர் பெற்றெழுந்தது. பெண் கிளி பேரானந்தம் அடைந்தது.


சமயத்தை எதிர் பார்த்திருந்த வஞ்சக நண்பன், தானும் அவ்வித்தையைத் தெரிந்திருந்ததால் உடனே தன் உடலிலிருந்து பிரிந்து மன்னன் உடலிற் புகுந்து கொண்டான். அது மட்டுமா? தன் உடலைக் கொளுத்தி விட்டான்.

நாடு திரும்பிய வஞ்சகன் மன்னனாக ஆட்சி நடத்தலானான்.

கிளி உடலிற் பாய்ந்த மார்த்தாண்டன் வேறு (மீள்வதற்கு) வழியின்றி கிளியாகவே அங்கும் இங்கும் அலைந்து வருந்தி கஷ்டப்பட்டான். அவ்வுடலிலேயே வாழ்ந்திருந்து இறந்து போனான்.

நல்ல நண்பர்களுடன் சேர்ந்தால் அவர்கள் நம்மைத் தம் உயிர் கொடுத்தேனும் காப்பர். ஆனால் நல்லவர் போல் நடிக்கும் வஞ்சக நண்பர்களுடன் சேர்ந்தால் அவர்கள் நம்மைச் சமயத்தில் கவிழ்த்தும், அழித்தும் விடுவர்.

— தங்க சங்கரபாண்டியன்



Hey! Look what I've got!
GOKULAM
It's the latest GOKULAM!
Give it to me! I want to read it first!
Crazy! What's in that book?
JUNE '95 ISSUE!
96 PAGES FOR JUST Rs. 5!
GOKULAM
The monthly magazine for children
PACKED WITH EXCITEMENT!
RUSH FOR YOUR COPY!
GOKULAM, 47 Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.



திரும்பி வரும்போது...

நீண்ட காலத்திற்கு முன்பு காக்கையும், மயிலும் சுத்தமான வெள்ளை நிறத்தில் இருந்தன. தங்களுக்கு வண்ண நிறமான உடல் இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என இரண்டும் ஏங்கின. இறைவனை நோக்கித் தவம் செய்ய முடிவு செய்தன.

இறைவன் தோன்றினார். "என்ன வரம் வேண்டும்" எனக் கேட்டார்.

''இருவருக்கும் வண்ணமயமான உடலைக் கொடுங்கள்'' என்றது காகம்.

''சரி தருகிறேன். கிழக்கு நோக்கி நூறு மைல் சென்றால் அழகான குளம் வரும். அதில் மூழ்கி எழுந்தீர்களானால் உங்கள் விருப்பம் நிறைவேறும்'' எனக் கூறி இறைவன் மறைந்தார்.

காகமும், மயிலும் சந்தோஷமாய் கிழக்கு நோக்கிப் பறந்து சென்றன. ஒரு இடத்தில் ஒரு பாட்டி வடை சுட்டுக் கொண்டிருந்தாள். பாட்டியின் பேரன் அழுது கொண்டிருந்தான். பாட்டி வடையைச் சுடுவதும், பேரனைத் தூக்கி சமாதானப் படுத்துவதுமாக திண்டாடிக் கொண்டிருந்தாள்.

'திரும்பி வரும் போதும் இந்தக் குழந்தை இப்படியே அழுது கொண்டிருந்தால், பாட்டி பேரனை சமாதானம் செய்யும் நேரத்தில் ஒரு வடையைத் தூக்கிக் கொண்டு வந்து விட வேண்டும்' என்று காகம் மனதில் திட்டமிட்டது.

''திரும்பி வரும்போது இந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தால், என் வண்ணத் தோகையை விரித்து ஆடி, குழந்தையின் அழுகையை நிறுத்த வேண்டும்'' என்று நினைத்தது மயில்.

இரண்டும் இறைவன் குறிப்பிட்ட குளத்தை அடைந்தன.

முதலில் மயில் குளத்தில் மூழ்கி எழுந்தது. வானவில்லைப் போன்ற வண்ணங்கள் அதன் தோகையில் உருவானது. மயில் சந்தோஷமாக ஆடியது. அடுத்து காகம் முழுகி எழுந்தது. தன் உடலைப் பார்த்து அது திடுக்கிட்டது. காரணம், அதன் உடல் கருமையாகி விட்டது!

"இது என்ன அநியாயம்" என்று புலம்பியது காகம்.

இறைவன் தோன்றினார். ''காகமே, உள்ளம் எப்படி இருக்கிறதோ அதன் படியேதான் எல்லாம் இருக்கும். உன் மனம் முழுவதும் கருமை. அதனால்தான் உனக்கு இந்த நிறம். உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருந்தால் எல்லாம் நல்லபடி நடக்கும். நீயே சொல். உனக்கு இது சரியான நிறம் தானே?'' என்று கேட்டார்.

காகம் தலை கவிழ்ந்தது. "இறைவா என் தவறை உணர்ந்தேன். வேறு வரம் கொடுங்கள். நான் எதை சாப்பிட்டாலும் மற்றவர்களோடு பகிர்ந்து சாப்பிட வேண்டும்" என்று வேண்டியது.

"அப்படியே" எனக் கூறி மறைந்தார் இறைவன்.

- **வாண்டுதாசன்**

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் 2-வது கதை



பி. லக்ஷ்மி



சத்தியம் செய்..!

கலங்கிய கண்களோடு அரசமரத்தடியில் அமர்ந்திருந்தான் விஷ்வந்த். அவன் மனதில் கவலையும் ஏமாற்றமும் நிறைந்திருந்தது. எவ்வளவு கனவுகளோடு; நம்பிக்கையோடு தேர்வின் முடிவுக்காகக் காத்திருந்தான்! கடைசியில், எல்லாமே கனவில் கட்டிய மாளிகையாகக் கலைந்து; சிதைந்து போய் விட்டதே!

பெருமூச்சுடன் வீடு நோக்கி நகர்ந்தான். நடப்பது சிரமமாக இருந்தது. கால்களில் பாறையைக் கட்டியது போல் கனம். அம்மாவுக்கு என்ன பதில் கூறுவது? அம்மாவை எண்ணியபோது கவலைகள் மேகம் போல சூழ ஆரம்பித்தன.

எவ்வளவு நம்பிக்கையோடிருந்தான்! நண்பர்கள் கூட, "விஷ்வந்த், உனக்குக் கிடைக்கலேன்னா யாருக்குடா கிடைக்கும்?" என்று கூறினார்களே!

விஷ்வந்தின் பள்ளியில் வருடா வருடம் ஒரு சிறந்த மாணவனுக்கு முழு 'ஸ்காலர்ஷிப்' வழங்கப்படுகிறது. ஒரு நுழைவுத் தேர்வு வைப்பார்கள். அதில் முதல் மதிப்பெண் வாங்கும்

மாணவனின் அவ்வருடத்திய செலவு முழுவதையும் பள்ளி நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும். அந்தத் தேர்வில்தான் விஷ்வந்த் தோற்று விட்டான்.

விஷ்வந்தின் வீட்டில் மூன்று பேர்கள். அவன், அவனது தாய், தம்பி. விஷ்வந்த்தின் வீட்டில் வறுமை என்றால் கடுமையான வறுமை. தாய் கூலி வேலை செய்து கொண்டு வரும் பணத்தில்தான் அவர்கள் மூவரும்



வாழ்ந்தாக வேண்டும். அதனால், பள்ளியில் கிடைத்து வந்த உதவித் தொகைதான் விஷ்வந்தின் கல்விக்கு வேராக இருந்தது. இப்போது அதற்கும் ஆபத்து வந்து விட்டது!

விஷ்வந்துக்கு வீட்டுக்குப் போகவே மனம் வரவில்லை. மீண்டும் கவலையோடு அவன் மரத்தடியில் சாய்ந்து அமர்ந்தான். நட்புணர்வோடு, செல்லமாக ஒரு கை, தோளைத் தொட்டது. திரும்பிப் பார்த்த விஷ்வந்த் திடுக்கிட்டான். ஸ்காலர்ஷிப்புக்காக நடந்த நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றிருந்த வேலாயுதம்! விஷ்வந்த் வேதனையை மறைத்துக் கொண்டு பலவந்தமாகச் சிரித்தான். வேலாயுதம் சற்றும் எதிர்பாராத விதத்தில் திடீரென்று விஷ்வந்தின் காலில் விழுந்தான். திடுக்கிட்டுப் பதறி எழுந்த விஷ்வந்த் அவனைத் தூக்கினான். வேலாயுதத்தின் கண்களின் மாலை, மாலையாகக் கண்ணீர்!

"வேலாயுதம்! என்ன இது? மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டிய நேரத்தில் ஏன் இப்படி அழுகிறாய்!" என்று படபடத்தான் விஷ்வந்த்.

"டேய்! விஷ்வந்த்! என்னை மன்னித்து விடு! ப்ளீஸ்!" என்று வேலாயுதம் விசும்பியபடி பெரிதாக அழ ஆரம்பித்தான்.

"உனக்கு என்ன ஆச்சு வேலு?" என்று எதுவும் புரியாமல் பரிவுடன் அவன் கண்ணீரைத் துடைத்தவாறே கேட்டான் விஷ்வந்த்.

"விஷ்வந்த்! உண்மையில் வழக்கப்படி இந்த ஆண்டும் நீதான் தேர்வில் வெற்றி பெற வேண்டியவன். நான் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக உன்னுடைய விடைத் தாள்களில் ஒன்றை யாருக்கும் தெரியாமல் எடுத்து விட்டேன். என்னை மன்னித்தேன் என்று கூறு விஷ்வந்த்!" என்று மீண்டும் அழுதவாறே கேட்டான் வேலாயுதம்.

"வேலு! நீ என்ன சொல்றே?" என்ற



திகைத்த விஷ்வந்திடம் நடந்ததை விளக்கினான் வேலு.

வேலுவிற்கு தாய், தந்தை கிடையாது. மாமா வீட்டில் வளர்ந்து வந்தான். மாமிக்கு வேலுவைப் படிக்க வைப்பதில் இஷ்டம் இல்லை. வேலு படிக்காமலிருந்தால் வீட்டிற்கு வேலை செய்ய வைக்கலாமே என்ற எண்ணம். ஆனால் வேலு நன்றாகப் படிப்பவன். வேலுவும், விஷ்வந்தும் ஒரே வகுப்புதான். முதல் இரண்டு ரேங்குகளும் இவர்களுக்குத் தான் சொந்தம். வேலுவின் மாமா, வசதியானவர் என்றாலும், வேலுவைப் படிக்க வைக்கத் தயங்கினார். எல்லாம் சுயநலம்தான் காரணம். படித்தால் வேலு உயர்ந்து பெரிய மனிதனாகி விடுவான் என்றும் தனக்கு அடங்க மாட்டான் என்றும் அவர் கணக்குப் போட்டார். சுயநலம் காரணமாக வேலு வளர்வதை அவர் விரும்பவில்லை. அதனால் வேலு தன் படிப்பிற்காக மாமாவின் கையை எதிர்பார்க்க முடியவில்லை. ஆகவேதான் பள்ளி உதவித் தொகையை எதிர்பார்த்துத் தேர்வுக்காக வேலு நன்கு படிக்க ஆரம்பித்தான். இருப்பினும் பொது அறிவைப் பொறுத்த வரை விஷ்வந்தை மிஞ்ச ஆளில்லை! அதனால்தான் என்றும் அவனுக்கு முதலிடம்! தேர்வு எழுதி விஷ் வந்தை வீழ்த்த முடியாது என்பதை நன்கு உணர்ந்த வேலு. அவனுடைய முதலிடத்தைப் பிடிக்கக்



குறுக்கு வழி ஏதாவது கிடைக்காதா என்று முயன்றான்.

வேலு தேடிய குறுக்கு வழி வலிய அவனிடம் வந்தது. வகுப்பாசிரியர் அவனிடமே தேர்வு விடைத்தாள்களைக் கொடுத்து தலைமையாசிரியரிடம் சேர்க்கச் சொன்னார். அந்தச் சில நிமிடங்களில் அவன் விஷ்வந்தின் விடைத்தாளில் இருந்து அதிக மதிப்பெண் தரக்கூடிய ஒன்றைத் தந்திரமாக அகற்றித் தொடர் எண்களை எழுதி விட்டான். தாள்களும் வேறு பள்ளியாசிரியர்கள் மூலமே திருத்தப்பட்டதால், வேலு செய்த மோசடியை யாராலுமே அறிய முடியவில்லை.

நடந்ததை அழுகையும் விசும்பலுமாக விவரித்து முடித்தான் வேலு; விஷ்வந்த், மரம் போல திகைத்து நின்றான். வேலுவே மறுபடி பேசினான்.

"விசு! இப்போ நான் தேர்வில் வெற்றி பெற்றாலும் மனசாட்சிக்கு என்னால் பதில் கூற இயலவில்லை. அது என்னைச் சித்ரவதை செய்கிறது. என் மன அமைதி பறிபோய்விட்டது. அதனால் ஆசிரியரிடம் எல்லா உண்மைகளையும் சொல்லிவிடப் போகிறேன்." என்று விம்பினான்.

"நில்லு வேலா!" என்று உறுதியான குரலில் அழைத்து அவனைத் தடுத்து நிறுத்திய விசு, "உண்மையாகவே நீ செய்துவிட்ட செயலுக்கு வருத்தப்படுவதாக இருந்தால், எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடு! என்றான்.

"என்ன விசு! என்ன சத்தியம்?" வேலாயுதம் புரியாமல் கேட்டான்.

"நீ இந்த விஷயத்தை யாரிடமும் இனிமேல் கூறமாட்டேன் என்று சத்தியம் செய்!"

"எதுக்கு விசு!" என்று அதிர்ச்சி மாறாமல் கேட்டான் வேலாயுதம்.

"வேலா, எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் போனது பெரிய இழப்புதான். அதில் துளியும் சந்தேகம் இல்லை. ஆனால், நம் இருவரின் குடும்ப நிலையையும் யோசித்துப்பார். படித்து உயர்ந்து அம்மாவையும் தம்பியையும் காக்கத் துடிக்கிறேன் நான். நீயும் அப்படித்தான் என்றாலும் உன் நிலையைவிட என் நிலை அத்தனை மோசமானது இல்லை. துன்



பத்தில் பங்கு கொண்டு எனக்கு நடப்பதுக்கும் ஊட்டிப் படிக்க வைக்க எங்கம்மா எனக்கு இருக்கிறாள். என்னைப் பற்றிக் கவலை இல்லை. பள்ளி இல்லாத நேரத்தில் ஏதாவது கூலி வேலையைப் பண்ணி சமாளித்துக் கொள்வேன். ஆனால், உனக்கு அப்படி யாரும் இல்லை. படிப்புக்கு முட்டுக் கட்டை போடத் தான் உனக்கு உறவினர்கள் இருக்கிறார்கள். அதனால் உன் படிப்பைத் தொடர இந்த உதவித் தொகை என்னை விட உனக்குத்தான் அவசியம் தேவை. இது நிலைக்க வேண்டும்.

அதனால், நீ செய்து விட்ட இந்தச் செயலை வேறு யாரிடமும் சொல்லவில்லை என்று நீ எனக்குச் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்" என்றான் விஷ்வந்த்.

"விசு, என் மனசாட்சி என்னை வதைக்கிறதே! நான் என்ன பண்ணுவேன்?" - வேலாயுதம் விசும்பலை நிறுத்த வில்லை.

"என்னிடம் கூறி விட்ட பிறகு, நானும் மன்னித்து அதை அனுமதித்து விட்ட பிறகு உன் மனசாட்சி உன்னை வதைக்கவே கூடாது வேலா. உம்... கேட்டபடி சத்தியம் பண்ணு?"

விஷ்வந்தின் நீட்டிய கரத்தில் நடுங்கும் கையால் அடித்துச் சத்தியம் செய்து விம்மினான் வேலாயுதம். அவனுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டுப் புதிய மனிதனாக வந்தான் விஷ்வந்த். இப்பொழுது ஏமாற்றத்தின் சுவடு கூட அவன் முகத்தில் இல்லை.

விஷ்வந்தின் அம்மா, வேலை பார்த்த வீட்டின் துணிக் கடை முதலாளி, அவன் காலையும், மாலையும் கணக்கெழுதிக் கொடுத்தால் மாதம் இரு நூறு தருவதாகக் கூறியிருந்தார். அம்மாதான் அவனை அனுப்ப மறுத்து வந்தாள். இப் போது அம்மாவிடம் போராடி எப்படி யாவது அதில் சேர்ந்துவிட வேண்டும். அதே சமயம் படிப்பையும் நன்கு முடித்து அம்மா வின் கஷ்டங்களுக்கும் முடிவு கட்ட வேண் டும். இனி வேலுவின் படிப்பிற்கும் தன்னா லியன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் விரைந்தான் விஷ் வந்த்.

சிரிப்பு...

"ஏன் சார் அவனைப்போட்டு அப்படி அடிக்கிறீங்க?"
"ஏண்டா 'லேட்'டுன்னு கேட்டா இரயில் வண்டியில காற்று போயிடுச்சுன்னு சொல்றானே!

— கோ. குப்புசாமி, சங்கராபுரம்







"நம்ம சார் நான் தப்பாய் போட்ட கணக்குக்கும் குட்டு போட்டார்டா..."
"அப்படியா! நோட்டைக் காட்டு..."
"அவர் குட்டு போட்டது தலையில்டா..."

—மு.செந்தில்குமார்

"உங்க வீட்டுக்குள்ளே ஊஞ்சல் ஆடும் சத்தம் கேட்குதே? ஊஞ்சல் இருக்குதா?"
"அது ஊஞ்சல் சத்தம் இல்லை... எங்க அப்பா விடும் குறட்டை சத்தம்...?"

வலங்கை ஜி. ராஜசேகர்.






"உன் பெயர் என்ன?"
"ம.துரை"
"எந்த ஊர்?"
"மதுரை"

— ஆறுபாதி புகழேந்தி



"கியூவுல எல்லாரையும் 'தள்ளி'க்கிட்டே இருக்கானே, அவன் பெயர் என்ன?
"புஷ்'பதுரை!!

— ப. கணேஷ்ராகவன்


மரகதச்சிலை
முன்னுரை
நான்தான் ஆதித்தன். மகேந்திரபுரி
மன்னர் மன்மத வர்மரின் புதல்வன். என்னை
எல்லோரும் 'வீராதி வீரன்' என்று புகழுகிறார்கள்.
யாராலும் அடக்க முடியாத நீலவேணி என்ற குதிரையை
அடக்கிய நான், நீலகேசி என்ற கொடிய மந்திரவாதியின்
கோட்டத்தையும் அடக்கி அவனைக் கொன்றேன். உண்மை
தான். ஆனால், மலைவிழுங்கியின் வெண்கலக் கோட்டைப்
பாதாளச் சிறையிலே என் பலமெல்லாம் இழந்து கிடந்தேனே,
அப்போது என்னை விடுதலை செய்து காப்பாற்றினாளே
பத்மினி, அவள் வீரம்தான் வீரம். நான் வீரனாக சந்தர்ப்ப
மளித்தவளோ நிர்மலா! இவர்களெல்லாம் யார் - என்
கிறீர்களா? விவரமாகச் சொல்கிறேன்.
ஒரு நாள் தர்பாரிலே...
கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி


அரசே! யாரோ ஒரு பெண், கண்ணீரும் கலங்கிய உள்ளமுமாகத் தங்களைக் காணக் காத்திருக்கிறாள் அரண்மனை வாசலில். அரச குடும்பத்தவளாகக் காணப்படுகிறாள்.
அரச குடும்பத்துப் பெண் அரண்மனை வாயிலிலா? உள்ளே அனுப்பிவை.
மன்னர் மன்னவா காப்பாற்ற வேண்டும்! என் பெற்றோரும் சகோதரரும் நிர்க்கதியான நிலையிலிருக்கிறார்கள்.
பெண்ணே, பதற்றமடையாமல் உன் துயரத்தைச் சொல். நீ யார்? உன்னை எங்கோ பார்த்தது போலிருக்கிறதே?
இந்த அபாக்கியவதியை உங்களுக்கு முன்பே தெரியும். ருத்ரசிம்மரின் மகள் நான்.என் பெயர் நிர்மலா. மந்திரவாதி நீலகேசியின் சூழ்ச்சியாலே - அதை எப்படிச் சொல்வேன்? ஒருநாள் அப்பாவின் அவைக்கு....


ருத்திரசிம்மரே! நினைத்ததைச் சாதிக்கும் திறமை பெற்ற நீலகேசி யாசகம் கேட்டு வந்திருக்கிறேன். சக்தி மாகாளி உமது மகளைத் தனக்குக் காணிக்கையாகக் கேட்கிறாள்.
உன் விளையாட்டை ரசிக்கும் குழந்தை இல்லை இங்கிருப்பவர். இது அரசவை.
அத்தனை ஆணவமா? நீலகேசியைப் பற்றித் தெரியாது உனக்கு.
அப்போது துள்ளி எழுந்தான் என் அண்ணா ஆனந்தன்.
தெரியும். மந்திர தந்திரங்களால் மக்களைஏமாற்றும் அயோக்கியன் நீ. உன்னை நாட்டை விட்டே விரட்ட வேண்டும்.
என்னை விரட்டவா? வெறும் வித்தையாடி என்றா என்னை நினைத்தீர்கள்? நீலகேசியின் முகத்துக்கு நேரே கத்தியை நீட்டிய உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்... இதோ!


ஏதோ ஒரு பொடியைத்தூவினான். வண்ணப் புகைப்படலங்கள் எழுந்தன. என் அப்பாவும் அம்மாவும் அண்ணனும் மரகதச் சிலைகளாகிவிட்டார்கள். அவர்களைத் தூக்கிக் கொண்டு எங்கோ மறைந்துவிட்டான் மந்திரவாதி நீலகேசி.
குழந்தாய் நிர்மலா! கவலைப்படாதே. உன் தந்தை என் பாலியத் தோழர். அவரது துன்பம் என்னுடைய துன்பம். மந்திரவாதியிடமிருந்து அவர்களை மீட்பது இனி என் பொறுப்பு.
அப்பா அந்தப் பணியை எனக்குத் தாருங்கள்.
மகனே, ஆதித்தா! உன் வீரத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. மந்திரவாதி நீலகேசியைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் சாமானியனல்ல.
அப்போது நிர்மலா -
இளவரசே, உங்களுடன் நானும் வருகிறேன். தடை சொல்லாதீர்கள்.
ஆதித்தா! இது மந்திரவாள். இதை வைத்திருப்பவனுக்குத் தோல்வியே வராது. நீ மேற்கொண்டுள்ள காரியமோ மகத்தானது. உன்னுடன் குள்ளன் காளியையும் அழைத்துச் செல். வெற்றியோடு வா.

இளவரசி நிர்மலாவுடன் குள்ளன் பின்தொடர - ஆதித்தன் பயணத்தைத் தொடங்குகிறான். இவர்களுடைய செயல்களையெல்லாம் நீலகேசி, தன் மந்திரக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருக்கிறான்.






பெருமழையினால் ஆதித்தனின் பிரயாணம் தடைப் பட, காளியின் யோசனைப்படி ஒரு குகைக்குள் நுழைகிறார்கள் ஓய்வெடுக்க. குகையினுள் ஒரு புதிய உலகைப் பார்க்கிறார்கள்.
ஆதித்தா! ஏதோ ஒரு பயங்கர நிழல் நம் மீது விழுகிறது!
நம் ஓட்டத்தை மிஞ்சும்படி யான வேகத்துடன் அது நம் மைத் துரத்துகிறது. அதன் கர்ஜனை நம் காதைச் செ விடாக்கி விடும் போலி ருக்கே?
ஓடுங்கள்! இக்கொடிய பிராணியிட மிருந்து நாம் தப்பியாக வேண்டும்.


ஓடும்போது ஒரு மரத்தின் வேர் தடுக்கி நிர்மலா கீழே விழ -
வேரில் சிக்கிய காலை விடுவித்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறாள்.
ஐயோ! பீதியினால் நிர்மலா நினைவிழந் துவிட்டாளே. அவளை அந்த மிருகத்திடமி ருந்து காப்பாற்றி யாக வேண்டும்.
மின்னலெனப் பாய்ந்தான் ஆதித்தன். மிருகத்தின் காலடியில் மயங்கிக் கிடந் தவளைக் குபீரென்று தூக்கிக் கொண்டு....
....ஓடிய ஆதித்தனை அக்கொடிய மிருகம் தன் வலுவான கை யினால் அறைந்து வீழ்த்த முயன்றது. மயிரிழையில் அதன் தாக்குதலிலிருந்து தப்பினான் ஆதித்தன் இதனிடையில் குள்ளன் -
இம்மிருக ங்களுக்குத் தீ என்றால் பீதி. ஆகவே, சிக்கி முக்கிக் கற்களை உரசி இக்கட் டைகளில் தீப்பற்ற வைத்து



கொழுந்து விட்டெரியும் கொள்ளிக்கட்டையால் அதன் வேகம் குறைந்தது.... ஆனால்...
எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.
காட்டுக் கொடிகளைப் பிணைத்து முறுக்கி, காளி ஒரு பெரிய பொறி தயாரிக்கிறான்.
ஆதித்தன் மிருகத்தைச் சீண்டிக் கிளப்ப...



வா...வா! இப்படித்தான் இந்த வழியாக வா!
சபாஷ் ஆதித்தா! அது நாம் எதிர் பார்த்தபடி குறிப்பிட்ட எல்லைக் குள் வந்துவிட்டது. இந்தக் கொடியை இழுத்தால் போதும். காட்டுக் கொடி கள் அதன் உடல் மீது விழுந்து அதைப் பிணைத்துவிடும்.
காடே கிடுகிடுக்க ஆர்ப்பரிக்கிறதே! கட்டுக்களை அறுத்தாலும் வியப்பதற்கில்லை.
என் வாள் அதன் உடலைத் துளைக்காது. இந்த மரத்தைச் சீவிக் கூராக்கி அதன் உடலில் பாய்ச்சித்தான் அதைக் கொல்ல வேண்டும்.
பலே ஆதித்தா! அதைக் கொன்று வெற்றிவாகை சூடிவிட்டாய்.


கொடிய மிருகத்தைக் கொன்றபின், தங்கள் குதிரைகளைத் தேடிப் பிடித்துப் பிரயாணத்தைத் துவக்கினார்கள். ஆனால் அந்த அடர்ந்த கானகத்தில் வழி தெரியவில்லை. அப்போது தொலைவில் ஒரு கிழவன் தோன்றினான்.
ஐயா பெரியவரே! யாளிக் குன்றத்துக்குப் போகும் வழி தெரியுமா உங்களுக்கு?
மகனே! நானோ வயதான கிழவன். இந்தக் கானகத்தை விட்டு நான் எங்குமே போனதில்லை. நீங்கள் இனிமேல் பிரயாணம் செய்ய முடியாது. இருட்டிவிட்டது இன்றிரவு என் குடிசையில் தங்கலாம், வாருங்கள்.
அதோ என் குடிசை. பசியாறிப் படுத்து உறங்குங்கள்.


ஹ...ஹ...ஹா! பறவைகள் தானாகவே என் வலையில் வந்து சிக்கிக் கொண்டுவிட்டன. நீலகேசியின் வல்லமை அறியாதவர்கள்.
ஏ, மாயா மோகினி! நீ நிர்மலாவாக உருமாறி ஆதித்தனோடு செல். உன் மீது அவன் வெறுப் படையும்படி நடந்து கொள்.
ஏ, பூதமே! நிர்மலாவைத் தூக்கிச் சென்று வேறோர் இடத்தில் போடு.
மகளே, நாகநந்தினி! நீ ஆதித்தனை மயக்கி, உன் வசப்படுத்திக் கொள்.
கிழவன் மந்திரவாதி என்பதையோ, இரவில் நிகழ்ந்த ஆள் மாறாட்டங்களையோ அறியாத ஆதித்தன் காலையில்....
பெரியவரே, போய் வருகிறோம். விடை கொடுங்கள்...
குள்ளன் குழம்புகிறான்.
அரசகுமாரி நிர்மலாவின் உருவமும் பார்வையும் பேச்சும் என் மனத்தில் ஏனோ காரணமற்ற கலக்கத்தை உண்டாக்குகிறது. ஒருவேளை...? சீச்சீ! என் உள்ளம் தடுமாறுவானேன்?
போலி நிர்மலா தன் கைவரிசையைக் காட்டுகிறாள்.
உங்களை நினைத்தேன் சிரி புத் தாங்கவில்லை.
ஏன் இப்படிச் சிரிக்கிறாய், நிர்மலா?



அந்த மிருகத்தைக் கண்டு நடுங்கிப் பயந்து எப்படி ஓடினீர்கள்.. ஹ...ஹ...ஹா!
உன் தந்தை என் தந்தையின் நண்பர் என்பதினால், உன் ஏளனப் பேச்சைச் சகித்துக் கொள்ளுகிறேன். இல்லாவிடில் -
மாய நிர்மலா, மேலும் மேலும் ஆதித்தனைக் கோழை என்று ஏசுகிறாள். அன்று அரசவையில் தான் அழுது கண்ணீர் விட்டதும் கூறிய செய்திகளும் கட்டுக் கதை என்று சொல்லிக் கலகல வென்று சிரிக்கிறாள். இதற்குமேல் தாங்க முடியாத ஆதித்தன் அவளைக் கைவிட்டுக் குள்ளனுடன் முன்னேறுகிறான். போலி நிர்மலாவின் சிரிப்பொலி அலை அலையாக வந்து அவன் காதுகளைத் தாக்கி அவனை விரட்டுகிறது.
இளவரசே! நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். குடிசையைச் சுற்றிப் பூதங்கள் கூத்தாடின. அந்தக் கிழவன் நீலகேசியாக மாறி, நிர்மலாவைத் தூக்கிக் கொண்டு போகிறான். இப்படி என்னவெல் லாமோ பயங்கரமாக - காலையில் நம்மோடு கிளம்பி யது நிர்மலாதானா? சந்தேகமாக இருக்கிறது.
உன் கனவுகளைச் சொல்லி என்னை மேலும் குழப்பாதே. அவளைப் பற்றி என்னிடம் பேசாதே.


நெடுநேரப் பயணத்துக்குப் பின் வழியில் மற்றொரு காட்சி. ஒரு முரடன் ஒரு பெண்ணைத் துன்புறுத்துவதைக் காண்கிறான் ஆதித்தன்.
ஐயோ! என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா?
அபலைகளிடம் அடாத முறையில் நடந்து கொள்ளுபவனின் கதி இதுதான்!
பெண்ணே, உன்னைப் பார்த்தால் உயர் குலத்தில் பிறந்தவளாகத் தெரிகிறதே. நீ யார்? இந்த முரடனிடம் எப்படிச் சிக்கினாய்?
ஐயா, நான் ஒரு துர்ப்பாக்கியவதி. என் கதை சோகமானது. என் பெயர் ரூபமதி.
என் தந்தை, நான் விரும்பிய ஓர் அரச குமாரனுக்கு மண முடித்துத்தர திட்டமிட்டார். ஆனால் புலிக்கண்ணன் என்ற இவனும், சிங்கமுகன் - வேங்கை மார்பன் என்ற இவன் சகோதரர்களும் என்னைத் தங்களுக்கு மணம் செய்து தரும்படி கேட்டனர் என் தந்தை மறுத்துவிட்டார். ஆகவே, மணப்பந்தலில் புகுந்து என் மணாளனைக் கொன்று என்னையும் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து விட்டான் -இந்தப் பாவி....
கண்ணீர் விடாதே பெண்ணே... உன்னை உன் பெற்றோரிடம் சேர்ப்பித்து விடுகிறேன். காளி, அந்தக் கயவனின் வாளையும் கேடயத்தையும் எடுத்துக் கொள்.
(தொடரும்)

தூரப் போவதில்லை...

"**இ**ன்று செலவுக்கு என்ன செய்வது? கையில் சல்லிக்காசு கூட இல்லையே" என்று எண்ணியவாறு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு தெருவில் இறங்கினேன்.

"தம்பி தம்பி" என்று யாரோ அழைத்தார்கள்.

பக்கத்து வீட்டு மாமிதான்.

"ரேஷன்ல சீனி போடறாங்களாம். கொஞ்சம் வாங்கித் தந்துட்டுப் போ தம்பி!" என்று கூறியபடியே இருபது ரூபாய் நோட்டையும், பையையும், ரேஷன் கார்டையும் தந்தாள். கடைக்குப் போய் இருபது ரூபாயைப் பிரித்தால், அதற்குள் மடிக்கப்பட்ட ஒரு பத்து ரூபாய் நோட்டு!

அடிச்சது லக்கி. இன்னிக்கு செலவுக்கு இது போதும். ஜாலியா ஒரு சூப்பர் சினிமாவுக்குப் போகலாம் என்று நினைத்தேன்.

ஒரு வழியாக சர்க்கரையை வாங்கிக் கொண்டு சென்றேன். மாமா, மாமியைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார்.

"நான் முப்பது ரூபாதான் உங்கிட்ட கொடுத்தேன். பிரிச்சிக் கூடப் பாக்காம அப்படியே அவங்ககிட்ட கொடுத்துடியா?" – இது மாமா.

"அப்படியே கொடுத்திருந்தாலும் எங்கும் போகாது. நம்ம பாபு திருப்பிக் கொடுத்துடுவாங்க. ரொம்ப நல்ல பையன்"– இது மாமி.

"அதான் இல்லைன்னேன்! நான் பாக்கலியேன்னுதான் இன்னிக்கு சொல்லப் போறான்."

"அவன் மற்றவர் பொருளைத் தொடக் கூட மாட்டான். கண்டிப்பா திருப்பிக் கொடுத்துடுவான்" என மாமி உறுதியாகச் சொன்னது எனக்கு சுரீரென்றது.

என்மேல் எத்தனை நம்பிக்கை இந்த மாமிக்கு! இதையா அழிக்கப் போகிறேன்!

"ச்சே...! என்ன … நான்.

…மி என் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்காங்க! அவங்களை மோசம் பண்ணப் பார்த்தேனே! இந்தப் பத்து ரூபாயைத் திருப்பித் தந்துடணும்'' என்று திடீர் முடிவு செய்தேன்.

"மாமி...! இந்தாங்க சீனி. அப்புறம், அந்த இருபது ரூபா நோட்டுக்குள்ள ஒரு பத்து ரூபா இருந்திச்சி. நீங்க பாக்கலியா? இந்தாங்க!'' எனக் கூறிப் பணத்தைக் கொடுத்தேன். மாமி நன்றியுடன் என்னைப் பார்த்தாள்.

"இந்தக் காலத்திலும் உன்னைப் போல நல்ல வங்க இருக்கறதால்தான் கொஞ்சமாவது மழை பெய்யுது. பிறர் பொருளுக்கு ஆசைப்படாத நீ மிக உயர்ந்த நிலைக்கு உயருவே" என மாமி கூறியது எனக்குப் பெருமையாக இருந்தது. சினிமா பார்த்திருந்தால் அந்த அளவுக்கு மனநிறைவும், மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகம்.

"பாபு, காபி சாப்பிட்டு விட்டுப் போ" என்றார் திகைப்பில் இருந்து மீண்ட மாமா.

காப்பியை சாப்பிட்டு விட்டு புது மனிதனாக சைக்கிளில் ஏறினேன். மாமி என்மேல் வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையும், ஆசியும் எனக்கு சிறந்த பாதையைத் தேடித் தரும் என்ற மன உறுதியும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

பி. ஞான மூர்த்தி





2வது சாலை



11. மாயாண்டி வருகை!

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டு வரும் போது நான்கு நண்பர்களும் கோவில் வாசலில் இறங்கினர். மல்லிகைக் கொடியில் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்த ராஜா இவர்களைப் பார்த்ததும் அருகில் வந்தான்.

"அண்ணே! ஒரு சந்தோஷமான சமாசாரம். சந்தீப் போட அப்பாவை டிஸ்சார்ஜ் செய்துட்டாங்களாம். இன்னும் இரண்டு வாரம் ரெஸ்ட்லே இருந்தா போதும் என்று டாக்டர் சொல்லி விட்டாராம். நம்ப கிராமத்திலேதான் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளப் போறாரராம். அதனால இன்றைக்கு ராத்திரியே கிளம்பி நாளை விடியற்காலை ஐந்து மணிக்கு வரப் போறாங்களாம்" என்றான் மயிலு மகிழ்ச்சியான குரலில்.

சந்தீப்பின் அப்பா வரப் போகிறாரா! அப்படியானால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தக் கிராமத்தை விட்டுக் கிளம்பி விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டான் ராஜா.

"என்ன அண்ணே? பதில் சொல்லாம அப்படியே திகைச்சு நிற்கிறீங்க?"


"ஒண்ணுமில்லே. நீங்க சொன்ன சமாசாரத்தைக் கேட்டு மனசுக்கு எம்புட்டு சந்தோசமா இருக்கு தெரியுமா? ஒரு முக்கியமான விஷயம். இந்தக் கோவில்லே எனக்கு முன்னால வேலை பார்த்துக்கிட்டிருந்த பெரியவரு முத்துசாமி இன்னும் ரெண்டு நாள்லே வரேன்னு குருக்கள் ஐயாவுக்குக் கடுதாசி போட்டிருக்காராம். அதனால நான் கிளம்பி வேற எங்கேயாவது போவலாம்னு நெனைக்கிறேன்."

"அண்ணே! அப்ப எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போறதா முடிவு எடுத்திட்டீங்களா?" என்றான் டேவிட்.

"அப்ப எங்களையெல்லாம் மறந்து விடுவீங்களா?" - முருகன்

"அண்ணே! நீங்க எங்களை மறந்து போனாக் கூட எங்கே எல்லாம் வாட்டர் பேக்கை பார்க்கறீங்களோ... அங்கே எல்லாம்... எங்க ஞாபகம் கட்டாயம் உங்களுக்கு வந்துடும். தண்ணி இல்லாத பள்ளியில படிக்கிற பசங்கன்னு எங்க நினைவு வந்துடும். இல்லே அண்ணே?" - இது மயிலு.

த. ஜானகி



சொல்லுங்கள்....?

இப் பிறவியில் நாம் முயன்று
தேடிப் பெற்றிடின் - அது
எப் பிறப்பும் தொடர்ந்து வந்து
சிறப்புச் சேர்க்கு மாம்
இப்படி ஓர் செல்வம் இந்த
உலகில் இருக்குதா? - இருப்பின்
எனக்கு உடனே அதனைப் பற்றி
எடுத்துச் சொல்லுங்கள்.

வெள்ளத் தாலே அந்தச் செல்வம்
அழிந்து விடாதாம் - எந்த
வெப்பத் தாலும் அது எரிந்து
கருகி விடாதாம்
அள்ளி அள்ளிக் கொடுத்த போதும்
குறைந்து விடாதாம் - அந்த
அரிய செல்வம் பற்றி நானும்
அறியச் சொல்லுங்கள்

கேடில் லாத சிறந்த செல்வம்
அந்தச் செல்வமாம் - எந்த
கேட்டி னையும் தீர்க்கும் திறன்
பெற்ற செல்வமாம்
தேடி அதை உடனே பெற
நான் துடிக்கிறேன் - வழி
தெரிந்தவர்கள் சொன்னால் அதை
வணங்கி ஏற்கிறேன்.

- ரா. பொன்ராசன்

"அண்ணே! அவசரப்படாதீங்க. சந்தீப்போட தாத்தா நிச்சயம் உங்களுக்கு ஏதாவது வேறு வேலை வாங்கித் தருவார். நாங்கள் உங்களைப் போக விட மாட்டோம்" என்றான் டேவிட்.

"ஆமாம் அண்ணே. நீங்கள் எங்களை விட்டு எங்கும் போகக் கூடாது" என்று மூன்று பேரும் சேர்ந்து கூவினர்.

இதைக் கேட்ட ராஜா அப்படியே நெகிழ்ந்து விட்டான். அணு அணுவாக அவன் மனம் நெகிழ்வதை அவனால் உணர்ந்து அனுபவிக்க முடிந்தது. "நான் மாறி விட்டேன். மாறி விட்டேன்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

"அண்ணே! நாங்க வரோம். சந்தீப் போட பாட்டிகிட்டே செய்தியைச் சொல்லணும்" நண்பர்கள் கிளம்பி விட்டனர்.

மாலையில் கதிரவன் மலைவாயிலில் ஓய்வு எடுக்கச் சென்று விட்டான். இரவு ஆமை வேகத்தில் வந்து கொண்டிருந்தது. அத்தியூரை விட்டுச் செல்ல வேண்டும் என்று நினைக்கும்பொழுதே ராஜாவின் உள்ளத்தில் வேதனை பொங்கிப் பொங்கி எழுந்தது. இரவு சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. பேசாமல் கதவைச் சாத்திக் கொண்டு படுத்துக் கொண்டு விட்டான்.

ஏதேதோ எண்ணியபடி தன்னையும் அறியாமல் கண்ணயர்ந்து விட்டான்.

"டொக் டொக் டொக்..."


வீட்டின் பின்பக்கக் கதவு தட்டப்படும் ஒலி கேட்டு திடுக்கிட்டுக் கண் விழித்தான் ராஜா.


வந்திருப்பது மணியாக இருக்குமோ?

கதவைத் திறந்ததும் பூனை போல் உள்ளே... நுழைந்தவனைப் பார்த்ததும் ராஜா ஒரு வினாடி திடுக்கிட்டான்.

அது அவர்களையெல்லாம் ஆட்டி வைக்கும் கொடுமைக்குப் பெயர் போன மாயாண்டி. அவன் எது வேண்டுமானாலும் செய்யக்கூடியவன். அவன் எப்படி இங்கே வந்தான்! இங்கே தன்னுடைய இருப்பிடம் எப்படி அவனுக்குத் தெரிந்திருக்கக்கூடும்!

"மாயாண்டி... நீ நீ எப்படி... இந்த





நேரத்திலே?"

ராஜாவின் பயம் நிறைந்த குமுறல், மாயாண்டிக்கு வேடிக்கையாக இருந்தது.

"என்னை இங்கே எதிர்பார்க்கவே இல்லை இல்லையா ராஜா? இதுதான் மாயாண்டியின் பெருமை. நான் என்ன பண்ணுவேன், எங்கே வருவேன்னு யாராலும் ஊகிக்க முடியாது. நான் எங்கே வேணுமானாலும், எப்போ வேணுமானாலும், எப்படி வேணுமானா லும் வருவேன்," என்று பெரிதாகச் சிரித்த மாயாண்டி,

"மணிதான் உன்னோட இருப்பிடத் தைப் பற்றித் தெளிவாகச் சொன்னான். போலீஸ்காரங்ககிட்டே மாட்டிக்காம இருக்கத்தான் உன்னை மாதிரி பட்டிக் காட்டான் வேஷத்திலே வந்திருக்கேன்" என்றான்.

என்ன பேசுவது என்று ராஜா திகைத் துக் கொண்டிருந்த போது மாயாண் டியே பேசினான்.

"இன்னும் ஒரு வாரத்திலே இந்தத் தமிழ் நாட்டை விட்டு விட்டு வட இந்தி யாவுக்கே போய் அங்கேயே செட்டி லாகி விடலாம்னு நினைக்கிறேன்" என்று மாயாண்டி கூறினான்.

"அப்போ, பிழைப்புக்கு வழி?"

"ஹஹ்ஹஹா.... உன்கிட்ட ஒரு சாவி இருக்கு இல்லே?"

"இருக்கு."

"தேடிப் பார்க்கணும்னு மணிகிட்டே சொன்னாயாமே?"

"ஏதோ அந்த சூழ்நிலையிலே அப் படிச் சொன்னேன். இல்லாவிட்டால் சாவியைக் கொண்டா கொண்டா என்று நச்சரிப்பான்."

"இதோ... என்கிட்டே இன்னொரு சாவி இருக்கு. இந்த இரண்டு சாவியை யும் போட்டுத் திருப்பி பெட்டியைத் திறந்து... வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்."

சிற்று முடையும் ராமசாமி தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல ஒரு நினைப்பு ராஜாவுக்குத் தோன்றி மறைந்தது.

"ஒரு முக்கியமான தலை போகிற வேலையைச் செய்து முடிக்கத்தான் நான் இங்கே வந்திருக்கேன்."

"என்ன வேலை?"

"இப்ப சொல்ல மாட்டேன். விடியற் காலையிலே எழுந்திருக்கணும். அப்ப சொல்றேன். ரொம்ப களைப்பாக இருக்கு. நான் தூங்கப் போறேன். நீயும் தூங்கு."

மாயாண்டி பையை ஓரமாக வைத்தான். துண்டைத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டு தூங்கி விட்டான்.

'அப்படித் தலைபோகிற முக்கிய வேலையாக என்னதான் அப்படி இருக்கிறது!' என்று எண்ணியபடியே ராஜாவும் கண்களை மூடிக் கொண்டான்.

அலாரம் வைத்து எழுப்பாமலேயே 'டாண்' என்று நாலே கால் மணிக்கு மாயாண்டி விழித்துக் கொண்டான்.

"ராஜா எழுந்திரு. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள்ளே... நாம் இந்த கிராமத்தை விட்டே கிளம்பியாக வேண்டும்."

ராஜா கண் விழித்துக் கொண்டான். அடுத்த கால் மணி நேரத்தில்... இருவருமே கிளம்பத் தயாராயினர்.

"ராஜா! இந்தா... என்னோட... சாவி. இதையும் உன்னோட சாவியோடு சேர்த்து வைத்துக் கொள்."


காவித் திப் பெட்டிக்குள் பத்திரப் படுத்தி வைத்திருந்த தன்னுடைய சாவியோடு மாயாண்டியின் சாவியையும் சேர்த்து வைத்துக் கொண்டான் ராஜா.

அப்பொழுதுதான் இரவு மாயாண்டி சொன்னது ஞாபகத்திற்கு வரவே கேட்டான்.

மாயாண்டி.... ஒரு முக்கியமான வேலையைச் செய்து முடிக்கணும். காலையிலேதான் சொல்வேன் என்று சொன்னாயே? அது என்ன வேலை?"

"மாயாண்டி விஷயத்தைச் சொன்னதும் ஒரு வினாடி.... ராஜாவால் பேசக் கூட முடியவில்லை. தன்னுடைய அதிர்ச்சியைச் சமாளித்தபடி கேட்டான்.

(தொடரும்)




"அவர் வாழ்க்கையிலே படிப்படியாய் முன்னுக்கு வந்தவர்."

"என்ன வியாபாரம் செய்யறார்?"

"ஏணி வியாபாரம்!"


- சீர்காழி சாமா



"எப்படி பிழைப்பு ஓட்டறே?"

"நாலு புத்தை வாடகைக்கு விட்டிருக்கேன்!"


- கே. சோமசேகர்



"நம்ம எறும்பு நண்பர்கள் எல்லாம் மாநாடு போடறாங்களே ஏன்?"

"எறும்புக் கொல்லி மருந்தை ஒழிக்கத்தான்!"

- ஆர். ஜெயாசுந்தர்



அலையே....

உருண்டு திரண்டு உருவாகி
உடனே ஓடி வருகின்றாய்
கரையைத் தொட்டிடும் பந்தயமோ
கலந்து கொள்ள வரம்புண்டோ?

கோடி கோடி ஆண்டுகளாய்
கடலில் நடக்கும் பந்தயத்தில்
ஓடி வந்து வென்றவர்கள்
ஒருவர் உண்டோ சொல்லிடுவாய்.

முடிவே இல்லாப் பந்தயமோ?
மோசடி ஏதும் நடக்கிறதோ?
ஓடித் தொட்டுத் திரும்புறாய்
ஒளிக்கக் காரணம் உண்டோ சொல்?

— **பி.சி. ரகு, பள்ளிச்சேரி.**

முயல் அண்ணன் வருகிறார்!



முயல் அண்ணன் வருகிறார்
மெதுவாய் மெதுவாய் வாருங்க
பயமே இல்லை கேளுங்க
பார்த்தால் மறைவார் ஒளியுங்க.

ஆமை மாமா வென்றிட்ட
அருமை முயல் வருகிறார்
தீமை எதுவும் செய்திடா
தங்க முயல் வருகிறார்.

சோம்ப லாலே தோற்றிட்ட
சின்ன முயல் வருகிறார்
நாமும் ஒளிந்து அவரையே
நக்கல் செய்வோம் வாருங்க!

— **எம். முகமது உசேன்,**
மேல்கரைப்பட்டி.

காகம்



காக்கா கூட்டம் இதுவுங்க
கவலை இல்லா இனமுங்க
ஒற்றுமை உணர்வின் சின்னங்க
உயர்ந்த குணங்கள் சொந்தங்க

காகா என்றே கரையுங்க
காரணம் உண்ண உணவுங்க
காகா இவற்றின் மொழியுங்க
குந்தி வகுப்பும் நடத்துங்க.

— **எம். சுபைதா பர்வீன்,**
பெரிச்சிபாளையம்.

தேசத் தந்தை

அகிம்சை என்ற சொல்லுக்கு
அர்த்தம் காட்டி வாழ்ந்தவர்
பகையை ஒழித்த புனிதராய்
பாரத நாட்டில் தோன்றியவர்.

சுதந்திரம் பெற்றிடப் பலமுறை
சிறையில் இருந்து வாடியவர்.
மதங்கள் யாவும் ஒன்றென்றே
மனிதர் மேம்படக் கூறியவர்.

ஆங்கில அரசும் பணிந்திட
அறப்போர் நடத்திக் காட்டியவர்.
இந்திய நாட்டின் தந்தையென
இவரை நாமும் போற்றுகிறோம்.

— தி.அ. ராமானுஜன், காஞ்சி.





செய்தித்தாள் செய்தித்தாள்
செய்திகள் தந்திடும் செய்தித்தாள்
ஆய்ந்த அறிஞர் பாமரரும்
அனைவரும் படிக்கும் செய்தித்தாள்.

நாட்டு நடப்பை நாள்தோறும்
நமக்கும் வழங்கிடும் செய்தித்தாள்.
வீட்டுப் பொருள்கள் விலைவாசி
வழங்கி உதவிடும் செய்தித்தாள்.

சிறுவர் விரும்பும் சிறுகதைகள்
சினிமாச் செய்திகள் தந்திடுது!
பெரியோர் விரும்பிப் படித்திடவே
பல்சுவைப் பகுதிகள் தந்திடுது!

— கே. ஜோதி, சேலம் - 6.


தாத்தா

எங்கள் தாத்தா பார்த்தியா?
எளிய தோற்றம் கண்டாயா?
பொங்கும் மகிழ்ச்சி பூரிக்கும்
பொக்கை வாயைக் கண்டாயா?


பொழுது போகக் கூறிடும்
பழைய கதைகள் கேட்டியா?
சூழும் சிறுவர் மகிழ்ந்திட
சொல்லும் புதிர்கள் கேட்டியா?

சரியாய் விடையைச் சொல்லுங்கள்
சாக்கு லேட்டுக் கேட்கலாம்.
பரிவாய் நானும் அழைக்கின்றேன்
பாலர் எல்லாம் வாருங்கள்!

— எம்.கே. வேங்கவேல்,
மணியனூர் (P.O.)



இன்னும் பெருமை!



அந்த மன்னர் ஒரு சீக்கியர். தனது நாட்டையும் அவர் சீக்கிய மத அடிப்படையிலேயே ஆண்டு வந்தார். இருந்தாலும் அவருடைய ஆலோசனை சபையில் எல்லாச் சமய அறிஞர்களும் இடம் பெற்றிருந்தனர். உண்மையில் அது ஒரு மதசார்பற்ற அரசுதான்!

ஒருநாள், அந்த அரசர் தன் அரண்மனை மாடத்தின் சன்னல் வழியே, வெளியில் எதையோ கண்காணித்துக் கொண்டிருந்தார். அப்போது, சாலை வழியே, ஒரு பல்லக்கை நான்கு பேர் தூக்கிச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தார்.

அந்தக் காலத்தில், மதத் துறவிகள் தான், வழக்கமாகப் பல்லக்கில் பயணம் மேற்கொள்வார்கள். அப்படி யாரோ ஒரு துறவிதான் தூக்கிச் செல்லப்படுகிறார் என்று அந்த மன்னர் நினைத்தார். அவருக்குத்தான் எல்லாத் துறவிகளிடமும் பக்தி ஆயிற்றே!

எனவே, "யாரங்கே...? அதோ போகிற துறவியாரைப் பல்லக்கோடு நம் அரண்மனைக்கு அழைத்து வா..." என்று ஒரு பணியாளனுக்கு உத்தரவிட்டார். பணியாள் ஓடினான்.

அரசர் அரண்மனை வாயிலில் துறவியை வரவேற்கச் செல்வதற்கும், அந்தப் பல்லக்கு அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

பல்லக்கின் திரை நீக்கப்பட்டது. உடனே அந்த மன்னரிடம் ஆச்சர்யம்! காரணம் அதில் மனிதர் எவரும் இல்லை. பிறகு...?

அதற்குப் பதில், ஒரு பெரிய காகிதக் கட்டு இருந்தது. எல்லாம் ஏதோ ஒரு நூலின் கையெழுத்துப் பிரதிகள்!

மன்னர் பல்லக்கை நெருங்கினார். பல்லக்குடன் கூடவே ஓர் இளைஞனும் வந்திருந்தான். அவனிடம் போய் அரசர், "யார் நீ...? பல்லக்கில் என்ன சுமந்து செல்கிறாய்...?" என்றார்.

"ஐயா..." என்று பணிவுடன் மன்னரை வணங்கிய அவன், "நான் ஒரு முஸ்லீம் எழுத்தாளன். நகல் எடுப்பவன். கடந்த சில ஆண்டுகளாக, மிகவும் சிரமப்பட்டு, இரவு பகலாக உழைத்துப் புனிதமான திருக்குர்ரான் நூலை, என் கைப்பட எழுதிப் பிரதி எடுத்துள்ளேன். அந்தப் பிரதிகள்தான் இவை..." என்றான்.

"சரி... இதை நீ எங்கு எடுத்துச் செல்கிறாய்...?"

"இங்கிருந்து வெகு தொலைவில் உள்ள ஒரு ஊரில், முஸ்லீம் நவாப் ஒருவர் வசிக்கிறார். அவரிடம் இப்பிரதிகளைக் காட்டப் போகிறேன். அவர் என் உழைப்பைப் பாராட்டுவார். பரிசு அளிப்பார். அதன் மூலம் என் வறுமை நீங்கும். அந்த நவாபின் ஊருக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்..." என்றான் இளைஞன்.

அதைக் கேட்டதும், அம்மன்னருக்கு, அவன் குறிப்பிட்ட அந்தக் குர்ரான் கையெழுத்துப் பிரதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அதை அவ்விளைஞனிடம் வெளிப்படுத்தினார். அவன் மிகுந்த மரியாதையோடு குர்ரான் பிரதியை வெளியில் எடுத்தான். அப்போது அவன் குர்ரானிடம் காட்டிய பயபக்தி, மன்னரை மிகவும் கவர்ந்தது.

"இந்தக் கையெழுத்துப் பிரதிக்கு நவாபிடமிருந்து நீ எவ்வளவு தொகை எதிர்பார்க்கிறாய்?" என்றார் மன்னர்.

"ஏறத்தாழ இருநூறு ரூபாய் ஐயா..." என்றான் இளைஞன்.


"இந்த ரூபாய்க்காகவா, இவற்றைச் சுமந்து கொண்டு, இத்தனை தூரம் அந்த நவாப்பின் ஊருக்குப் போகிறாய்? எனது இந்தப் பெரிய ராஜ்யத்தில், அந்த இருநூறு ரூபாயை உனக்குத் தர ஆளே இல்லை என்று நீ நினைத்து விட்டாயா...?" என்ற அந்த மன்னர், "யாரங்கே...?" என்று ஒரு பணியாளனை அழைத்தார்.

அவனிடம், "நம் கஜானாவுக்குப் போய், நான் கூறியதாகச் சொல்லி,

இருநூறு தங்கக் காசுகள் வாங்கி வா..." என்றார்.

காசுகள் வந்தன. "இந்தா இளைஞனே, உனது அற்புதமான கடின உழைப்புக்குப் பரிசு...! பெற்று கொள்..." என்று அவற்றை இளைஞனிடம் கொடுத்தார் மன்னர். அவன் மகிழ்ந்தான். அவன் எழுதிய குர்ரான் கைப்பிரதியோடு பல்லக்கு மிகுந்த மரியாதையுடன் அரண்மனைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது.

பிறகு சற்று நேரத்துக்கெ லாம் ஒரு ப




யாளை அழைத்து, "நீ போய் அஜிஸ் உத்தின் அவர்களை அழைத்து வா..." என்றார் மன்னர்.

அஜிஸ் என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட அஜீஸ் உத்தின் ஒரு முஸ்லீம் துறவி. அவர் வந்ததும், பணிவுடன் வணங்கிய மன்னர், "வாருங்கள் துறவியாரே! எல்லா மதங்களையும் மதிப்பவன் நான். மதங்கள் மட்டுமல்லாது, மதநூல்களிடமும் எனக்குச் சமநோக்குதான். புராணங்களுக்குத் தரும் மரியாதையை நான் திருக்குர்ரானுக்கும் கொடுக்கிறேன். நான் ஒரு முஸ்லீமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், தங்களைப் போன்ற முஸ்லீம் நண்பர்கள் எனக்கு நிறைய இருக்கிறார்கள். அந்த இளைஞனை உற்சாகப்படுத்தி வாழ வைப்பது என் கடமை. எனவேதான் இத்திருக்குர்ரானை அவனிடமிருந்து வாங்கினேன். இது உங்களிடம் இருந்தால் இன்னும் பெருமை. ஏற்றுக் கொள்ளுங்கள்!" மன்னர் அந்தப் புனிதமான கைப்பிரதியை அஜீஸ் உத்தினிடம் பயபக்தியுடன் அளித்தார்.

இப்படி 'எம்மதமும் சம்மதமே' என்று வாழ்ந்து எல்லா மதங்களையும் மதிக்கத் தெரிந்த அந்தச் சீக்கிய மன்னர்தான் பஞ்சாபில் சீக்கியப் பேரரசை நிறுவிய பஞ்சாப் சிங்கம் 'மகாராஜா ரஞ்சித் சிங்.'

— ஜானகி மணாளன்

புத்தி வந்தது!



ஓர் ஊரில் வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் உலக அனுபவங்களைப் பெற்று புத்திசாலியாக விளங்கினார். ஒரு நாள் அவருடைய மகன் தன் நண்பன் என்று ஒருவனை அழைத்து வந்தான். அந்த நண்பனின் குணவிசேஷங்களை சிறிது நேரத்தில் அறிந்து கொண்ட வியாபாரி, தன் மகன் அவனுடன் நட்பாய் இருப்பது நல்லதல்ல என்று எண்ணினார். அதை மகனிடமும் கூறினார். அதற்கு மகன் 'ஒருவனை முதல் தடவை பார்த்த மாத்திரத்தில் உங்களால் என்ன தெரிந்து கொள்ள முடியும். எனக்கு அவனை வெகுநாட்களாகத் தெரியும்.' என்றான்.

அதற்கு வியாபாரி, 'மகனே உன்னால் அறிந்து கொள்ள முடியாததும் எனக்கு புரியும். அதனால் தான் சொன்னேன்' என்றார். ஆனால் மகனோ கோபம் கொண்டு அவரை ஏசி விட்டுச் சென்றான்.

வியாபாரிக்குக் கவலையாகிப் போனது. ஆனால், மனத்திற்குள் ஒரு திட்டத்தை உருவாக்கினார். அதன்படி மகனிடம் சென்று, 'நாம் இருவரும் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல வேண்டும். நம்முடைய பொக்கிஷங்களை ஒரு பெட்டியில் போட்டு நம்பிக்கையான ஒருவரிடம் நாம் வரும் வரையில் கொடுத்து பாதுகாப்பாக வைக்கச் சொல்ல வேண்டும்' என்றார்.

இதற்கு அவருடைய மகன், "என் நண்பன் இருக்கிறானே. அவனிடம் கொடுத்து வைப்போம். அவன்தான் நம்பிக்கையானவன்". என்றான். வியாபாரியும் ஒரு மரப் பெட்டியில் எல்லாவற்றையும் போட்டு நன்கு மூடி முத்திரையிட்டு அதை மகனிடம் கொடுத்து அவனுடைய நண்பனிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.

வியாபாரியும் மகனும் பலமாதங்களுக்குப் பிறகு திரும்பியதும், 'மகனே! பொக்கிஷங்களைத் திரும்ப வாங்கிவா' என்றார் தந்தை. நண்பன் வீட்டிலிருந்து மகன் ஆத்திரத்துடன் திரும்பி வந்தான். "ஏன் இப்படி செய்தீர்கள்? வெறும் கல்லையும், மண்ணையும் பெட்டியில் போட்டு வைத்து பொக்கிஷம் என்று எதற்கு நண்பனை ஏமாற்றினீர்கள்? என் நண்பன் என்னுடன் சரியாகப் பேசக் கூட வில்லை. எல்லாம் உங்களால் வந்த வினைதான்" என்றான்.

"அதுசரி, பெட்டியின் சீலைப் பிரித்துப் பார்க்காமல் எப்படி அதனுள் இருக்கும் பொருள்களைப் பற்றி உன் நண்பன் கூற இயலும்? நம்பிக்கையானவன் என்று அவனிடம் கொடுத்த பொருளை அவன் நம்மைக் கேட்காமல் எப்படித் திறந்து பார்க்கலாம்?" என்று மகனைப் பார்த்துக் கேட்டார் தந்தை.

மகனும் யோசித்தான். தன் நண்பன் மோசக்காரன் என்பதைப் புரிந்து கொண்டான். புத்திசாலியான தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

— இந்திரா கோபாலன்



பூச்சாண்டி பூபதி!

குண்டூரில் ராஜபூபதி என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. 'பூச்சாண்டி பூபதி' என்று கூறினால் உடனே தெரியும். அந்த அளவுக்கு பூபதியும் அவனுடைய பூச்சாண்டித்தனங்களும் பிரபலமானவை.

சிலருக்கு மற்றவர்களைக் கோபப்பட வைத்துப் பார்ப்பதில் மகிழ்ச்சி. வேறு சிலருக்கு மற்றவர்களை மகிழ்ச்சி கொள்ள வைத்துப் பார்ப்பதில் மகிழ்ச்சி. இன்னும் சிலருக்கு மற்றவர்களை அழ வைத்துப் பார்ப்பதில் ஆனந்தம். ஆனால் பூபதி இந்த மூன்று வகைகளிலும் சேராதவன். அவனுக்கு மற்றவர் களை பயப்பட வைத்து; கதிகலங்க வைத்து; பீதி கொள்ள வைத்துத் தவிக்க வைத்துப் பார்ப்பதில் அளவில்லாத மகிழ்ச்சி!

பூபதி ஏழாவது வகுப்பில் படிக்கும் சிறுவன். முழுப் பெயர் ராஜபூபதி. ஏழாவது படிக்கும் மாணவன் எனினும், பூபதி அந்தப் பள்ளியில் ஒரு வி.ஐ.பி.! அந்த வட்டாரத்திலேயே எல்லோருக்கும் அறிமுகமான பெருமை பெற்றவன். பாடத்தில் படுசுட்டி. வகுப்பில் முதல் மூன்று ரேங் குக்குள் வந்து விடுவான். பள்ளிக்கு ஒருநாள் கூட மட்டம் போடாதவன். மிகவும் நேர்த்தியாக உடை அணிந்து வருபவன். பூபதி பாட ஆரம்பித்தால் இன்றைக்கு முழுக்கக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அத்தனை இனிமையான குரல். இப்படி அவனுக்கு எத்தனையோ பெருமைகள் உண்டு.

இத்தனை பிளஸ் பாயிண்டுகள் இருந்தபோதிலும் பூபதியிடம் ஒரு பெரிய மைனஸ் பாயிண்ட் இருந்தது. சிறுவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி மற்றவர்களைப் பயப்படுத்தி, பூச்சாண்டி காட்டி, அலற வைப்பதில் பூபதிக்கு அளவிட முடியாத ஆசை.

பக்கத்து வீட்டுக் குழந்தை திண்ணையில் உட்கார்ந்து சமர்த்தாகத் தன் பாட்டுக்கு ஏதாவது பொம்மையை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும். பூபதிக்கு இது கண்களை உறுத்தும். அந்தக் குழந்தைக்குத் தெரியாமல் திண்ணைக்குக் கீழே ஒளிந்து கொண்டு "பூம்!" "பூவோம்!" "பூவோம்ம்!" என்று

சின்னபாபு

பயங்கரமாகக் கத்தி நடுங்க வைப்பான். அவ்வளவுதான்! குழந்தை பீதி பிடித்து அலறும். உள்ளே ஓடிப் போய் விடும். அம்மாவையோ அப்பாவையோ அழைத்துக் கொண்டு வரும். இதற்குள் பூபதி தன் வீட்டுக்குள் வந்து ஒளிந்து கொண்டு நடக்கப் போவதை ரசிக்கத் தயாராக இருப்பான்.

சில குழந்தைகள் இந்த மாதிரிக்



குரல் கொடுத்தால் பயப்படாமல் இருக்கும். இப்படிப்பட்ட குழந்தைகளை மிரட்ட பூபதி வேறு தந்திரத்தைப் பயன்படுத்துவான். நேபாளத்தில் இருந்து மாமா வாங்கி வந்திருந்த பயங்கரமான பூத முகம் கொண்ட முகமூடிகள் நிறைய அவனிடம் இருந்தன. கோரைப் பற்களும், தொங்கும் நீண்ட நாக்கும், பிதுங்கிய முட்டைக் கண்களுமாக அவைகளைப் பார்த்தால் பெரியவர்களுக்குக் கூட பயமாக இருக்கும். அவைகளில் ஒன்றைப் போட்டுக் கொண்டு, போதாக்குறைக்கு பயங்கரமாகக் கத்திக் குரல் எழுப்பி பயப்படுத்துவான். இதற்குப் பயப்படாத குழந்தைகளே கிடையாது.

பொம்மைத் தவளைக்குக் கீ கொடுத்து, அழுத்தி பொட்டலமாகக் கட்டி, பள்ளியில் தண்ணீர் குடிக்கும் இடத்தில் வைத்து விடுவான். யாராவது அப்பாவி மாணவன் ஆவலாகப் பிரித்துப் பார்ப்பான். பிரித்தவுடன் தவளை 'ஜிங்'கென்று மேலே தாவி அவனை அலற வைக்கும். பிளாஸ்டிக் பொம்மைத் தேளையும் பல்லியையும் வைத்துக் கொண்டு பூபதி சிறுவரை மட்டுமல்ல பெரியவர்களையும் பய படுத்துவது வழக்கம்.

கல்யாண வீட்டில் அல்லது திரு விழாக் காலங்களில் ஏராளமான குழந்தைகள் ஒரே இடத்தில் கூடி, பாட்டுப் பாடி, கதைகள் கூறி விளையாடுவார்கள் இல்லையா? பூபதி அங்கே வருவான். "நானும் ஒரு கதை சொல்கிறேன்" என்று ஆரம்பிப்பான். எடுத்த எடுப்பிலேயே, "ஒரு ஊரிலே ஒரு பெரிய்ய்ய்ய பூதம். அதுக்கு எட்டு கண்கள். ஒவ்வொரு கண்ணும் தேங்காய் அளவுக்குப் பெரிசா; பயங்கரமா இருக்கும். பத்து வாய்கள். வாய் ஒவ்வொண்ணும் கோணிவாய் மாதிரி நீளமா ஆழமா இருக்கும். ஒவ்வொரு வாயிலும் தஞ்சாவூர் தலைவாழை இலை மாதிரி நீளமா, அகலமா ரெண்டு ரெண்டு நாக்கு தொங்கும். நாக்கெல்லாம் கருஞ்சிவப்பா

பீட்ரூட் கலர்ல இருக்கும். பல் ஒவ்வொண்ணும் முழு கொட்டைப் பாக்கு அளவுக்கு இருக்கும்'' என்று பூபதி விவரிப்பதைக் கேட்கும் போது பெரியவர்களுக்கே திகிலாக இருக்கும்.

''பூபதி, எனக்குத் தூக்கம் வர்றது. மீதிக் கதையை அப்புறம் கேட்கறேண்டா'' என்று சில குழந்தைகள் சாமர்த்தியமாக நழுவப் பார்ப்பார்கள்.

ஏற்கெனவே பயந்து போய் ஓடுவதற்குத் தயாராக இருக்கும் குழந்தைகள் இந்த எச்சரிக்கையைக் கேட்டதும் கதி கலங்கிப் போய் தெய்வமே என்று கடைசி வரை அசையாது உட்கார்ந்திருப்பார்கள். பூபதி கதையை சீக்கிரம் முடிக்கவும் மாட்டான். வேண்டுமென்றே இழு இழு என்று பயங்கரம், கொடுமை எல்லாவற்றையும் கலந்து கதையை



இன்னும் சிலர், ''பூபதி, எனக்குப் பயமா இருக்குடா. ராட்சசன் கதை வேண்டாம். வேற கதை ஏதாவது சொல்லு'' என்று வெளிப்படையாகக் கெஞ்சுவார்கள்.

''ராட்சசன் கதையையெல்லாம் ஆரம்பிச்சுட்டா, முடிக்காம வேறு கதைக்குப் போகக் கூடாது. அதே மாதிரி ராட்சசன் கதையையெல்லாம் கேட்க ஆரம்பிச்சுட்டா, முழுக்கக் கேட்காம போகக் கூடாது. பாதியில விட்டாலோ, போனாலோ ராட்சசன் உயிரோடத்தானே இருப்பான்? ராஜகுமாரன் வந்து ராட்சசனைக் கொன்னால்தானே, முடிவு கிடைக்கும்? பாதியில் போனா, சாகாத ராட்சசன் தூக்கத்தில் வந்து பயப்படுத்துவான்'' என்று எச்சரிப்பான் பூபதி.

நீட்டிக் கொண்டே போவான். இன்னொரு ராட்சசன் கதையில் முளைப்பான். அவன், முதல் ராட்சசனை விட அதிபயங்கரமாக இருப்பான்! இருவரும் சேர்ந்து ஒரு யானையுடன் சண்டையிட்டு, அதைக் கொன்று, ஆளுக்குப் பாதியாகத் தின்பார்கள்! இதை அங்குலம் அங்குலமாக விளக்கி கொடுமை சொட்டச் சொட்ட கேட்பவர்களை நடுங்க வைப்பான்! அதிலும் 'ஜுராசிக் பார்க்' படம் வந்த பிறகு, ராட்சசர்களும் டினோசார்களும் பூபதியின் கதைகளில் சண்டையிட ஆரம்பித்து விட்டார்கள்! பெரியவர்களுக்கே குலைநடுக்கமாக இருக்கும். அதனால் பூபதி கதை கூற எழுந்தாலே எல்லோரும் நழுவி விடுவார்கள்! இடமே காலியாகி விடும்! அதனால்தான் பூபதிக்கு ''பூச்சாண்டி பூபதி''

என்ற பட்டப் பெயர் ஏற்பட்டு, அதுவே பிரபலமாகி விட்டது.

பூபதியை மாற்ற பெற்றோரும், உறவினர்களும், ஆசிரியர்களும் எவ்வளவோ முயன்றனர். அடி உதை என்று எல்லாம் கொடுத்துப் பார்த்தனர். எதற்குமே மசியாதவனாக பூச்சாண்டி பூபதி இருந்தான். ஒருநாளைக்கு ஒரு குழந்தையையாவது பூச்சாண்டி காட்டி அழ வைக்காவிட்டால் பூபதிக்குத் தூக்கமே வராது!

அன்று அமாவாசைக்கு முன்தினம். சிவராத்திரி விழா என்று அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப் போய் விட்டார்கள். அவர்கள் காலையில்தான் திரும்புவார்கள். பூபதி மட்டும் அத்தனை பெரிய வீட்டில் தனியே இருந்தான். எல்லாக் கதவுகளையும் மூடிக் கொண்டு தன் அறையில் படுத்துக் கொண்டான். படுத்ததும் தூங்கி விட்டான்.

மின்தடை ஏற்பட்டிருந்ததால், மின் விசிறி நின்று போய், தூக்கம் கலைந்து எழுந்தான் பூபதி. கும்மிருட்டு. தலைக்கு மேல், வெண்டிலேட்டரில் ஏதோ சத்தம் கேட்டது. மனதைக் கலங்க வைக்கும் சுடுகாட்டுக் கதைகள், மந்திரவாதிக் கதைகளைக் கூறும் போது, பூபதி எழுப்பும் பயங்கர உணர்வைத் தூண்டும் அதே இசை இலேசாகக் கேட்டது! அத்தனை பெரிய வீட்டில் தனியாக இருக்கிறோம் என்ற உணர்வு அவனுடைய கலக்கத்தை அதிகரிக்க வைத்தது. அவன் உடம்பு நடுங்கியது.

வெண்டிலேட்டர் வழியாக ஒரு மண்டை ஓடு அதிபயங்கரமாக வாயைத் திறந்தபடி உள்ளே வந்து அந்தரத்தில் ஆடியது. அறை முழுக்க உயரத்தில் ஓடியது.

ஊர்க் குழந்தைகளையெல்லாம் பயப்படும்படி பேய்க் கதைகளையும் இராட்சசன் கதைகளையும் கூறி அலற வைத்த பூச்சாண்டி பூபதி, இப்பொழுது மனம் பதைபதைக்க உயரே உலவிய மண்டை ஓட்டைக் கண்டு கதிகலங்கினான்! ஓடி விட முயன்றாலும், கால்கள் பயத்தால் நகர மறுத்தன! நாக்கு மேல் வாயில் ஒட்டிக் கொண்டு கத்த உதவ மறுத்தது!

"எப்படியாவது என்னைக் காப்பாற்று சாமி. இனிமேல் பயங்கரக் கதைகளைக் கூறி மற்றவர்களைப் பயப்படுத்த மாட்டேன். பூச்சாண்டி காட்டிக் குழந்தைகளைப் பயப்படுத்த மாட்டான்" என்று மனதில் கெஞ்சி அழுதான் பூபதி.

பூபதியின் வேண்டுகோளுக்கு நல்ல பலன் இருந்தது. வெகு விரைவில் மண்டையோடு மறைந்தது. மின் இணைப்பு ஏற்பட்டு, விசிறி சுழன்றது.

பூபதி இப்பொழுதெல்லாம் பூச்சாண்டி காட்டி, பயங்கரமான கதைகளைக் கூறியோ குழந்தைகளைப் பயப்படுத்துவதோ கிடையாது! பூபதி இப்படி மாறக் காரணமாக இருந்தது அந்தரத்தில் உயரே உலவிய மண்டையோடுதான்! அது இரவில் மின்னும் ரேடியப் பூச்சுடன் கறுப்பு பலூனாக, அப்பாவின் பைக்குள் பத்திரமாக இருக்கிறது! எல்லாம் அப்பாவின் ஏற்பாடுதான். இந்த இரக்சியத்தை எங்கேயாவது பூபதியிடம் கூறி விடப் போகிறீர்கள்!



"குட்டி குதிரை அம்மா குதிரைகிட்ட என்ன பாஷையில பேசும்?"

"தெரியலையே.... நீ சொல்லு?"

"பரி பாஷை!"

— சீர்காழி வி. ரேவதி



தீபன் கேட்ட கேள்வி!

பூவை அமுதன்

ஆண்டுத் தேர்வு எழுதிவிட்டுப் பள்ளியிலிருந்து வெளியே வந்தான் தீபன். அவன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது. வினாத்தாளை மீண்டும் சிறிது நேரம் பார்த்து விட்டு, மடித்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். தாள முடியாத மகிழ்ச்சியில் அப்படியே ஆகாயத்தில் பறக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

அவனால் நடக்க முடியவில்லை. எம்பி எம்பிக் குதித்துக் குதித்து ஓட வேண்டும் என்று நினைத்து ஒரு துள்ளு துள்ளினான்.

''தீபா! டேய் தீபா?''

பின்னாலிருந்து உரக்க ஒரு குரல் கேட்டது. யாராயிருக்கும்? கார்த்திக்காயிருக்குமோ? சந்தேகத்தோடு நின்று திரும்பிப் பார்த்தான்.

கார்த்திக்தான் வேகமும் நடையுமாக அவன் பின்னால் வந்து கொண்டிருந்தான்.

"ஏண்டா, கடைசி நாள்தானே? இருந்து என்னைப் பார்த்துவிட்டுப் போகக் கூடாதா?'' என்று கேட்டான் கார்த்திக், அருகே வந்து நின்று.

"நீ எனக்கு முன்னாடியே போயிருப்பேன்னு நினைச்சேன்! இத்தனை நாளும் நீதானே முன்னாலே போயிடுவே? இன்னைக்கு என்ன?'' - கேட்டான் தீபன்.

"எனக்குக் கொஞ்சம் கஷ்டமான பேப்பர்தான்! என்னமோ தெரியல்லே. சயின்ஸ் பாடம் எனக்குச் சங்கடத்தைக் கொடுக்குது... ஆனாலும் பாஸ் மார்க் வந்திடும்...'' கார்த்திக் பேசிக் கொண்டிருக்கும் போது தீபன் குறுக்கிட்டான்.

"நான் நாளைக்கே மதுரைக்குப் போறேன். ஆறாவதிலிருந்து அங்கேதான் படிக்கப் போறேன். அங்கே என் அத்தை வீட்டிலிருந்து படிப்பேன்.''

"ஏன்.. உன் அப்பா அம்மாவெல்லாம் நம்ம ஊரில் தானேயிருக்கா? நீ மட்டுமா மதுரைக்கு....?''

''ஆமாம்! நான் இங்கே கிராமத்திலேயிருந்துகிட்டு ஹைஸ்கூலுக்குப் போய் படிக்கிறதிலே பெரியவங்களுக்கு இஷ்டம் இல்லே.''

''ஏன்?''

"இங்கேயெல்லாம் நல்லா சொல்லிக் கொடுக்க மாட்டாங்களாம்! ஆறாவதிலிருந்து நகரத்துப் பள்ளியிலே படிக்

கிறதுதான் நல்லதாம்!"

அவன் அப்படிச் சொன்னதும் தீபன் திகைத்துப் போய் விட்டான். நடந்து கொண்டே பேசி வந்தவன் 'சடக்'கென்று நின்று விட்டான். கார்த்திக்கின் முகத்தையே பார்க்க விரும்பாதவன் போல் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"டேய் தீபா! என்னடா ஆச்சு உனக்கு? ஏன் நின்னிட்டே?" என்று அருகே வந்தான் கார்த்திக்.

அப்போதும் தீபன் அவன் முகத்தைப் பார்க்கவில்லை.

"என்னடா விஷயம் சொல்லு!" என்று தீபனின் தோள்களைப் பிடித்து உலுக்கினான் கார்த்திக்.

தீபன் மெதுவாகத் தலையை உயர்த்தி அவனைப் பார்த்தான்.

"டேய்... நிஜமாச் சொல்லு! நம்ம கிராமப் பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்கள் நல்லாச் சொல்லித் தர்றதில்லையா? ஒன்னாவதிலிருந்து அஞ்சாவது வரை நீயும் நானும் ஒன்னாத்தானே படிச்சோம்? இங்கே படிச்சதால்தானே நீயும் எல்லாப் பாடத்திலேயும் நல்ல மார்க்கு வாங்கறே. கணக்கிலே எப்பவுமே நூற்றுக்கு நூறுதானே!"

"ஆமாம், யார் இல்லேன்னது?" என்றான் கார்த்திக்.

"பின்னே... இங்கே நல்லாச் சொல்லித் தரல்லேன்னு உன் அப்பா அம்மா பெரியவங்கள்ளாம் சொல்றதாச் சொன்னியே?"

"அவங்க சொன்னா... நான் என்ன பண்ணுவேன்?" என்று வெடுக்கென்று கேட்டான் கார்த்திக்.

"நீ சொன்னியா... இங்கெல்லாம் நல்லாச் சொல்லித் தர்றாங்க. எல்லோரும் நல்லாத்தான் படிக்கிறோமுன்னு...?"

"எனக்குச் சொல்லத் தோணல்லே!"

"அது சரி. நமக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களைப் பற்றியும் பள்ளிக்கூடத்தைப் பற்றியும் தப்பாப் பேசினால்... உனக்குத் திருப்பிக் கேட்கத் தோணல்லியா?"

"அதுக்கு இல்லேடா! எனக்கும் மதுரைக்குப் போய்ப் படிக்க ஆசையாயிருக்கு. நம்ம ஊரிலே எட்டாவது வரைக்குந்தானேயிருக்கு."

"ஒவ்வொரு வருஷமும் ஒரு வகுப்பு கூட்டிக்கிட்டேதான் இருக்காங்க. இன்னும் ரெண்டு மூணு வருஷத்திலே முழு உயர்நிலைப் பள்ளியாக, பத்து வகுப்பு வரை வந்திடத்தானே போகுது?" என்று ரோஷ





மாகப் பேசினான் தீபன்.

"ஆமாம்... இருக்கட்டுமே! எனக்கு வசதியிருக்கு. மதுரைக்குப் போறேன். தெரியுமா உனக்கு? என்னை ஒரு பெரிய ஸ்கூல்லே சேர்க்கப் போறாங்க. சும்மாவா? பத்தாயிரம் ரூபாய் நன்கொடை கொடுக்கப் போறாங்க அந்தப் பள்ளிக்கூடத்துக்கு. அங்கே பெரிய லைப்ரரியிருக்காம். லேபரட்ரி.. அதுதான் சயின்ஸ் பாடத்திலே பரிசோதனையெல்லாம் செய்வாங்களாமே... அதுக்கெல்லாம் நல்ல வசதியிருக்காம். பள்ளிக்கூடத்திலேயே டீ.வி.யிருக்காம். அப்புறம் கம்ப்யூட்டர்... இன்னும் என்னென்னமோ இருக்காம்..." என்று சந்தோஷமாக அடுக்கிக் கொண்டே போனான் கார்த்திக்.

தீபனுக்கு அவன் பேச்சு வெறுப்பை மூட்டியது. எரிச்சலாகச் சொன்னான், "எல்லாம் இருக்கட்டும். நம்ம கிராமத்திலேயிருக்கிற அமைதியும், கண்ணுக்குக் குளுமையான பசுமையும், ஓடி ஆடறதுக்கு நிறைய இடமும் நகரத்திலே இருக்குமா என்ன? நம்ம ஊர்லேயும் இந்தப் பள்ளிக்கூடம் சீக்கிரமே உயர்நிலைப் பள்ளியாக, எல்லா வசதியோடும் மாறத்தான் போகுது. என் அப்பா கூட என்னைச் சென்னைக்கு அனுப்பி ஹாஸ்டல்லே தங்க வச்சிப் படிக்க வைக்கப் போறதாச் சொன்னாரு. நான் வேண்டாமுன்னு கண்டிப்பாச் சொல்லிட்டேன்" என்று பெருமையோடு சொன்னான் தீபன்.

"ஏன்... அப்பாவையும் அம்மாவையும் விட்டுட்டுப் போக மனம் இல்லையா?" என்று கிண்டலாகக் கேட்டான் கார்த்திக்.

"அதுமட்டுமில்லே. நம்ம ஊரை விட்டு இந்தச் சின்ன வயசிலேயே வெளியூருக்குப் போக எனக்கு இஷ்டம் இல்லே. இங்கே வசதியில்லேன்னா பரவாயில்லை. போகலாம். இப்பத்தான் இங்கே வசதி இருக்கே? நாம, மேல் வகுப்புக்குப் போகப் போகக் கொஞ்சம் கொஞ்சமா வேண்டிய வசதியெல்லாம் நம்ம ஊருக்கே வந்திடும். அதுமட்டுமில்லே... பட்டணத்திலே நெறைய செலவாகுமில்லே..?" என்று மூச்சு விடாமல் பேசினான் தீபன்.

"உன் அப்பா அம்மாவாலே நெறையச் செலவு செய்ய முடியுமா? அவ்வளவு வருமானம் ஏது? அதான், சும்மா மேலுக்கு இப்படிப் பேசறே... உனக்கும் பெரிய பள்ளியிலே படிக்க ஆசையிருக்காதா, என்ன?" என்று அவனைக் கிண்டினான் கார்த்திக்.

"இங்கே பார், கார்த்திக்! உன்னளவுக்கு எங்க

ளுக்கு வசதியில்லைதான். ஆனால் பத்தாயிரம் இரு பதினாயிரம் நன்கொடை கொடுத்து... என்ன அங்கே பெரிய படிப்பு? இங்கேயும் அங்கேயும் ஒரே பாடப் புத்தகம்தான்! பார்க்கப் போனால், நகரத்திலே டியூஷன் வச்சிக்காத பிள்ளைகளே இல்லையாம். அங்கே பள்ளிக்கூடத்திலே ஒழுங்காச் சொல்லிக் கொடுத்தால், எதுக்கு ட்யூஷனாம்? நம்ம ஊரிலே எத்தனை பேரு ட்யூஷன் படிக்கிறாங்க, நினைச்சுப் பாரு? அதுமட்டுமில்லே... என் அப்பா என்னையும், பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்துப் பட்டணத்திலே சேர்க்க முயற்சி பண்ணிக்கிட்டுத்தான் இருக்காரு. நான்தான் அழுது அடம்பிடிச்சு இங்கேயே ஆறாவது இருக்கே. இங்கேதான் படிப்பேன்னு சொல்லிட்டேன்."

"ஏண்டா உனக்குப் புத்தி இப்படிப் போச்சு? வசதியிருந்தால் பெரிய ஸ்கூல்லே படிக்க வேண்டியதுதானே!" என்றான் கார்த்திக்.

"இந்த மாதிரி வசதியுள்ளவங்கள்ளாம் அவங்க அவங்க கிராமத்திலேயிருக்கிற பள்ளிக்கூடங்கள்லே இந்தப் பணத்தைச் செலவு பண்ணிப் பெரிய பள்ளிகளா, எல்லா வசதியும் உள்ள பள்ளிகளா உயர்த்திடலாமே? இதுக்குப் பெரியவங்களுக்கு மனசு வருதா? பட்டணத்துப் பள்ளிக்கூடத்துக்கு ஆயிரம் ஆயிரமா நன்கொடையா தர்றவங்க, சொந்த ஊர்ல இருக்கிற பள்ளிகளைக் கவனிக்கக் கூடாதா? எல்லாருக்குமா வசதியிருக்கு? வசதியிருக்கிறவங்க சொந்த ஊரைக் கவனிச்சா, அங்கேயிருக்கிற ஏழை எளியவங்க ஏன் பட்டணத்துக்கு ஓடறாங்க...? படிப்பைப் பாதியிலே நிறுத்தறாங்க...?"

தீபன் பேசிக் கொண்டேயிருந்தான். கார்த்திக்குக்கு வாயடைத்துப் போய் விட்டது.

"என்னடா தீபா! இதெல்லாம் எனக்குத் தோன்றவே இல்லையே! உனக்கு மட்டும் எப்படி?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.




"நான் தினமும் செய்தித்தாள் படிக்கிறேன், தெரியுமா? என் பக்கத்து வீட்டிலே ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் இராணுவத்திலே கேப்டனாயிருந்தவராம். சொந்த ஊருக்கே வந்திட்டார். அவர்தான் எனக்குப் படிக்க நிறைய புத்தகங்கள் தர்றாரு. நிறைய விஷயங்கள் சொல்வாரு. பத்திரிகைகளைப் படிக்கக் கொடுப்பாரு. எந்த நிலையிலே இருந்தாலும் சொந்த ஊரை மறக்கவே கூடாதுன்னு அடிக்கடி சொல்வாரு."

"ஓஹோ! அதுதான் நீயும் பெரிய மனுஷன் மாதிரி பேசறே?" என்றான் கார்த்திக்.

"இன்னொரு விஷயம் தெரியுமா?" என்று மகிழ்ச்சியோடு கார்த்திக்கின் தோளைத் தட்டினான் தீபா.

"என்ன?" என்று அவன் முகத்தைப் பார்த்தான் கார்த்திக்.

"எங்கப்பா... பத்தாயிரம் ரூபாய் கொடுத்துப் பட்டணத்திலே ஆறாம் வகுப்புக்கு இடம் பிடிக்கப் போறதாச் சொன்



னாரில்லே....?"

"நீதானே சொன்னே?"

"ஆமாம். அந்தப் பணத்தை எங்கிட்டே கொடுத்திடச் சொல்லிக் கேட்டு இருக்கேன்."

"பத்தாயிரம் ரூபாய் உனக்கா? என்னடா பண்ணுவே? உன் அப்பா ஒத்துக்கிட்டாரா?" - ஆச்சரியம் தாங்க முடியவில்லை கார்த்திக்குக்கு.

"அந்தப் பத்தாயிரம் ரூபாயை என் பேரிலே பேங்க்கிலே கட்டச் சொல்லியிருக்கேன். ஏன் தெரியுமா? அந்தப் பத்தாயிரம் அஞ்சு வருஷத்திலே வட்டியோடு சேர்த்து இருபதினாயிரம் ஆகும். பத்து வருஷத்திலே நாற்பதினாயிரம் ஆகும். அது என் மேல் படிப்புக்கு... காலேஜ் படிப்புக்கு உதவும். தெரியுமா?" - சொல்லி விட்டுக் குதித்தான் தீபன்.

"இது கூட அந்தப் பெரியவர் கேட்டன் சொன்னதுதானா?" - ஆச்சரியத்திலிருந்து மீள முடியாமல் கேட்டான் கார்த்திக்.

"அவர் சொன்னது மட்டுமில்லே. தினப் பத்திரிகையிலே ஒரு பாங்கி வெளியிட்டிருந்த சேதியை என்னைப் படிக்க வைச்சு எனக்குத் தெளிவா விளக்கியும் சொன்னார்."

"அப்போ... நீ! பட்டணம் போய்ப் படிக்கப் போறது இல்லே...?" - கார்த்திக் கேட்டான்.

"படிக்கிற பிள்ளை எங்கேயும் படிப்பான். ஆர்வம் இருக்கணும். அக்கறையிருக்கணும். அவ்வளவுதான்! அது மட்டுமில்லே... இந்த் ஊர்க்காரங்களான நாமெல்லாம் கூட நம்ம ஊர் பள்ளியிலே படிக்கலேன்னா எப்படி? பட்டணத்துப் பிள்ளைகளா இங்கே வந்து கிராமத்துப் பள்ளியிலே படிப்பாங்க? அப்புறம் கிராமம் எப்படி வளர முடியும்...? கிராமத்திலே எப்படி உயர்நிலைப் பள்ளியெல்லாம் வர முடியும்?"

தீபனின் கேள்விகள் கார்த்திக்கின் மனத்திலே பெரிய போராட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவன் யோசனையோடு தீபனைப் பார்த்தான். அந்தப் பார்வையில், தீபனின் நியாயத்தை ஏற்றுக் கொண்ட முடிவு தெரிந்தது.

கேளுங்கள் சொல்லப்படும்

* ஏர் இண்டியா மகாராஜாவை யார் உருவாக்கினார்கள்?

– மா.பொன் மாரி, திண்டுக்கல்.

இந்த ஏர் இண்டியா மகாராஜாவை உருவாக்கித் தந்தவர் உமேஷ் ராவ் என்ற விளம்பர ஓவியர். இவர் வால்டேர் ஜே. தாம்சன் என்ற விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்தவர்.

* நம் நாட்டில் முதல் நிலக்கரிச் சுரங்கம் எப்பொழுது எங்கு ஆரம்பிக்கப் பட்டது?

- வாணி, வைதேஹி, கூரைநாடு.

1770ல் ராணிகஞ்சில்தான் முதல் நிலக்கரிச் சுரங்கம் தோண்டப்பட்டது.

* இந்திய இசை உண்மையாகவே உலகம் முழுவதும் பரவி இருந்ததா?

– வா.பிரசாத், ஹைதராபாத்.

தாய்லாந்து வரை நமது இந்திய கலாசாரம் பரவி இருந்தது என்பது வரலாற்று உண்மை. தாய்லாந்தின் தேசிய கீதம் கூட மோகன ராகத்தில் அமைந்ததுதான்!



* பிரதம மந்திரி என்ற பதவியில் முதன்முதலாகப் பணியாற்றியவர் யார்?

– வெ. சூர்யநாராயணன், வேலூர்.

இங்கிலாந்தின் அமைச்சர் சர் ராபர்ட் வால்போல் என்பவரே உலகின் முதல் பிரைம் மினிஸ்டர். ஆண்டு 1721.

* பால் வழங்கு நிலையங்களை கியாஸ்க் என்கிறார்களே. இந்தப் பெயர் எந்த மொழி? இந்தியா? அராபியா?


– வா. கவிப்பெருமாள், புவனகிரி.

'கியாஸ்க்' என்பது இந்தியும் இல்லை. அராபியும் இல்லை. டர்கிஷ் மொழி.

* "டாக்ஸோஃபிளஸ்" என்பது என்ன புத்தகம்?

– மா.சிவராமன், எருக்கஞ்சேரி.

"டாக்ஸோஃபிளஸ்" என்றால் அம்புகள் என்பது பொருள். இந்தத் தலைப்பில் ஒரு புத்தகத்தை 1545ஆம் ஆண்டில் ராபர்ட் ஆங்கம் என்பவர் எழுதினார். இதுதான் வில்வித்தை தொடர்பான முதல் புத்தகம். இதே டாக்ஸோ ஃபிளஸ் என்ற பெயரில் 1971ஆம் ஆண்டில் சர் அஸ்டான் லிவர் என்பவர் வில்வித்தைக்காக ஒரு சங்கத்தை அமைத்தார். இதுவே இன்றும் வில் வித்தைக்கு அதிகார பூர்வமான ஓர் உலக அமைப்பு.




* ஒரு நாட்டை இரண்டு அரசர்கள் ஆண்டதுண்டா?

– சு. டட்லி இராணி,
ராணிப்பேட்டை.

சேரநம்பி

பழங்காலத்தில் ஸ்பார்ட்டாவை (SPARTA) பலமுறை இரண்டு அரசர்கள் சமகாலத்தில் ஒற்றுமையாக இருந்து ஆண்ட வரலாறு உள்ளது.



ஏர் இண்டியா மகாராஜாவை யார் உருவாக்கினார்கள்?

* பாம்புகளுக்கு நுரை ஈரல் உண்டா?

– எல். கருணாகரன்,
திண்டுக்கல்

கண்டிப்பாக உண்டு.

* அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஐ. நா. சபைக் கட்டடம் அமெரிக்காவின் அன்பளிப்பா?

– சா. கிரிஜா, திருமழிசை.

ஐ.நா. சபைக் கட்டடத்தைக் கட்டி முடிக்க மொத்தம் ஆறு கோடியே எண்பது இலட்சம் டாலர்கள் செலவாயிற்று. இதை உறுப்பு நாடுகள் பகிர்ந்து கொண்டன. அமெரிக்கா சுமார் 650 இலட்சத்தை நீண்ட காலக் கடனாகத் தந்துள்ளது. இதில் 60%

அளவுக்குவ திருப்பிப் தரப்பட்டுள்ளது.

• டாக்டர் மு. வரதராசன் அவர்கள் சிறுவர்க்காகவும் நூல் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களே! அவை எங்கு கிடைக்கும்?


– சூ. மார்க்ரெட்சில்வா, பாளையம் கோட்டை.


டாக்டர் மு.வ. அவர்கள் குழந்தைகளுக்காக எழுதியுள்ளவை குழந்தைப் பாடல்கள் (தொகுப்பு), ஷேக்ஸ்பியர் கதைகள், கழகச் சிறுகதைகள்(தழுவல்), படியாதவர் படும் பாடு (முதியோர் கல்வி), கண்ணுடையார் வாழ்வு (முதியோர் கல்வி) ஆகியவை. வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டிடிகே சாலை, சென்னை-18. இவை தவிர எழுத்தின் கதை, சொல்லின் கதை, மொழியின் கதை ஆகிய மொழி இயல் நூல்கள். இவை பாரி நிலையம், பிரகாசம் சாலை, சென்னை-600 001, என்ற முகவரியில் கிடைக்கும்.

• **xbiology** என்பது எதைப் பற்றியது?

– தூ.சிவக்குமார், ஈரோடு.

பூமிக்கு வெளியே, மற்ற கோள்களில் உயிர்கள் இருக்கின்றனவா என்பதை அறியும் ஆராய்ச்சிக்குப் பெயரே xbiology இயல்.







• எகிப்தில் உள்ள பிரமிட்டுகளுக்கு இப்பெயர் எப்படி ஏற்பட்டது?

– வி. பெரிய நாயகி, வத்தலகுண்டு.

கோதுமையால் செய்யப்படும் கொழுக்கட்டைபோன்ற பலகாரத்திற்கு கிரேக்க மொழியில் 'பிரமிட்' என்று பெயர். கிரேக்கர்கள், பிரமிட்டுகளைப்பார்த்து அவை தங்கள் கோதுமைப் பலகாரம் மாதிரி இருக்கிறது என்று 'பிரமிட்' என்று அழைக்க, அதுவே நிலைத்து விட்டது.

• இந்தியாவில் முதல் தொலைபேசி அலுவலகம் எந்த நகரில் அமைக்கப் பட்டது? பம்பாயில்தானே?

- கு.ஈஸ்வரி பிரசாத், விருதுநகர்.

பம்பாயில் இல்லை. இந்தியாவின் முதல் தொலைபேசி அலுவலகம் அமைக்கப்பட்டது கல்கத்தா நகரில். ஆண்டு 1881.

* **சோவியத் ரஷ்யாவின் ஸ்டாலின் அமைதிப் பரிசு, இந்தியர் எவருக்காவது கிடைத்திருக்கிறதா?**

- ஏ.சோழலிங்கம், திருத்தணி.

கிடைத்திருக்கிறதே. டாக்டர் கிச்சிலு என்பவருக்கு இந்த ஸ்டாலின் அமைதிப்பரிசு கிடைத்திருக்கிறது. இந்தப் பரிசைப் பெற்ற ஒரே ஓர் இந்தியர் இவரே.

* **எலுமிச்சம் பழம் புளிக்கிறது. புளியும் புளிக்கிறது. இந்த இரண்டிலும் உள்ள புளிப்பைத் தரும் பொருள் ஒன்றுதானா?**

– வா. சாரங்கபாணி,
குடந்தை–3.

இல்லை. புளியில் உள்ள சுவை அமிலம் டார்டாரிக் அமிலம். எலுமிச்சையில் உள்ள சுவை அமிலம் சிட்ரிக் ஆசிட்.



* **இரத்தினச் சுருக்கமாக எழுதுங்கள், பேசுங்கள் என்கிறார்களே, அப்படியானால் இரத்தினம் சுருங்கக் கூடியதா?**


- மா. கோமதிநாதன், திருவரங்கம்.

இரத்தினம் என்பது மிகச் சிறியது. ஆனாலும் மிகுந்த ஒளி வீசக்கூடியது. இதைப் போல் நாம் எழுதுவதும் பேசுவதும் சுருக்கமாக; அதேசமயம் மிகுந்த பயன் அல்லது தகவல்களைத் தரும்படி இருக்க வேண்டும் என்பதே பொருள். இரத்தினம் சுருங்காது.

* **ஓவியமேதை அமரர் இரவி வர்மாவின் தெய்வ உருவ ஓவியங்களின் ஒரிஜினல்கள் எங்கு உள்ளன? நாம் காண முடியுமா?**

- பா. சிவானந்தம், திருமந்தூர்.

இரவிவர்மாவின் லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி பரமேஸ்வரன் போன்ற பிரபலமான தெய்வ ஓவியங்களின் ஒரிஜினல் நம் நாட்டில் இல்லை. இவை மிகக் குறைந்த விலைக்கு அவராலேயே விற்கப்பட்டு விட்டன. ஆனால், யாரால் வாங்கப்பட்டன, எங்குள்ளன என்பது யாருக்குமே தெரியாது.



தண்டனை

சங்க நாட்டில் அரசன் ஒருவன் இருந்தான். ஒருநாள் மன்னன் தன் மந்திரிகளிடம், "இனி, குற்றம் செய்பவர்கள் யாரையும் தண்டிக்கக் கூடாது. மன்னித்து விட்டு விட வேண்டும். நம்முடைய நீதிபதிகளிடமும் இதைச் சொல்லுங்கள். நாடெங்கும் பறை சாற்றச் சொல்லுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

"வேண்டாம் அரசே, இதனால் துஷ்டர்கள் நாட்டில் பெருகி விடுவார்கள்! சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும். குற்றத்திற்குத் தண்டனை கிடைக்கும் என்ற பயம் இருந்தால்தான், யாரும் குற்றம் புரியத் துணிய மாட்டார்கள்" என்று மந்திரிகள் சொன்னார்கள்.

அரசன் சிரித்தான். "நீங்கள் சொல்வது வேடிக்கையாயிருக்கிறதே! தண்டனை விதிப்பதைக் கண்டு சந்தோஷம் அடைபவர்கள் மனிதர்களே அல்ல. மதியற்ற மந்திரிகளே! போங்கள். போய் என்னுடைய கட்டளையை உடனே நிறைவேற்றுங்கள்!" என்றான்.

வேறு வழியின்றி மந்திரிகள் அரசனுடைய கட்டளையைச் சிரமேற் கொண்டு நிறைவேற்றி வைத்தார்கள்.

மறுநாள் வழக்கம் போல் அரச சபை கூடியது. காவலர்கள் ஒருவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்து, "அரசே இவன் பெயர் சுப்பன். இவன் ஏதோ விரோதத்தின் காரணமாகக் குப்பன் என்பவனை அடித்து விட்டான்!" என்றனர்.

"மன்னித்தோம். சுப்பனை உடனே விடுதலை செய்யுங்கள்!" என்றார் அரசர்.

மறுநாள் வேறு ஒருவனைக் கைது செய்து வந்தனர் காவலர்கள்.

ரஜனி



சுப்பனின் நண்பன் சொக்கன். தன் நண்பனை அடித்த குப்பனின் அண்ணனை பதிலுக்கு அடித்து இவன் இன்று பழி தீர்த்துக் கொண்டு விட்டான்!" என்றனர்.

'இது என்ன சங்கடம்? இவர்கள் தங்கள் குற்றங் களுக்கு வருந்தித் திருந்துவார்கள் என்றல்லவா இவர்களை மன்னித்து வந்தேன்? இவர்கள் ஒருவருக் கொருவர் தாங்களே தண்டனை கொடுத்துக் கொள்வது என்று தீர்மானித்து விட்டார் களா என்ன?' அரசனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

"மன்னவா, குற்றம் இழைப்பவர்களுக்கு ஏற்ற தண்டனையை வழங்குவது மன்னனின் கடமை. அப்பொழுதுதான் குற்றம் புரிய மக்கள் தயங்குவார்கள். மன்னித்து விட்டு விட்டால்,

வேண்டாம்!

"அரசே! இவன் சுப்பனால் அடிபட்ட குப்பனின் அண்ணன். இன்று காலை இவன் தம்பியை அடித்த சுப்பனை இவன் அடித்து விட்டான்!" என்று காவலர்கள் கூறினர்.

"அப்படியா? மன்னித்தோம்; இவனையும் விடுதலை செய்யுங்கள்!" என்றான் அரசன்.


அடுத்த நாள், மற்றொருவனைச் சிறைப் பிடித்துக் கொண்டு வந்து, "அரசே! இவன் நேற்று அடிபட்ட

யாருக்குமே பயம் போய்விடும். மேலும் மேலும் குற்றம் இழைக்கத் துணிவு பிறக்கும்" என்றார் தலைமை அமைச்சர். மன்னன் இப்பொழுது ஆழ்ந்து சிந்தித்தான்.

"என் அன்புக்குரிய மந்திரிகளே, உங்களுடைய யோசனையை முதலிலேயே ஏற்றுக் கொள்ள மறுத்ததற்காக என்னை மன்னியுங்கள். இந்தச் சொக்கனுக்கு கசையடி தண்டனை கொடுக்க உத்தரவிடுகிறேன்" என்றார் மன்னர்.

மந்திரிகள் அமைதிப் பெருமூச்சு விட்டனர்.

டௌகான் பறவை நண்பனை அடைய வழிகாட்டுங்கள்...



ஜீரோ நாட்டில் இருந்து வருபவரே!



ஒருமுறை இங்கிலாந்துக்குச் சென்ற நேருஜி புகழ்பெற்ற கணித நிபுணரும், தத்துவமேதையும், மாபெரும் சிந்தனையாளருமான பெர்ட்ரண்டு ரஸல் அவர்களைச் சந்தித்தார்.

நேருவைப் புன்முறுவலுடன் வரவேற்ற ரஸல், "சைஃபர் நாட்டிலிருந்து வரும் உங்களை மிகவும் அன்புடன் வரவேற்கிறேன்" என்றார்.

ஒன்றுமில்லாத நாட்டிலிருந்து வருகிறவர் நீங்கள் என்று ரசல் தன்னைப் பரிகசிப்பது போலத் தோன்றியது நேருஜிக்கு. ஒரு கணம் திகைத்தார் நேருஜி.

ரஸல் புன்முறுவலுடன் விளக்கினார்: "கணித சாஸ்திரத்தில் பெரிய மேதைகளைப் பெற்றது உங்கள் நாடு. சைஃபர் என்ற ஜீரோ எண்ணைக் கண்டுபிடித்து உலகத்திற்குக் கொடுத்ததே இந்தியாதான். அந்தப் பெருமையை நினைவுபடுத்தும் வகையில்தான் அப்படிச் சொன்னேன்."

கணித மேதை ரஸல், இந்தியாவின் இணையற்ற தலைவனுக்கு, கணித மொழியிலேயே வரவேற்புக் கூறினார்!

ஆதாரம் : 'பெரியோர் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்'
தகவல் : எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்.

கோகுலம்


ஜூலை இதழில்....



- மனைவியைச் சிறை வைக்கும் பறவை!
- வாண்டுமாமாவின் மரகதச் சிலை 2- ஆம் பகுதி
- வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் 3 - வது பரிசு பெற்ற முதல் கதை "நான் பொறுப்பு"

ஏராளமான கதைகள் + போட்டி எல்லாம்

கோடை விடுமுறைப் போட்டி - 2






இங்கே மொத்தம் இருபது படங்கள் இருக்கின்றன. இவை திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பாலில் வரும் பத்துக் குறள்களின் தொடக்கம், முடிவைக் குறிப்பவை. இவை குறிக்கும் பத்து குறள்களையும் கண்டுபிடித்து, ஓர் அஞ்சலட்டையில் எழுதி, உங்கள் முழு முகவரியை பின்கோட்டுடன் எழுதி, இங்கே தந்துள்ள முகவரிக் கட்டத்தைக் கத்தரித்து அஞ்சலட்டையில் முகவரிக்காக உள்ள இடத்தில் ஒட்டி அனுப்புங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். முடிவு தேதி : 30.6.95 ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஜூன் '95

பெறுநர்:
ஆசிரியர் — கோகுலம்,
47, ஜவாஹர்லால்நேரு சாலை,
ஈக்காடு தாங்கல்,
சென்னை - 600 097

‘கு’வில் தொடங்கும் பொருள்கள் எத்தனை? - போட்டி



ஜூன் '95

பெறுநர் :
ஆசிரியர் - கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

இந்தப் படத்தைப் பாருங்கள். இது ஒரு கோவிலின் தேர்த் திருவிழா வெள்ளோட்டக் காட்சி. வெள்ளோட்டம் என்பது புதிதாகச் செய்யப்படும் தேரை, சாமி இல்லாது முதலில் ஓட வைத்துப் பார்ப்பது. இதில் ‘கு’வில் தொடங்கும் பொருள்கள் எத்தனை உள்ளன என்பதைக் கண்டுபிடித்து, உங்கள் பெயர், வயது, முகவரி,’ பின்கோடு உட்பட எழுதி, இதில் உள்ள முகவரிக் கட்டத்தை மட்டும் வெட்டி, அஞ்சலட்டையில் முகவரிக்கான இடத்தில் ஒட்டி அனுப்பி வையுங்கள். முகவரிக் கட்டம் இல்லாமல் வருபவை ஏற்கப்பட மாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் கண்டிப்பாகத் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தரவேண்டும். முடிவு தேதி : 30.6.95. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



குறையைத் தீர்க்கும்!

உலகம் எங்கள் குடும்பம், ரஜினி பெத்து ராஜா, பக். 32, ரூ. 12/-, கங்கை புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை -600 017.

செர்வாஸ் நட்புறவுக் கழகத்தின் ஆதரவில் தான் மேற்கொண்ட ஆஸ்திரேலியப் பயணத்தை ஒரு சுவையான நாவலாகத் தந்துள்ளார் ஆசிரியர். சிறுவரின் கண்ணோட்டத்தில், ஆஸ்திரேலிய பயணக் காட்சிகளை, சுவையான அனுபவங்களை எழுதியுள்ளது நூலுக்குத் தனிச் சுவையைத் தருகிறது. படங்களோ, இல்லை புகைப்படங்களோ இருந்திருந்தால் நூலின் சுவை இன்னும் கூடியிருக்கும். சிறுவர் இலக்கியத்தில் பயண நூல்கள் அதிகம் இல்லை என்ற குறையை இது கண்டிப்பாகத் தீர்க்கும்.

கண்மணிப்பாட்டு, மின்னூர் சீனிவாசன், பக். 80, ரூ. 25/-, மின்னூர் வெளியீடு, 22/7, தீர்த்தாரப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

சிறுவர்க்காகவும் பாடல் எழுதி வரும் பெரிய கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் மின்னூர் சீனிவாசன். இந்தத் தொகுப்பில் சிறுவர்க்கான இவரது 66 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கோகுலத்தில் வெளிவந்தவையும் உண்டு. நெஞ்சை அள்ளும் சந்தங்கள், தானாகவே தாளம் போட வைக்கின்றன. புதிய பொருள்களிலும் பாடல்கள் உள்ளன. குப்பைத் தொட்டியைப் பற்றி, நாககரத்தைப் பற்றிக் கூட இதில் பாடல்கள் இருக்கின்றன.

நாககரம் கேட்டதுண்டோ தம்பி
- அது
நல்ல நல்ல இசைக் கருவி தம்பி!
பாகெனவே தேனெனவே
பொழியும் - நம்
பழந்தமிழர் இசையதிலே வழியும்!
ஆச்சா மரத்தில் அந்தக் கருவி
- செய்வார்
அதுதான் வழக்கமென்று தெரிவி!
மூச்சிழுத்து வாசிப்போர்
பெருமை
- நாக
கரம் சொல்லும் அதை யார்க்கும்
அருமை!
(பக். 32)

பாடல்களுடன் போட்டி போடும் படி கண்கவர் ஓவியங்கள் அமைந்துள்ளது நூலுக்கு மெருகூட்டுகிறது. பெருமை மிக்க படைப்பு. பாடல்களுக்காக ஒரு முறை; படங்களுக்காக ஒரு முறை; மொத்த சிறப்புகளுக்காக ஒரு முறை படிக்கலாம். பரிசளிக்க முற்றிலும் ஏற்ற நூல்.

இந்திய பண்பாட்டுக் கதைகள் (இரண்டாம் தொகுதி), சௌரி, பக். 148, ரூ. 20/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

உயர்ந்த பண்புகளையும், நல்ல நெறிகளையும், வாழ்க்கை முறைகளையும் போதிக்கும் அருமையான 27 கதைகள் இதில் உள்ளன. எல்லாம் நமது புராண, நீதி நூல்களில் இருந்து திரட்டப்பட்டவை. ஒவ்வொன்றும் ஒரு மாணிக்கம். எதிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை அடிக்குறிப்பில் காட்டியிருக்கும் தன்மையை எத்தனை பாராட்டினாலும் தகும். நாம் அறிந்த கதைகளோடு அறியாத கதைகளும் நிறைய உள்ளன. சிறு வரை மட்டுமின்றி பெரியவர்களையும் மகிழ்விக்க வல்லவை. சிறிய படங்கள் ஒன்று கூட இல்லையே என்ற ஏக்கம் எழுகிறது. ஆசிரியர், பதிப்பாளரின் உழைப்புக்கு உயர்வு தரும் நூல்.

தனித்திருப்பது எது? - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் வழக்கம்போல் ஏராளமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இருப்பினும் மூன்று பேர் மட்டுமே சரியான விடையை எழுதியிருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. கொடுத்திருந்த பத்துப் பொருள்கள், தவில், மிருதங்கம், தபேலா, சாரங்கா, வீணை, சங்கு, நாதஸ்வரம், புல்லாங்குழல், தாளம், வயலின் - இவை எல்லாமே இந்திய இசைக் கருவிகள் என்பதுதான் பொதுவான ஒற்றுமை. இவற்றுள் வயலின் மட்டுமே இத்தாலியைச் சேர்ந்தது. இப்பொழுது இந்திய இசைக் கருவிகளுள் ஒன்றாகிவிட்ட இது. மேல்நாட்டு இசைக் கருவியே. வயலினைத் தவிர மற்றவை இந்தியாவில் பண்டைக்காலம் தொட்டு இசைக்கப்பட்டு வரும் இசைக் கருவிகள். இதுதான் விடை. இந்த விடையை மூன்று பேர் மட்டுமே எழுதியிருக்கிறார்கள். இவர்கள் மூவரும் பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ரூபாய் முப்பத்தைந்து பரிசு பெறுவோர் :

1. என்.எம்.இஜட்.நவீட் அகமத், ஆம்பூர்.
2. ரங்கராமானுஜம், சென்னை - 33.
3. ந. நபீஸ் அகமது, ஆடுதுறை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

அலங்கார பொம்மை!

இங்கே உள்ள அழகான பொம்மையைப் பாருங்கள். இந்த பொம்மையை எந்த இடத்தில் வைத்தாலும் அந்த இடம் புதுப்பொலிவு பெறும். இது இரண்டு பகுதிகளாக இணைக்கப்பட்டது.

இதைச் செய்யத் தேவைப்படுபவை:

1. பிளாஸ்டிக் ஃபெனல். இது எல்லா பிளாஸ்டிக் பொருள் கடைகளிலும் எளிதாகக் கிடைக்கும். நான்கு அங்குல விட்டம் (ஃபெனலின் அடி) உள்ளதாக ஒன்றை வாங்குங்கள்.

2. பிளாஸ்டிக் பெண் பொம்மை. ஃபெனல் 4 அங்குல விட்டம் உடையதாக இருந்தால் பொம்மையின் உயரம் 6 அங்குலமாக இருக்கலாம். கவுன் போட்டு தலை முடி (குதிரைவால்) வைத்த பொம்மையே கடைகளில் கிடைக்கும். இதையே வாங்கிக் கொள்ளலாம். விலை நான்கு ரூபாய் இருக்கும். முகம் அழகாக இருப்பதைப் பார்த்து வாங்குங்கள்.

3. கலர் துணி பிட்டுகள். தையற் கடைக்காரரிடம் கேட்டால் தருவார்கள். புதிதாக வாங்க வேண்டாம்.

4. சமிக்கி (பளபள பொட்டு)

5. பிளாஸ்டிக் சரிகை லேஸ் (6 அங்குல நீளம்)

6. பெவிகால்

7. கத்தரி, பிளேடு

8. பென்சில்

9. பொம்மை சங்கிலி

10. குண்டூசிகள் 8

11. ஊசி, நூல்

12. அலங்காரம் செய்யத் தேவைப்படும் வண்ணப் பாசிமணிகள், பழைய சங்கிலிகள், ஜிகினாப் பொட்டுகள். (இவற்றை விலை கொடுத்து வாங்க வேண்டாம்)


செய்யும் முறை:

ஃபெனலின் நீண்ட காம்பு பாகத்தை வெட்டி எடுத்து விடுங்கள். பொம்மையின் முழங்கால் வரை உள்ளே போகும் அளவுக்கு ஃபெனலின் ஓட்டையை சிறிது சிறிதாகப் பெரிதாக்கிக் கொள்ளுங்கள். சொர சொரப்பான தரையில் தேய்த்தால், தேய்ந்து, ஓட்டை பெரிதாகிக் கொண்டே வரும். பொம்மை அந்த ஓட்டையில் முழங்கால் அளவுக்கு இறங்கி, டைட்டாக இருக்க வேண்டும். பொம்மையின் கால்கள் தரையை இடிக்கக் கூடாது. இதை மிகவும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனி ஃபெனலை அழகு படுத்த வேண்டும். ஒரு கலர்த் துணியை ஃபெனலின் மேல் சுற்றி ஒட்டுங்கள். இது பூப்போட்ட துணியாகவோ, வேறு சின்னச் சின்ன வண்ண டிசைன் பண்ணினதாகவோ இருந்தால் இன்னும் அழகாக இருக்கும். கீழ்ப் பாகம் வரும் துணி ஓரத்தை அப்படியே உள்பக்கமாக மடித்து ஒட்டி விடுங்கள். இதே போல் ஃபெனலின்மேல் ஓட்டைப் பக்கமும் மடித்து உள் பக்கமாக ஒட்டி விடுங்கள். இதை உங்கள் கற்பனைக்கு ஏற்ப பாசிமணிகளாலோ, ஜிகினா பொட்டுகளை வைத்தோ அழகு படுத்தலாம். ஓவியம் வரையத் தெரிந்தவர்களாக இருந்தால் சின்னச் சின்னப் பூக்களை வரையலாம். நீளநீளமாக பார்டர் வைத்து, நடு நடுவே ஜிகினா பொட்டு வைத்து அழகு படுத்தலாம். கடைசியில் ஃபெனலின் விளிம்பில் சரிகைலேஸை பார்டராக சுற்றி ஒட்டி விடுங்கள்.

இனி பொம்மைக்கு அலங்காரம் பண்ண வேண்டும். நீங்களே கலர் பிட் துணியால் பிளவுஸ் சுற்றி, ஊசி நூலால் (தையல் வெளியே தெரியாதபடி) தைத்து விடுங்கள். கடையில் வாங்கும்போது கவுன்மாடல் போட்டிருப்பார்கள். அதற்கு மேலேயே இதைப் போடலாம். பிளவுசும், தாவணியும் இருந்தால்தான் பொம்மைக்கு உங்கள்

கற்பனையைப் பொறுத்து அழகு படுத்த முடியும். இந்த பினவுகக்கு, ஓரம் வைத்து, டிசைன் வைத்து, ஜிகினா பொட்டு வைத்து அழகு படுத்தலாம். பினவுசின் உயரம் நீளமாக இருந்தால் பரவாயில்லை. கழுத்து சங்கிலியை பாசிமணியால் செய்து போடலாம். கைகளுக்கு வண்ண நூலால் வளையல் போடலாம். இதையெல்லாம் பண்ணி முடித்த பிறகு, பொம்மையை, ஃபொனலுக்குள் இறக்குங்கள். முழுங்காலுடன் அது டைட்டாக நிற்க வேண்டும்.



இனி பொம்மைக்குத் தாவணி போட வேண்டும். 4 அங்குல அகலம், 9 அங்குல நீளமுள்ள துணி பிட்டை எடுத்து, ஓரம் தைத்துக் கொள்ள வேண்டும். ஃபொனல் பகுதி டிசைன் துணியாக இருந்தால், தாவணி பூ டிசைன் போடாத பிளயினாக இருக்கலாம்.

பொம்மை சங்கிலி அல்லது பளபள பாசிமணியைக் கோத்து தலையில் கட்டி மாட்டுங்கள். அதையே காதுகளின் இருபக்கமும் சிறது தொங்க வைத்து காதணியாக்கி விடுங்கள். ஊசிநூல் வைத்துத் தைத்து விடலாம். கடையில் வாங்கும்போது இருந்த குதிரைவால் கொண்டை அப்படியே இருக்கட்டும்.

தயார் பண்ணின தாவணியின் ஒரு முனையை பொம்மைக்குப் பின்னல், தைத்தோ, குண்டூசி வைத்தோ நழுவாதபடி பண்ணுங்கள். தாவணியைக் கொசுவி பொம்மையின் இடது கைக்குள் கொடுத்து, மேலாக்காகப் போட்டு, வலது தோளுக்கு மேல் கொசுவி (தைத்து), தாவணியை அப்படியே தலைக்குமேல் முக்காடாகப் போட்டு, பொம்மையின் இடது காதுக்குக் கொண்டு தைத்து கொசுவி விடுங்கள்.

பாவாடை சட்டை போடும் தங்கைகளுக்கு இந்தத் தாவணியை எப்படி அமைக்க வேண்டும் என்பதை சொல்லித் தரத் தேவையில்லை. தெரியாதவர்கள் அம்மாவிடம் கேளுங்கள். இந்த தாவணி கச்சிதமாக அமைவதைப் பொறுத்தே பொம்மையும் அழகாக அமையும்.

கழுத்துச் சங்கிலி போடுவது, கைகளுக்கு மருதாணி இடுவது, நெற்றிக்குப் பொட்டு வைப்பது எல்லாமே உங்கள் கற்பனையைப் பொறுத்தது. உங்கள் அழகு உணர்வுக்கும், கற்பனைக்கும் இது ஓர் எடுத்துக் காட்டாக அமையும். ஃபொனலின் அளவைப் பொறுத்து பெரிய பொம்மைகளையும்கூட இதேபோல் செய்யலாம்.

மஹாலக்ஷ்மி

அம்மாவா தொணதொணப்பு?

காட்சி 1

(பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த பூங்கா. குமார் எங்கேயோ பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருக்க, பூமா வரு கிறாள்.)

பூமா : குமார்தானா! என்னது இங்கே உட்கார்ந்து எங்கேயோ வெறித் துப் பார்த்துக் கொண்டிருக்கே? வீட்டுக் குப் போகலே?

குமார் *(விரக்திச் சிரிப்புடன்)* : எனக்கு வரவர வீட்டுக்குப் போகவே பிடிக்கறதில்லே அக்கா.

பூமா *(திகைப்புடன்)* : என்ன ஆச்சு உனக்கு? மக்குப் பையனா இருந்தாலும் அம்மா அப்பா அடிப்பாங்களேன்னு பயப்படணும்/? நீதான் முதல் மூணு ரேங்கில வரவன் ஆச்சே? அப்பா அம் மாவுக்கு ஒரே செல்லப் பிள்ளை. வீடு வெறுத்துப் போகும்படி உனக்கு என்ன ஆச்சு?

குமார் : வெளியிலிருந்து பார்க்கிறவங்களுக்கு அப் படித்தான் தோணும். நீங்களெல்லாம் நினைக்கிற படி எங்கம்மா அப்பா இல்லை. அம்மா ஒரு தொண தொணப்பு. அப்பா ஒரு பத்தாம் பசலி. இரண்டு பேரும் முறை வைத்துக் கொண்டு நான் என்ன பண்ணினாலும் குற்றம் கண்டு பிடிச்சுத் திட்டிக்கிட்டே இருக்காங்க. வரவர வீடு எனக்கு வெறுத் துப் போச்சு. ஏண்டாப்பா வீட்டுக்குப் போகறோம்னு துக்கம் துக்கமா வரது அக்கா. *(கண்கலங்குகிறான்)*

பூமா : இதுக்குப் போய் கலங்க லாமா? எந்தப் பிரச்னையானாலும் தீர்க் கத்தான் ஆண்டவன் நமக்கு அறிவைக் கொடுத்திருக்கான். சிந்திச்சா, நாமே இதுக்கு ஒரு வழி கண்டு பிடிக்கலாம். எனக்கென்னவோ ஒன்றுமே இல்லா ததை நீ பிரச்னையாக்கிக்கிறயோன்னு தோணுது. அம்மா அப்பா, ரெண்டு பேருமே ஆபீசுக்குப் போறவங்க. ஆறு மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் செய்யறாங்க. சமூக சேவைன்னா முதல்ல வந்து நிக்கறாங்க. இப்படிப் பட்ட அம்மாவையும் அப்பாவையும் நீ தொண தொணப்பு, பத்தாம்பசலின்னு சொல்றதை என்னால் ஏத்துக்கவே முடி யலே குமார்!

குமார் : எங்கம்மா அப்பாவுக்குப் பரந்த மனம் இருக்கு. ஆனா, அது மற்ற வங்க விஷயத்துலதான். என் விஷயத் தில் இல்லை. இன்னிக்கு நடந்ததையே எடுத்துக்கோயேன். காலையில இட்லி யும் சட்னியும் பண்ணினாங்க. சட்டி னிக்கு அழுகியத் தேங்கா போட்டு அரைச்சிருக்காங்க. அது ஊசிப் போச்சு. இட்லியும் அதுல ஊறிப் போய், ஒரே ஊளை நாத்தம். என்னால பள்ளிக் கூடத்துல சாப்பிடவே முடி யலே. வீட்டுக்கு வந்ததும் அம்மா கிட்டே, இந்த மாதிரி அழுகிய தேங்கா யைப் போட்டு சட்டினி பண்ணுவாங்க ளான்னு கேட்டேன். நல்ல தேங்காயைப் போட்டுத்தான் அரைச்சேன். நாங்களும் அதைத்தானே கொண்டு போனோம்? நல்லாத்தானே இருந்ததுன்னு திட்டி னாங்க. *(கண்கலங்குகிறான்)*

பூமா : இதுக்காகவா இனிமே விட் டுக்குப் போகமாட்டேங்கறே?

குமார் : இந்த மாதிரி எத்தனையோ. அடுக்கிக்கிட்டே போகலாம். போன வாரம் இப்படித்தான் போர்ன்விட்டா டப்பாவைப் புதுசா வாங்கிக்கிட்டு வந்தேன். அது கட்டி தட்டிப் போயிருக்கு பழைய சரக்குன்னு திட்டோ திட்டு திட்டினாங்க. எனக்குப் போதும். நான் இனிமே வீட்டுக்குப் போகப் போறதே இல்லே அக்கா.

பூமா : வீட்டுக்குப் போகாம, எங்கே போகப் போறே?

குமார் : எங்கேயாவது, கால் போன போக்கில்.....

பூமா : அவசரப்படாதே குமார். நளையில் இருந்து நமக்குக் கோடை விடுமுறைதானே? நான் பட்டணத்துல இருக்கும் பெரியப்பா வீட்டுக்குப் போறேன். நீயும் என்னோடு வாயேன்? ஒரு மாறுதலா இருக்கும்?

குமார் : உங்க பெரியப்பா வீட்டுல யாரும் ஒன்றும் சொல்ல மாட்டாங்களா அக்கா?

பூமா : மாட்டாங்க. ரொம்ப நல்லவங்க. நான் நேராப் போய் உங்க அப்பா அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லி, அவங்களைத் தயார் பண்ணி வைக்கிறேன். நீ அரைமணி பொறுத்து வீட்டுக்குவா.

குமார் : சரி பூமாக்கா. ஆனா எங்கம்மா அப்பா சம்மதிக்கணுமே?

பூமா : அது என் பொறுப்பு. நீ அரைமணி பொறுத்து உங்க வீட்டுக்கு வா. நானும் இருப்பேன். *(போகிறாள்)*

காட்சி 2

(குமார் வீட்டுக் கூடம். குமாரின் அம்மா, பூமா. பூமா இட்டிலி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்.)

அம்மா : என்ன பூமா? இதே சட்டினிதான். காலையில் பண்ணினது. ராத்திரிவரை கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே கெட்டியாக அரைத்தேன். அழுகல் தேய்காயான்னு நீயே சொல்லும்மா?

பூமா : இல்லேயே! கொஞ்சம் கூட அழுகல் தேங்காய் நாற்றம் வரவில்லையே....! இதைப் போய் எப்படிக் கெட்



டுப் போன தேங்காய் நாற்றம்னு குமார் சொன்னான்?

அம்மா : காரணம் எனக்குத் தெரியும்மா. இட்லி கொதிக்கக் கொதிக்க சூடா இருந்துருக்கு. அதை டிபன் பாக்ஸ்ல வைச்சு மேலே சட்டினியையும் போட்டு, கப்புன்னு கெட்டியா மூடி வைச்சா என்ன ஆகும்? சூட்டுல சட்டினி தண்ணி விட்டுக்கிட்டு கெட்டுப் போயிடுது. அதுக்கு என்ன பண்ணணும்? ஆறின இட்லில, சட்டினி வைச்சுக்கலாம். இல்லே, சட்டினியைத் தனியா ஒரு சின்ன டப்பாவில் வைச்சுக்கணும். குமார் கிட்ட படிச்சுப் படிச்சு சொன்னேன். சூடான இட்டிலி தோசை மேல சட்டினியை வைச்சுக்கிட்டுப் போகாதேன்னு. எங்கே கேட்கிறான்? அம்மா அப்பா தொண தொணப்பு, பத்தாம் பசலின்னு கேலி பண்றான்.

பூமா : அந்த போர்ன்விடா டப்பா சமாச்சாரம் என்ன ஆண்ட்டி?

அப்பா *(வந்து கொண்டே)* : நான் சொல்றேம்மா. போர்ன்விடா டப்பாவில பின்னாடியோ, மூடி மேலயோ அது காலாவதியாகும் தேதியைக் குறிப்பிட்டிருப்பாங்க இல்லையா? அதைப் பார்த்துத்தானே வாங்கணும்? படிச்சுப் படிச்சு சொல்லியனுப்பினேன். கேட்கவே இல்லே. அதைக் கோட்டை விட்டான். காலாவதியான டப்பாவை வாங்

கிட்டு வந்தான். அதையும் கூட மூடியைத் திறந்து கொஞ்சம் எடுத்துத் தின்று விட்டு, மூடியைப் போட்டு அழுக்கி மூடாமல் விட்டு விட்டான். அது காத்து பட்டு கெட்டி தட்டிப் போச்சு.

அம்மா : போன வாரம் இப்படித்தான். எனக்கு உடம்பு சரியில்லை. பால் இருக்கு. உறையவிடு. பால் சூடாக இருந்தால் கொஞ்சம் ஆறும் வரை காத்திருந்து அப்புறமா உறைவிடு. அப்பத்தான் தயிர் நல்லா கெட்டியா உறையும்னு திருப்பித் திருப்பிச் சொன்னேன். இவனுக்கு ஆறும் வரை காத்திருந்து உறைவிட சோம்பல். அப்படியே கொதிக்கக் கொதிக்க உறைவிட்டிருக்கிறான். மறுநாள் தயிர் தயிராக இல்லை. சடையும் நீருமாக வாயில் வைக்க முடியாதபடி, குமட்டும் நாற்றத்துடன் இருந்தது. நாம் சொல்லுவதைக் கேட்பதே இல்லை.

அப்பா : போன மாதம் கடை வீதிக்கு போனப்போ, பழைய பேப்பர் கடையில ஏதோ ஒரு சிறுவர் நாவல் வாங்கினான். பழைய பேப்பர் கடைப் புத்தகம்னா கவனமா பார்த்து வாங்கணும். பக்கமெல்லாம் சரியா இருக்கா பார்னு படிச்சுப் படிச்சு சொன்னேன். கேட்கலே. வீட்டுக்கு வந்து படிக்கும் போதுதான் இருபது பக்கம் இல்லைன்னு தெரிஞ்சது. கண்டிக்காமல் என்ன செய்வது? தொண தொணப்பு, பத்தாம் பசலின்னு எங்களுக்குப் பட்டப் பேரு.



அம்மா : அவனிடம் உள்ள குறைபாடை அவன் நல்லதுக்காகத்தான் சொல்றோம்கறதை அவன் ஏத்துக்கக் கூடிய மனநிலையில் இல்லை. வேண்டும்னே குற்றம் சொல்றதா நினைக்கிறான். இந்த வரை, ஒடிப்போக இருந்த அவனை நீ பார்த்தயேம்மா. அதுவே நல்ல காலம்தான். எங்களை விட்டுப் பிரிந்து கொஞ்ச நாளாவது இருந்தால்தான் அவனுக்கும் நல்லது கெட்டது தெரியும். நீ தாராளமா கூட்டிக்கிட்டு போம்மா. அவனுக்காகும் செலவை நான் தந்து விடுகிறேன்.

பூமா : ஆண்ட்டி. என்னால் முடிந்த வரை குமாரை மாற்றப் பார்க்கிறேன்.

அம்மா : அந்த நம்பிக்கை எனக்கு உறுதியா இருக்கும்மா.

காட்சி 3

(சென்னையில் பூமாவின் பெரியப்பா வீட்டுக் கூடம். பூமா, முத்து, ரவி, குமார்.)

முத்து : பூமாக்கா. அம்மாவும் அப்பாவும் வெளியூர் திருமணத்துக்குப் போறேன்னு சொன்னதும், தாராளமாப் போங்க. இங்க இவங்களையெல்லாம் நான் பார்த்துக்கறேன்னு சொல்லி அனுப்பி வைச்சிட்டியே...! உனக்கு சமைக்கத் தெரியுமா?

குமார் : அக்காவுக்கு ரொம்ப அருமையா சமைக்கத் தெரியும் முத்து. பலகாரம் எல்லாம் கூடப் பண்ணுவா. பள்ளிக் கூடத்துல எங்க நண்பர்களுக்கெல்லாம் அடிக்கடி கொண்டு வந்து கொடுப்பா.

முத்து : அப்படியா! அப்ப இன்னிக்கு அக்கா சமையல்தான்னு சொல்லு. என்னக்கா சமைக்கபோறே இன்னிக்கு?

பூமா : அதை நம்ம வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கிற குமார்தான் முடிவு பண்ணணும். குமார், உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு. அதையே பண்ணிடறேன்.

குமார் : வெள்ளரிக்கா கூட்டு பண்ணி, உருளைக் கிழங்கு பொறியல் பண்ணு

அக்கா. அது போதும். இன்னும் மற்ற வேலை இருக்கே.

ரவி : மற்ற வேலையை நாம பகிர்ந்துக்குவோம். தோட்டத்துக்குத் தண்ணி பாய்ச்சி, தொட்டில தண்ணி நிரப்பறது என் வேலை.

முத்து : வீட்டைப் பெருக்கித் துடைப்பது என் வேலை.

குமார் : எல்லாருடைய சட்டை துணிகளையும் தோய்த்து உலர்த்துவது என் வேலை அக்கா.

பூமா : அப்ப, வெள்ளரிக்காயையும் உருளைக் கிழங்கையும் கடைக்குப் போய் வாங்கிக் கொண்டு வருவது யார் வேலை?

குமார் : நானே போகிறேன் அக்கா. நான் வருவதற்குள் நீங்களெல்லாம் குளித்து விடுங்கள்.

பூமா : குமார், வெள்ளரிக்காயைக் கவனமா பார்த்து வாங்கணும். ஒரு துளி நறுக்கித் தரச் சொல்லி வாயில் போட்டுப் பார்த்து, கசப்பு இல்லைன்னாதான் வாங்கணும்.

குமார் : சரி அக்கா. *(போகிறான்.)*

காட்சி 4

(பெரியப்பா வீட்டுக் கூடம். பூமா, குமார், பூமா, ரவி, முத்து.)

பூமா : எனக்கு சமையல் வேலை முடிஞ்சிட்டுது. குமார், இனிமே உன்னுடைய தோய்க்கிற வேலை ஒன்று தான் பாக்கி.

குமார் : இதோ, குளிச்சுட்டு, எல்லோருடைய துணிமணிகளையும் சோப்புப் பவுடர்ல நனைச்சிட்டு நொடியில் வறேன். எல்லோருமா சேர்ந்து சாப்பிடலாம். எனக்குப் பிடிச்ச வெள்ளரிக்காய் கூட்டு. உருளைக்கிழங்குக் கறியாச்சே?

பூமா : குமார், துணிகளை நனைக்கும் போது, ரவியோட நீல ஸ்போர்ஸ் பனியனைத் தனியா நனைக்கணும். சாயம் போகுதுன்னு சொன்னான். சேர்த்து நனைச்சால் எல்லாத்துணியிலும் சாயம் ஒட்டிக்கும்.

குமார் : சரி அக்கா.

ரவி : அக்கா, பக்கத்து வீட்டுப் பையன் நம்ம வீட்டுத் தர்மாமீட்டரைக் கேட்கிறான். அவன் தம்பிக்கு ஜுரமாம்.



பூமா : அந்தப் பையன் எதிரிலேயே தர்மாமீட்டரை எடுத்துப் பார்த்து சரியா இருக்குன்னு சொல்லிக் கொடு. அதே மாதிரி திரும்பி வாங்கும் போதும் சரியா இருக்கான்னு, அவங்க எதிரிலேயே எடுத்துப் பார்த்து வாங்கு.

ரவி : சரிக்கா.

காட்சி 5

(பெரியப்பா வீட்டுக் கூடம். பூமா, குமார், ரவி, முத்து எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.)

பூமா : என்ன குமார்! ஏன் உன் முகம் இப்படிக் கோணுது! வெள்ளரிக்காய் கூட்டு நல்லா இல்லையா?

ரவி : அக்கா, கூட்டு நல்லாத்தான் இருக்கு. ஆனா, வெள்ளரிக்காய்தான் கசந்து வழிகிறது. *(முகத்தைக் கோணுகிறான்.)*

முத்து : ஆமாம் அக்கா. வாயில் வைக்க முடியலே. கசப்பு நாக்கை என்னவோ பண்ணுது. *(முகத்தைக் கோணுகிறான்.)*

பூமா *(குமாரிடம்)* : என்ன குமார்! காயை வாங்கப் போகும் போதே எச்சரிக்கை பண்ணினேன், வாயில் போட்டுத் தின்று பார்த்து வாங்கு என்று. நீ கேட்கவில்லை. பார்த்தாயா அதன்

விளைவை? காசு பாழ், பண்டம் பாழ். நேரம் விரயம் எத்தனை இழப்பு? *(குமார் தலை குனிகிறான்)* உன்னைவிட நான் இரண்டு வயது பெரியவள். அனுபவம் உள்ளவள். அதனால், நான் எச்சரித்தது நன்மைக்காகத்தான் இருக்கும் என்று ஏன் எடுத்துக் கொள்ள மறுக்கிறாய்? ஒவ்வொன்றையும், இழப்பை அனுபவித்துப் பாடம் கற்றுக் கொண்டு தான் திருந்துவேன் என்றால் வாழ்க்கை முழுவதும் பாடமாகத்தான் இருக்கும். அறிந்தவர்கள்; அனுபவம் மிக்கவர்கள் எச்சரித்தால், அதில் ஏதோ ஒரு வழி காட்டல் இருக்கிறது என்பதை ஏற்று நடக்க வேண்டும். மறுத்தால் இழப்பு உனக்குத்தான். *(ரவி, முத்துவிடம் திரும்பி)* சரி, கூட்டைக் கொண்டு போய்க் கொட்டிவிட்டு வாருங்கள்.

(துட்டை எடுத்துக் கொண்டு போன சுருக்கில் ரவியும் முத்துவும் திரும்புகிறார்கள்.)

முத்து : அக்கா அக்கா, எல்லார் சட்டையிலும் ரவியின் ஸ்போர்ட்ஸ் பனியனின் நீலச் சாயம் பட்டிருக்கு. ஒரே நீலம் நீலமா இருக்கு.

பூமா *(குமார் பக்கம் திரும்பி)* : குமார், இதுவும் உன் கவனக் குறைவின் விளைவுதான். துணிகளை நனைக்கப் போறேன்னு நீ சொன்னப்பவே எச்சரித்தேன் பனியனை, தனியா நனைன்னு. நீ கேட்கலே. இப்போ என்ன ஆச்சுன்னு பார்த்தியா?

ரவி : அக்கா, பக்கத்து விட்டுப் பையன் தர்மாமீட்டரைத் திருப்பிக் கொண்டு வந்து தந்திருக்கிறான். அவன் எதிரிலேயே மூடியைப் பிரிச்சுப் பார்த்தேன். உடைஞ்சு போயிருக்கு.

பூமா : நாம்ப தரும்போது சரியாத் தான் இருந்தது. அவங்க வீட்டுலதான் ஏதோ ஆகியிருக்குன்னு சொல்லி, திருப்பிக் கொடு. அவங்கதான் வேற வாங்கித் தரனும்னு சொல்லு. *(ரவி போகிறான் மறுபடி குமார் பக்கம் திரும்பி)* இதைக் கவனிச்சியா? முதல்ல தர்மாமீட்டரைத் தரும்போதே எச்சரிக்கை பண்ணினேன்! ரவி கவனமா அதைப் புடிச்சுக்கிட்டான்! இல்லைன்னா என்னவாகியிருக்கும்? அப்படியே வாங்கி உள்ளே வைத்திருப்பான். எப்போ நம் வீட்டுல தர்மாமீட்டருக்கு அவசியம் ஏற்படுதோ அப்போதான் எடுத்துப் பார்ப்பாங்க. யார் உடைச்சது? யார் எப்போ வாங்கினாங்க? நம்ம வீட்டுலதான் உடைஞ்சதா? இல்லே இரவல் வங்கிப் போனவங்க உடைச்சாங்களான்னு தெரியாம ஒருத்தரை ஒருத்தர் சாடிக்கிட்டு தவிப்போம். அதெல்லாம் எதுவும் இல்லாம கவனமா இருந்ததால், நமக்கு இழப்பு இல்லாம போச்சு. இது எங்க பாட்டியோட வழக்கம். அவங்கதான் அம்மாவை இப்படி எச்சரிக்கையா இருக்கும்படி சொல்லிக் கொடுப்பாங்க. அம்மாவிடம் இருந்து நான் கத்துக்கிட்டேன். பள்ளியில் நாம கத்துக்கறது வெறும் ஏட்டுப் படிப்புதான் குமார். அனுபவப் படிப்பு என்பதுதான் வாழ்க்கைக்கு வழிகாட்டி. இதை வீட்டில் நம்முடைய பெற்றோர்கள், பெரியவர்களால் மட்டுமே நமக்குத் தர முடியும். எந்த ஒரு எச்சரிக்கையும் அவர்கள் தங்கள் அனுபவத்தால் உணர்ந்துதான் நமக்குக் கூறுகிறார்கள் என்பதை உணர வேண்டும். அதனால் நன்மை நமக்குத் தான். அதைவிட்டு விட்டு, அப்பா அம்மாவா, அவர்களுக்கு சதா என்னைக் குறை கூறுவதே வேலை, அவர்கள் பத்தாம் பசலி, பெரிய தொண தொணப்பு என்று புறக்கணித்



தால் இழப்பு உனக்குத்தான்.

குமார் *(கண் கலங்க)* : அக்கா, என் கண்களைத் திறந்து விட்டாய். நான் எந்த அளவுக்கு இருளில் இருந்திருக்கிறேன் என்பது இப்பொழுதுதான் புரிகிறது.

பூமா : அன்றைக்குக் கூட சட்டினி ஊசிப் போனதற்கு அழுகல் தேங்காய் காரணமல்ல. நல்ல தேங்காய்தான். நீதான், இட்டிலியைக் கொதிக்கக் கொதிக்க டிபன் பாக்ஸில் வைத்து அதற்குமேல் சட்டினியை வைத்து இறுக மூடிக் கொண்டு போயிருக்கிறாய். அது தான் சட்டினி ஊசிப் போச்சு.

குமார் : அப்படியா!

பூமா : கால கெடு முடிந்த போர்ன் விட்டாவை வாங்கி வந்ததோடு, மூடியையும் சரியா மூடாம விட்டதால் கட்டி தட்டிப் போயிருக்கு. அப்பா அம்மா எதைச் சொன்னாலும் நீதான் காதில் வாங்கிக்கறதே இல்லையே? உன்னைப் போன்றவர்களுக்காகவே திருவள்ளுவரும் கூட இதைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்.

குமார் : உண்மையாவா அக்கா?

பூமா : ஆமாம். இப்படி வரக்கூடிய இழப்புகளையும் துன்பத்தையும் அனுபவத்தால் அறிந்துள்ள பெரியவர்களுடன் நட்புக் கொண்டு, அவர்கள் கருத்துப்படி நடந்து நம் செயல்களை வெற்றியாக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் அழகாக! நீயானால் அவர்களின் பெருமையை



உணராது பத்தாம்பசலி, தொண தொணப்பு என்று புறக்கணிக்கிறாய்.

குமார் : அக்கா என் பெற்றோர்களின் அருமை எனக்கு இப்பொழுது தான் புரிகிறது. நான் இன்றே ஊருக்குக் கிளம்புகிறேன்.


பூமா *(சிரித்து)* : போகும்போது கொஞ்சம் வெள்ளரிக்காய் கூட்டையும் எடுத்துக் கொண்டு போ..... *(சிரிக்கிறார்கள்.)*

உற்ற நோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்
(குறள் 442)

"ஆயாதான் போயாச்சே, நீ ஏன் பல் செட்டை எடுத்து வைச்சுண்டே?"

"எந்த பொருளும் பிற்காலத்துக்கு உதவும் என்று அப்பா சொன்னாரே!"

— பெ. ஏழுமலை






"அந்தப் பெருச்சாளி கூட நீ ஏன் பேச மாட்டேங்குறே?"

"அவன், கூட இருந்தே குழி பறிப்பவன் ஆச்சே!"

— கு. அருணாசலம்



பாட்டும் பாடிய

காட்டை அடுத்திருந்த குடிசையில் ஒரு புத்திசாலிச் சிறுவன் இருந்தான். அவன் அருமையாக ஆடுவான்.

காட்டில் சுள்ளி பொறுக்கத் தனியாக வந்த சிறுவனை ஓநாய் கவனித்து விட்டது. அவனை மடக்கி விட்டு அவன். மேல் பாயத் தயாரானது.

புத்திசாலிச் சிறுவன் தனக்கு வரப் போகும் ஆபத்தை உணர்ந்து விட்டான். என்ன தந்திரம் செய்து இந்த ஆபத்தில் இருந்து தப்பலாம் என்று அவன் யோசித்தான்.

"இனிமேல் என்ன தந்திரம் பண்ணினாலும் நான் ஏமாற மாட்டேன். என்னிடம் இருந்து தப்ப முடியாது. உன் இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்" என்று உறுமியது ஓநாய்.

"என் இஷ்டதெய்வம் எது? நாட்டியம்தான்" என்றான் சிறுவன்.

"சரி. சீக்கிரம் ஆடி முடி" என்றது ஓநாய்.

"உன்னைப் பார்க்கும்போதே பயமாக இருக்கிறது. ஆடுவதற்குக் கால் வரவில்லை. அதோடு நீ கொஞ்சம் பாடினாயானால் ஆடுவதற்குத் துணிவு ஏற்படும்," என்றான் சிறுவன்.

"நான் பாடினால் யார் கேட்பது? கர்ணகடூரமாக இருக்குமே என் குரல்?"

"யார் அப்படிச் சொன்னது? உங்களுக்கு எத்தனை கம்பீரமான குரல்! உங்களைப் பிடிக்காதவர்கள்தான் நீங்கள் பாடுவதை ஊளையிடுகிறீர்கள் என்கிறார்கள். நான் ஆடும் ஆட்டத்திற்கு, உங்கள் பாட்டு குறைந்ததே இல்லை. கொஞ்சம் பாடுங்கள்" என்றான் புத்திசாலிச்



ஓநாய்!

சிறுவன்.

புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் மயங்காதவர்கள் யார்? தன் குரலைப் பாட்டு என்று சிறுவன் புகழ்ந்ததும் ஓநாய் அளவில்லாத பெருமை யடைந்தது. அதன் விளைவாக, ஓங்கிய குரலில் ஊளையிடத் தொடங்கியது.

"இன்னும் கம்பீரமாக இருக்குமே உங்கள் குரல்! குரலை அடக்கிப் பாடுகிறீர்கள்? ஓங்கிப் பாடுங்கள்" என்று ஓநாயை ஊக்கப்படுத்தினான் சிறுவன்.

ஓநாய் படுபயங்கரமான குரலில் ஊளையிட்டது. காடு முழுவதும் ஓநாயின் ஊளைச் சத்தம் கேட்டது.


'ஏன் இப்படித் தொடர்ந்து ஓநாய் ஊளையிடுகிறது!' என்று வியந்த சிறுவனின் தந்தை தடி விளக்குகளுடன் கிளம்பினார். நண்பர்கள் சேர்ந்து கொண்டனர்.

ஓநாய் இவர்கள் வந்ததைக் கவனிக்கவில்லை. ஆனால் அந்த பலே சிறுவன் கவனித்து விட்டான். அவர்களை வரவழைக்கத்தானே அவன் இப்படித் தந்திரம் செய்திருந்தான்!

எல்லோரும் தடியால் தாக்கிய பிறகுதான் ஓநாய் கண் திறந்து, நடந்திருப்பதை அறிந்தது.

"ஓநாயாக இருந்தும் கொன்று தின்பதை விட்டு விட்டு பாட்டுக் கச்சேரி வைத்ததால் ஏற்பட்ட பலனை அனுபவித்தேன்" என்று உயிரைக் காத்துக் கொள்ள ஓடியது ஓநாய்.

பொருந்தாத ஆசை பேராபத்தில் முடியும்.



தென்னூர் கா. லட்சமணன், புதுக் கோட்டை வா. மஞ்சுநாதன், விருத் தாசலம் வி. பிரபாகர் மற்றும் பலர்.

♦ "இவனெல்லாம் நண்பனா?" கதை இன்றைய மாணவர் சமுதாயத்திற்குத் தேவைப்படும் பண்பாட்டை உணர்த்தும் நல்ல கதை. காப்பியடிக்கக் காட்ட மறுப்பவர்களுக்கு அடி உதைதானே கிடைக்கிறது இப்பொழுது? - மேலப்பாதி எஸ். நாகராஜன், காரனூர் எஸ். சகஸ்ரநாமம், எட்டுக்குடி என். பொன்னம்பலம் மற்றும் பலர்.

♦ "கப்பல்கள்" சித்திர மடலில் ஆழியின் படங்கள் அழகா, தகவல்கள் அற்புதமா என்பதை அறிய முடியாது திகைக்கிறோம்! - திருவரங்கம் மா. கனகவல்லி, சேத்தூர் பா. கேசவன், வில்லிவாக்கம் இ. மீனாட்சி சுந்தரம், சென்னை கி. சிவா, விருத்தாசலம் வி. பிரபாகர் மற்றும் பலர்.

♦ நான்கே இதழ்களில்தான் வெளியானது என்றாலும் 'ரத்தினபுரி ரகசியம்' ஆவலைத் தூண்டும் விதத்தில், என்றும் மறக்க முடியாதபடி அமைந்து விட்டது. படங்கள் பேசின! - விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், திருவாரூர் த. பரதன், விருத்தாசலம் வி. பிரபாகர் - நண்பர்

படங்கள் பேசின!

கள், வண்டலூர் கா. தம்புசாமி, ஆரணி பி. ஞானமூர்த்தி, திண்டிவனம் வா. கனகவல்லி, புதுவை. ம. மஞ்சுளா, விக்கிரவாண்டி, தா. சகுந்தலா, ஆரணி, ஞானபுஷ்பம், சாமிமலை, எஸ். ஜெகதீசன் மற்றும் பலர்.

♦ இரண்டாவது பரிசுக் கதை "நல்லா வேஷம் போடறான்!" நல்ல செயல்களைச் செய்து துவள்பவர்களுக்கு ஒரு டானிக்! - அண்ணாமலை நகர் தா. தீபன், விருத்தாசலம் வா. சோலையப்பன், காரைக்குடி மா. அடைக்கலம், காட்டுமன்னார்கோயில் எம். பதுமநாபன், மேல்மலையனூர் எஸ். செந்தில்குமார், கடலூர் கி. கணேஷ்ராம், ஆரணி பி. ஞானமூர்த்தி மற்றும் பலர்.

♦ தான் பரிசு பெற்றிருந்தும், மற்றவர் கதையைப் பாராட்டியுள்ள கணேஷ்ரமின் நல்ல மனம் கோகுலம் வளர்த்து வரும் பண்புமிக்க சிறுவர் அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு! -

♦ "கப்பல்கள்" பகுதியில், "ஜலஉஷா" கப்பலை 1940 இல் நேருஜி மிதக்க விட்டதாகத் தகவல் உள்ளது. இது தவறுதானே? - அரக்கோணம் ஜி. புவனேஸ்வரி.

(தவறுதான். இது 1950 என்று இருக்க வேண்டும்.)

♦ "குருவி நடக்குமா?" எங்களால் நம்பவே முடியவில்லை! இப்பொழுது குருவிகளைப் பார்க்கும்போதெல்லாம் இவை நடக்குமா என்று ஆவலாகக் கவனிக்கிறோம்! - லால்குடி இரா. பிரதீபன், கோபி. வா. சந்திரமௌலி, சின்னதாராபுரம் தா: சந்தானலக்ஷ்மி, விருத்தாசலம் வி. பிரபாகர், ஏழுகிணறு எஸ். பாலாஜி, கச்சிராபாளையம் ஜெ. முருகன், ஆரணி பி. ஞானமூர்த்தி, மற்றும் பலர்.

♦ "அறிவியல் விருந்துக்கு வாருங்கள்!" கட்டுரை சென்னையில் உள்ள அறிவியல் காட்சி அரங்கத்தின் பெருமைகளை விளக்கியது. இனி அடுத்த முறை சென்னைக்கு வரும்போது பார்க்க வேண்டிய இடமாகிவிட்டது! - புவனகிரி தா. கமலவேலன், லால்குடி வா. கிருஷ்ணராஜா, மேலப்பாதி ராஜலக்ஷ்மி நாகராஜன், மேல்மலையனூர் எஸ். செந்தில்குமார், திருவாரூர் மு. தனகோபால், மற்றும் பலர்.

♦ "தெரிஞ்சாத்தானே?" நாடகம் விருந்தினர்களுக்குத் தெரியாது மறைத்து வைத்துத் தின்போருக்கு நல்ல படிப்பினை! எழுதிய ஆசிரியர் பெயரைப் போடவில்லையே சார்! - தூத்துக்குடி மா. தென்னரசு, தென் மதுரை வா. துளசிலிங்கம், தஞ்சை எ. சுந்தரராஜன், உடையார்குடி மோ. சுதாகர், விருத்தாசலம் வி. பிரபாகர், மற்றும் பலர்.

♦ தலையங்கம் படித்தபோது புதிய உலகுக்கு உரிய கதவுகளைத் திறந்ததுபோல் உணர்ந்தேன் - அம்பத்தூர் தா. குஞ்சிதபாதம், திருத்தணி, மா. பிரபாகர பிள்ளை, திருவாரூர் த. சாந்தி, குடந்தை ஆர். எஸ். நாதன், விருத்தாசலம் வி. பிரபாகர், மற்றும் பலர்.

♦ என்போன்ற வாசகர்களின் ஆலோசனையை ஏற்று போட்டியில் கலந்து கொள்வோர்களை உடனே தபால் கார்டில் எழுத அனுமதித்தமைக்கு நன்றி பல! - திருவாரூர் மு. தனபாலன், ஏழுகிணறு எஸ். பாலாஜி.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



HAVE A WILD, COLOURFUL TIME IN THE JUNGLE... WITH KORES!
ALL ABOARD FOR THE KORES COLOUR SAFARI!
Bring out your happy-go-lucky Kores Students' Art Materials.
Poster Colours. Water Colours. Wax Crayons, Fluorescent and Plasticrayons. Use them all...
Make your animal friends come alive!
And hear the lion roar... the elephant trumpet ...
the monkeys chatter... Go ahead! It's g-r-r-eat fun!
Kores WATER COLOURS
Kores FLUORESCENT CRAYONS
Kores STUDENTS' ART MATERIALS
Quality products from Kores (India) Ltd

வண்ணங்களில் நாட்டம் கொண்ட தாய்மார்கள் நாடுவது

ஃபுட் க்ரேடு **லிவ்பெட்**

புத்திசாலித்தனமான தேர்ந்தெடுப்பு

- நேர்த்தியானது. நவீனமானது. வசதியானது. 7 கண்ணைக் கவரும் வண்ணங்களில்.
- வைக்கப்படும் பொருளின் சுத்தம் சிறிதளவும் குறையாமல் இருப்பதால் 100% பாதுகாப்பானது.
- உங்கள் குழந்தையின் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் **லிவ்பெட்** -ஐ இன்றே வாங்கிடுவீர்.



இலவசம்!



வாங்கும் ஒவ்வொரு **லிவ்பெட்** வாட்டர் பாட்டிலுடன்.



லிவ்பெட்

சுகாதாரம். இதுதான் கண்ணைக் கவரும் **லிவ்பெட்** -ன் கண்ணுக்குத் தெரியாத தன்மை.

லிவ்யா பாலிமெர் பாட்டில்ஸ் பிரைவேட் லிட்.
மண்டையூர், புதுக்கோட்டை மாவட்டம் - 622515
போன்: 04339 418/472

ADWAVE/LPB/5010 TAM A

"The free scale scheme is valid in Tamilnadu, Pondicherry, Karnataka and Kerala upto 15-7-95 only. Hurry up, and avail this opportunity."